## நக்கல் நமசிவாயம்




Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 93 பிலவ வருடம், பங்குனி மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (03.04.2022) ஹிஜ்ரி-1443, ரமழான் - 01, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50

## சித்தாலேபவின் ஸ்தாபகர் விக்டர் ஹெட்டிகொட காலமானார்



'சித்தாலேப ஆயுர்வேத வைத்தியர்' என அழைக்கப்படும் சித்தாலேபவின் ஸ்தாபகரான விக்டர் ஹெட்டிகொட காலமானார்.

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



போன கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டாபயவோடு பேசப்போக முதல்...

ஒருசில விடயங்களை வலியுறுத்தி அதை முதலில் கோட்டாபய அரசு செய்யவேண்டும் என இடித்துரைக்க சொல்லியிருந்தார் மணியத்தார்.

மணியத்தார் சொன்னது சம்பந்தரின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்ததா எண்டதுக்கு அப்பால்;

தமிழரசுக்கட்சி ஒருசில நல்லெண்ண சமிக்ஞைகளை கோட்டாபய காட்டவேணும் எண்டு கேட்டிருக்கினம். நல்ல முன்னேற்றம்.

இதைத்தான் ரெலோவும் கேட்டது. ஆனால், அவை பேச்சுவார்த்தைக்கு முன்னம் காட்டவேணும் எண்டு கேட்டவை. ஆனால் கோட்டா காட்டேல்ல!

சம்பந்தருடனான பேச்சுவார்தையின் பின்னரும் கூட இதுவரைக்கும் எந்த நல்லெண்ண சமிக்ஞைகளையும் கோட்டாபய காட்டவில்லை.

காட்டுவாரா? எண்டு கேட்டால்;

வாய்ப்பு இல்லை என்பதே யதார்த்தம்.

முக்கியமாக புலம்பெயர் தேசத்தில் வாழும் தமிழர்களை இலங்கைக்கு முதலீடு செய்ய அழைக்கும் கோட்டாபய;

அவர்கள் மீது கடந்த காலத்தில் ஏவிவிட்ட "பயங்கரவாத" தடைச்சட்டத்தை அப்படியே வைத்திருக்கிறார்.

தெரியாமத்தான் கேக்குறம்!

வெளிநாட்டு தமிழ்ச்சனம் என்னண்டு நம்பி சிறிலங்காவுக்கு வந்து பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்யும்?

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலதையும் கறுப்புப் பட்டியலில் இணைச்சு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடைசெய்து வைச்சிருக்கினம்.

பிறகு என்னண்டு நம்பி சனம் கட்டுநாயக்காவில் டொலரைக் கொண்டு உள்ள வரும்?

07 ஆம் பக்கம்

# ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் பொது நிகழ்வுகள் இரத்து!

**மக்கள் எதிர்ப்பினால் வந்த முடிவு**

அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதை தவிர்த்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிவாயு, எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி காரணமாக, பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்பதால், விழாக்கள் மற்றும் பேரணிகளில் பங்கேற்பதை இவர்கள் தவிர்த்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 ஆம் பக்கம்

## கொழும்பு - பஹ்ரைன் விமானசேவை நிறுத்தம்

**- ஸ்ரீலங்கன் அறிவிப்பு -**

எதிர்வரும் மே12ஆம் திகதி முதல் சில விமான சேவைகளை இடைநிறுத்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முடிவெடுத்துள்ளது.

அதன்படி கொழும்புக்கும், பஹ்ரைனுக்கும் இடையேயான யூ.எல்.201 மற்றும் யூ.எல் 202 விமானங்களை நிறுத்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

## அரசிலிருந்து இ.தொ.கா. வெளியேறும்

**- ஜீவன் தொண்டமான்**

02 ஆம் பக்கம்



## இலங்கையை கடன் நெருக்கடியில் சிக்க வைக்கிறது இந்தியா!

**முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க**



இந்தியா நல்லெண்ணம் இல்லாமல் கடன்களை வழங்குவதாகவும், இலங்கைக்கு மிகப்பெரும் கேடு விளைவிக்கும் நாடாக இந்தியாவைக் குறிப்பிட முடியும் எனவும், இலங்கையின் ஆணவமான முடிவுகளினாலேயே இந்த நிலை உருவானது எனவும் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

## ஜனாதிபதி ஆஸ்தான சோதிடரின் இல்லம் மக்களால் சுற்றிவளைப்பு



**அநுராதபுரத்தில் நேற்று பரபரப்பு**

ஜனாதிபதி கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரான ஞானாக்காவின் ஆலயத்தை பொதுமக்கள் நேற்று சுற்றி..

02 ஆம் பக்கம்

## பதவியை துறந்தார் ரொஷான் ரணசிங்க

**இராஜாங்க அமைச்சுக்கும் மாவட்ட அமைப்பாளர் பதவிக்கும் குட்பை சொன்னார்**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சருமான ரொஷான் ரணசிங்க தனது இராஜாங்க அமைச்சர் மற்றும் மாவட்ட அமைப்பாளர் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

02 ஆம் பக்கம்

## அமுலானது அவசரகாலச்சட்டம்; விசேட வர்த்தமானியும் வந்தது!

அதிசிறப்பு வர்த்தமானியொன்றின் மூலம் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில், அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கம்

## அரசாங்கத்தில் இருந்து விலகத் தயாராகிவரும் சுதந்திரக்கட்சி

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி
SRI LANKA FREEDOM PARTY

மக்களின் பிரச்சினைகளுக்குத் துரிதமாக தீர்வுகளை வழங்க முடியாது என்றால், நாடாளுமன்றத்ததில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, இடைக்கால அரசாங்கத்தை அமைத்தேனும் தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கம்

## அரசியல் நெருக்கடியை சமாளிக்க நாடாளுமன்றம் ஒத்திவைப்பு?



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை சமாளிக்கும் வகையில், நாடாளுமன்ற கூட்டத்தொடரை இடைநிறுத்துவது அல்லது குறுகிய காலத்திற்கு நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

02 ஆம் பக்கம்






# நிதி மோசடி குற்றத்தை ஒப்புக்கொண்ட அமெரிக்காவிற்கான முன்னாள் தூதுவர் ஜாலிய

இலங்கை அரசாங்கத்திடம் மோசடி செய்ததாக அமெரிக்காவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய அமெரிக்க நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

தூதரகத்திற்காக புதிய கட்டடமொன்றை பெற்றுக்கொள்ளும் போது மோசடி செய்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு வாஷிங்டன் டி.சி -இலுள்ள புதிய தூதரக அலுவலகக் கட்டடத்தை கொள்வனவு செய்யும்போது இலங்கை அரசாங்கத்தின் 3,37,027 அமெரிக்க டொலர்களை மோசடி செய்தமை தொடர்பில் முன்னாள் தூதுவர் தவறை ஒப்புக்கொண்டதாக அமெரிக்க நீதித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேர்ஜினியா பிராந்தியத்தில் ஆர்லின்டனில் வசிக்கும் 61 வயதான ஜாலிய விக்கிரமசூரிய 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோவிற்கான இலங்கைத் தூதுவராக செயற்பட்டார்.

கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் அவர் தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளதுடன், இந்த குற்றச்சாட்டிற்காக ஆகக்கூடியது 5 வருட சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட முடியுமென அமெரிக்க நீதித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னாள் தூதுவருக்கு ஜூலை 20 ஆம் திகதி தண்டனை விதிக்கப்படவுள்ளது. அமெரிக்காவிற்கான முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவை கைதுசெய்வதற்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி பகிரங்க பிடியாணை பிறப்பித்திருந்தது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர் பொலிஸ் நிதிக்குற்றவியல் விசாரணை பிரிவினரால் கைதுசெய்யப்பட்டதுடன், பின்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சைகளுக்காக அமெரிக்காவிற்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கோட்டை நீதவான் நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு ஜாலிய விக்ரமசூரியவிற்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அவருக்கு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இந்நிலையில், 2018 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி, அவரை கைதுசெய்வதற்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் பகிரங்க பிடியாணையை பிறப்பித்தது.

# பாடசாலைகளுக்கு முன்கூட்டிய விடுமுறை வழங்கப் பரிந்துரை

நீண்ட மின்வெட்டு காரணமாக நாளை 4 ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, கல்வி அமைச்சிற்குப் பரிந்துரை செய்துள்ளது.

இதற்கு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்தார்.

அடுத்த வாரமளவில் டீசல் கிடைக்கவிருப்பதால், எதிர்வரும் நாட்களில் நீண்ட நேரத்திற்கு மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவையேற்படாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி ஆரம்பம்

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் மீண்டும் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

டீசல் கையிருப்பு கிடைக்கப் பெற்றதையடுத்து மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதாக மின்சார சபையின் பதில் பொது முகாமையாளரான ரொஹந்த அபேசேகர தெரிவித்தார்.

லங்கா இந்தியா ஒயில் நிறுவனத்துடன் (எல்.ஐ.ஓ.சி.) செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, கெரவலப்பிட்டி அனல்மின் நிலையத்திற்கு இதுவரை 6,000 மெட்ரிக் தொன் டீசல் மின்சாரம் உற்பத்தி செய்யக் கிடைத்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையால் அனல்மின் நிலையம் அண்மையில் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







## ஆளுங்கட்சி அரசியல்...

கடந்த வாரமும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்கவிருந்த பல நிகழ்வுகள் மற்றும் கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமையல் எரிவாயு, எரிபொருள், மின்சார தட்டுப்பாடு காரணமாக பொதுமக்களின் கடும் எதிர்ப்பை அரசு எதிர்கொண்டுள்ளதாகவும், அமைச்சர்கள், எம்.பிக்கள் விழாக்களில் கலந்துகொள்ளும்போது அவர்களும் தனிப்பட்ட முறையில் எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் அவர்களுடன் சேரமாட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, அரசாங்கத்தின் சார்பில் தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்பதை சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவாதங்களில் கலந்துகொண்டு பேசுவதற்கு ஒன்றுமில்லை எனக் கூறி தொலைக்காட்சி உரையாடல்களை இவர்கள் தவிர்த்து வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை அரசாங்கத்தினால் நடத்தப்படவுள்ள மே தினம் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் நடைபெற்று வரும் ஆரம்பக்கட்ட கலந்துரையாடலில் சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## அரசிலிருந்து இ.தொ.கா...

- க.கிஷாந்தன் -

"அமைச்சு பதவிகள் அல்ல, மக்களின் தீர்மானமே காங்கிரஸுக்கு முக்கியம். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசிலிருந்து இ.தொ.கா. வெளியேறும் " - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று (02.04.2022) அறிவித்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியால் தலவாக்கலையில் முன்னெடுக்கவுள்ள போராட்டத்தை தமது கட்சி எதிர்க்கவில்லை எனவும், அதனை ஆதரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று (02.04.2022) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு,

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும், மக்களை பாதுகாப்பதே எமது முதன்மை நோக்கமாகும். அந்தவகையில் ஜனாதிபதியின் வீட்டுக்கு செல்லும் மிரிஹான வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்கள் மீது நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தவறான செயலாகும். என்னதான் வதந்திகள் பரவினாலும், முறையான விசாரணையின்றி மக்களை கைதுசெய்து, துன்புறுத்துவது நியாயம் அல்ல.

சஜித் பிரேமதாச தலைமையில் தலவாக்கலையில் இன்று போராட்டமொன்று இடம்பெறவுள்ளது. இந்த போராட்டத்துக்கு காங்கிரஸ் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. ஏனெனில் சமையல் எரிவாயு, எரிபொருள் இன்றி மக்கள் இன்று துன்பப்படுகின்றனர். இதற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர். அதன் பின்னணியில் எந்தக் கட்சி இருந்தாலும் நாம் ஆதரவுதான்.

மிரிஹான போராட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும் கண்டிக்கின்றோம். அது நியாயமற்ற செயலாகும். மக்களுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசுக்கு எமது எதிர்ப்பை காட்டிவிட்டோம். சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்தோம். ஆனால், அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதால்தான் இ.தொ.கா. இப்படி செயற்பட்டது என சிலர் வதந்தி பரப்பினர்.

இராணுவத்துக்காக 10 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகம் அமையவுள்ள இடமும் உள்ளடங்குகின்றது. இதனை நாம் எதிர்த்தோம்.

மக்களுக்கு வேலை நடக்க வேண்டும், நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு சார்பான முடிவையே நாம் எடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல்போனால் அரசிலிருந்து காங்கிரஸ் வெளியேறும். இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும்" - என்றார்.

## கொழும்பு-பஹ்ரைன்...

இதேவேளை கொழும்புக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான விமான சேவைகள் கடந்த 28ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப்படுவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஆஸ்தான...

வளைத்ததால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

ஞானாக்கா நடத்தி செல்லும் காளி ஆலயத்தில் ஆன்மிக அமைதி தேடி கோட்டாபய அடிக்கடி அங்கு சென்று வருவது வழமை.

இந்நிலையில், ஜனாதிபதி ஆலயத்திற்கு வரவுள்ளார் என்ற தகவலின் பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அங்கு திரண்டனர்.

இதனால் சம்பவ இடத்திற்கு ஏராளமான பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

## அமுலானது அவசரகாலச்...

நாட்டில் நிலவும் நிலைமை, பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பேணுதல், சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விநியோகங்கள், சேவைகளைப் பேணுதல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## பதவியை துறந்தார்...

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அவர் எழுதியுள்ள அவர், இயற்கை உரங்களை பயன்படுத்தியமையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென அதில் வலியுறுத்தியுள்ளார்.

தமது பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் முன்வைக்கக் கூட சந்தர்ப்பம் வழங்காமை குறித்து மிகுந்த வருத்தமடைவதாகவும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சித்தாலேபவின் ஸ்தாபகர்...

இறக்கும்போது அவருக்கு 84 வயதாகும். சித்தாலேப குழுமத்தின் தலைவர் என அவர் அழைக்கப்படுவதுடன், ஆரம்பத்தில் அவரது தந்தை ஹென்ட்ரிக் ஹெட்டிகொடவின் ஊடாக ஆயுர்வேதத்தில் அவர் பயிற்சி பெற்றார்.

ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பண்டைய ஆயுர்வேதத்தைக் கற்றதன் மூலம் தனது அறிவை வளப்படுத்திக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடன் நெருக்கடியில்...

தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஊடகமொன்றிடம் கருத்துத் தெரிவித்த அவர், இந்த நெருக்கடியில் இந்தியா தொடர்ந்தும் எம்மை சிறையில் அடைக்கும் எனத் தெரிவித்தார்.

"எங்களுக்கு டொலர்கள் தேவை. இது சட்டபூர்வமானதா அல்லது சட்டவிரோதமா என்பது டொலர்களில் கூட குறிப்பிடப்படவில்லை. இந்த ஆண்டு ஜூலையில் ஒரு பில்லியன் டொலர் கடனை அடைக்க வேண்டும். அதைக் கூட நாடு செலுத்த முடியாது. எனவே, எங்கிருந்தோ டொலர்களை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நாட்டை பாதுகாக்க டொலர்களை கொண்டு வர வேண்டும். நாட்டின் ஒரு துண்டை உடைத்து பணம் எடுப்பதால் பயனில்லை. இந்தியா எமக்கு மிகப்பெரும் தீங்கு செய்யும் நாடு. அவர்கள் நல்ல நம்பிக்கையுடன் கடன் கொடுக்கிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அதனால்தான் ஓராண்டு செலுத்தும் அடிப்படையில் கடன் வழங்கப்பட்டது. ஏனென்றால், ஒரு வருடத்தில் மீண்டும் நாம் மாட்டிக்கொள்வோம் என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க முடியாது.

இன்று நாட்டை அறிஞர்கள் அல்லது பொருளாதார நிபுணர்கள் நடத்துவதில்லை. திருட்டு, மோசடி போன்ற புரிதல் இல்லாத ஒரு கூட்டத்தால் நாடு முன்னோக்கி கொண்டு செல்லப்படுகிறது. அவர்களின் ஆணவமான முடிவுகளால் தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது" - என்றார் அவர்.

## அரசியல் நெருக்கடியை...

அவசர சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கான தேவைகள் இல்லை எனக் கூறி, புத்தாண்டு விடுமுறையை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க முடியும் என அரச உயர் மட்டத்தை சேர்ந்த சிலர் யோசனையை முன்வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே நாடாளுமன்றத்தில் தனியாக 113 பெரும்பான்மை பலத்தை உருவாக்கும் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் தலைமையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக கடந்த நாட்களில் கொழும்பில் மூன்று இடங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீரவங்ச தரப்பினர் எதிர்க்கட்சியின் பிரதான அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர். தமக்கு இருக்கும் பெரும்பான்மை பலத்தை சபாநாயகருக்கு எழுத்து மூலமாக காட்டி, அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர இவர்கள் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிகிறது.

## அரசாங்கத்தில் இருந்து...

கட்சியின் இந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றால், மீண்டும் மத்திய செயற்குழு கூடி அரசாங்கத்தில் இருந்து விலகுவது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் எனவும் சுதந்திரக் கட்சி கூறியுள்ளது.

இந்த கோரிக்கை அடங்கிய கடிதத்தை ஜனாதிபதி அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. மக்கள் தற்போது பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவிட்டால், மிகப் பெரிய மக்கள் எதிர்ப்பு உருவாகும் எனவும் சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கட்சியின் தலைவரான மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கட்சியின் தலைமையகத்தில் கூடியது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை மற்றும் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச, செயற்குழு உறுப்பினர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க முடியாது என்ற விடயத்தை வலியுறுத்தினர்.

எனினும், இது தொடர்பான இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பு கட்சியின் தலைரான மைத்ரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டது. ஒரு வாரத்திற்குள் மைத்ரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டை வெளியிடுவார் எனக் கூறியுள்ளார்.

அதேவேளை ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன,

நாட்டில் காணப்படும் அரசியல் நிலைமை தொடர்பாக எமது நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகளை உள்ளடக்கி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பும். அதன் பின்னர் சில முக்கியமான முடிவுகளை எடுக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.







நாட்டில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசுக்கு எதிராக புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியினரால் யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விலை ஏற்றங்கள் மற்றும் கோட்டாபய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. **(யாழ். நிருபர்)**

# த.மு.கூ. பேரணி திட்டமிட்டபடி தலவாக்கலையில் இன்று

## தலைவர் மனோ கணேசன் அறிவிப்பு

தலவாக்கலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பேரணி இன்று ஞாயிறன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். கூட்டணித் தலைவர்களுடன் சிறப்பு அதிதிகளாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ராஜித சேனாரத்ன எம்.பி. ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர். இதில் அணிதிரண்டு கலந்துகொள்ளும்படி அனைவரையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அழைக்கிறது. "கூட்டம் கூடும்" உரிமையும், "கருத்துக் கூறும்" உரிமையும் எங்களுக்கு உண்டு. அதில் கைவைக்க முயல வேண்டாம் என அரசுக்கு நாம் கூறி வைக்க விரும்புகிறோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, "கூட்டம் கூடும்" உரிமை, "கருத்துக் கூறும்" உரிமை, ஆகிய உரிமைகளை, "பொது ஒழுங்குக்குக் குந்தகம் விளைவிக்காத" முறையில், அனுபவிக்க, பயன்படுத்த, ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமையை அரசியலமைப்பு உறுதி செய்துள்ளது. அந்த உரிமைகளைப் பாதுகாக்க, முன்னெடுக்க, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு "கடமையும், உரிமையும்" இருக்கின்றன என்பதை அரசாங்கமும், பொலிஸ் மா அதிபரும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாடு முழுக்க சுயேச்சைக் குழுக்களால் நாளை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு நிகழ்வுகளுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் தொடர்பில்லை. அவை கட்சி கட்சி சார்பற்ற முறையில் பொதுமக்கள் குழுக்களால் நடத்தப்படும் நிகழ்வுகள். அவை சிறப்பாக நடைபெற நாம் வாழ்த்துகிறோம். எமது பேரணி இரண்டு வாரங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டதாகும். அது ஞாயிற்றுகிழமை 3ஆம் திகதி ஒரு மணி முதல் தலவாக்கலையில் திட்டமிட்டபடி நடக்கும். பொதுமக்கள் பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்தி ஜனநாயக உரிமைகளை முடக்க அரசாங்கம் முயலக்கூடாது. சட்டம், ஒழுங்குக்கு முரணற்ற முறையில் எமது அரச எதிர்ப்பு பேரணி நடைபெறும். ஜனநாயகத்துடன் விளையாட வேண்டாம் என அரசுக்கும், பொலிஸுக்கும் கூறி வைக்க விரும்புகிறோம் - என்று குறிப்பிட்டுள்ளார் மனோ.

# யாழில் தனியார் விடுதி தடாகத்தில் சடலம் மீட்பு



**- யாழ். நிருபர் -**

யாழ்ப்பாண நகர் பகுதியிலுள்ள பிரபல தனியார் விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த 6 பேர் குறித்த தனியார் விடுதியில் நேற்று முன்தினமிரவு தங்கியிருந்து, இரவு 1 மணியின் பின்னர் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றிருந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை விடுதி நிர்வாகத்தினர் நீச்சல் தடாகத்தில் இளைஞன் ஒருவரின் சடலம் மிதப்பதை அவதானித்து குறித்த விடயம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு அறிவித்திருந்த நிலையில், யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

எனினும், உயிரிழந்தவருடன் மேலும் பலர் நீராடியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் கொலையா அல்லது இயற்கை மரணமா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.













# "நாங்க போற? நீங்க வாறா?"

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் போராட்டம்

**- பாறுக் ஷிஹான் -**


மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட "நாங்க போற? நீங்க வாறா?" போராட்டம் எழுச்சிபூர்வமாக வெள்ளிக்கிழமை (1) மாலை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சந்தியிலிருந்து ஆரம்பமான இப்போராட்டம் அட்டாளைச்சேனை நகரப்பகுதி வரை ஊர்வலமாக பல்வேறு சுலோகங்களை தாங்கிச் சென்றதைக் காண முடிந்தது.

சுமார் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இதன்போது குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

குறித்த போராட்டம் காரணமாக அக்கரைப்பற்று கல்முனை மற்றும் அருகிலுள்ள பல வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனை சீர் செய்யும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டனர். அத்துடன் இப்பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும், இப்போராட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தவம், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.ரகீப், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# இயலாமையின் உச்சம்!

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டு தன்னெழுச்சியான மக்கள் போராட்டம் இடம்பெற்றிருக்கிறது. எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு வரிசையிலிருந்து மக்கள் நொந்துபோனார்கள்.

அடுத்தடுத்து ஏற்பட்ட விலையேற்றத்தை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இறுதியாக இருளில் இருக்க வேண்டிய சூழ்நிலை, அவர்களின் பொறுமையை எல்லைமீறச் செய்தது.

அதன் விளைவுதான் கடந்த வியாழக்கிழமை மிரிஹானவில் இடம்பெற்ற போராட்டம்.

தோல்வியடைந்த அரசாங்கத்துக்கு எதிராக இயல்பாக சேர்ந்த மக்கள் கூட்டம் கிளர்ந்தெழுந்து மிகப்பெரிய எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

போராட்டம் தீவிரமடைந்தபோது விசேட அதிரடிப்படையினரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் அங்கு வரவழைக்கப்பட்டனர். ஜனநாயக ரீதியாக மக்கள் எழுச்சி இடம்பெறும்போது எதற்காக அவர்கள் அங்கு வரவழைக்கப்பட்டார்கள் என்று தெரியவில்லை.

நேரம் செல்லச் செல்ல பெருந்திரளானோர் போராட்டத்தில் இணைந்துகொள்ள ஆரம்பித்தனர். இதனை நிறுத்தமுடியாது எனத் தெரிந்துகொண்ட பாதுகாப்புத் தரப்பு கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டது. அதன்பின்னரே அங்கு வன்முறைகள் இடம்பெற்றன. பொலிஸாரே போராட்டக்காரர்கள் மீது முதலில் தாக்குதலை மேற்கொண்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளார்கள்.

போராட்டம், வன்முறையில் ஈடுபட்டமைக்காக 53 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். பொலிஸாரின் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளார்கள். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட ஊடகவியலாளர் உள்ளிட்ட பலர் தாக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனநாயக நாட்டில் உரிமைக்காக போராடிய மக்களுக்கு அரசாங்கம் தன் உச்சகட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. மக்களுக்குத் தடையின்றி பொருட்களையும், சேவைகளையும் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு வழங்காவிட்டாலோ, அல்லது அதற்கு தடைகளை ஏற்படுத்தினோலோ அது, மக்களின் உணவு உரிமையை மீறும் செயலாகும்.

இவ்வாறு உணவு உரிமையை மீறிய அரசாங்கம், அதனைத் தட்டிக்கேட்க முற்பட்ட மக்களை மிக மோசமான முறையில் நடத்தியமை மனித உரிமையை மீறும் செயலல்லவா?

இது சிங்கள தேசம், இங்கே அதிகாரம் சிங்களவர்களுக்கே உண்டென மார்தட்டிக்கொண்டு, இனவாதம் என்ற ஆயுதத்தை மாத்திரம் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு அதே இன மக்கள் சாட்டையடி கொடுத்திருக்கிறார்கள்.

இதுவே தமிழர் பிரதேசத்தில் ஆட்சிக்கு எதிராக சிறு போராட்டம் இடம்பெற்றிருந்தால் நிலைமை எப்படியிருக்கும்? பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு, பெற்றோர், உறவினர்கள் என அத்தனை பேரையும் புலனாய்வுத்துறையினர் வாட்டி வதைத்திருப்பார்களல்லவா?

இத்தனைக்கும் தமிழ் மக்கள், யுத்த காலத்தின் பின்னர் இத்தனை ஆவேசத்தை அரசின் மீது காட்டியதில்லை.

போராட்டம் நிறைவடைந்து ஒருசில மணித்தியாலங்களிலேயே வன்முறையின் பின்னணியில் அடிப்படைவாதிகள் இருப்பதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கைவிட்டது.

எந்தவொரு விசாரணையும் நிறைவடையாமல், அடிப்படைவாதிகள்தான் காரணம் என ஜனாதிபதியால் எவ்வாறு தீர்மானத்துக்கு வர முடியும்? ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட பதம் என்பதாலும் அதனால் சிங்களவர்களை இலகுவில் வசப்படுத்திவிடலாம் என்ற எண்ணத்திலும் இந்தப் பதம் பயன்படுத்தப்பட்டதா?

இங்கே யாரை திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறான பதங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன? நாட்டில் மிக மோசமான ஆட்சிக்கு எதிராக, தங்களை பட்டினிச்சாவை நோக்கித் தள்ளிவிட்ட ஆட்சியாளர்களைக் கண்டித்து மக்கள் தன்னெழுச்சியாக போராட்டத்தை முன்னெடுக்கின்றபோது அதனை வேறு வகையில் சித்திரிக்க முயல்வது எத்தனை கோழைத்தனம்?


மக்களின் எழுச்சியை, போராட்டத்தின் தீவிரத்தை திசைமாற்ற இவ்வாறு வேறுவகையில் மடைதிறப்பது இந்த அரசாங்கத்துக்கு ஒன்றும் புதிதல்ல. எனினும், ஜனநாயகத்தின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் இந்த நெருக்கடியான நிலைமைக்கு யார் காரணம்? மணித்தியாலக் கணக்கில் மக்கள் தெருக்களில் இருக்கிறார்கள். பல மணிநேரமாக இருளில் இருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கானோர் தொழிலை இழந்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் நாளாந்த வருமானமின்றி இருக்கிறார்கள்.

இப்படி உருவாகக் காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி, தங்கள் மீதுள்ள குறைபாட்டை மறைக்க மக்களை கைநீட்டுவது இயலாமையின் உச்சமாகும்.

இனி மக்கள் புரட்சி வெடிக்கும். அது இப்போதுள்ள, இனி வரப்போகும் ஆட்சியாளர்களுக்குப் பாடமாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

## சண்டே சாம்பார்



* கொழும்பு அரசியலில் திருப்பங்கள்
* இடைக்கால அரசு அமைக்கப்படுமா?
* நாடளாவிய ஊரடங்கை அமுல்படுத்தக் கோரிய எம்.பிக்கள்
* மேலும் பல அமைச்சர்கள் இராஜினாமா செய்யத் திட்டம்
* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கோட்டாவின் பக்கம் தள்ளிய இந்திய அமைச்சர் ஜெய்ஷங்கர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்தின்மீது கடந்த வியாழனன்று இடம்பெற்ற முற்றுகை நடவடிக்கையின் பின்னர் கொழும்பு அரசியலில் ஒருவித நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இல்லம் மக்களால் முற்றுகையிடப்பட்ட தினத்தன்று அந்த வேளையில் ஜனாதிபதி வீட்டில் இருக்கவில்லையென்று தகவல்கள் சொல்கின்றன. அன்றைய தினம் மாலை அமெரிக்கவுக்கான முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய இல்லத் திருமண நிகழ்வு கொழும்பு ஷங்கிரி லா ஹோட்டலில் நடந்துகொண்டிருந்தது. அரசில் முக்கிய பதவிகளை வகிக்கும் ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் அதில் கலந்துகொண்டிருந்தனர்.


இந்த முற்றுகை இடம்பெற்ற தினத்தின் பின்னர் மறுநாள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்திய ஜனாதிபதி, இனிவரும் காலங்களில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த குறைந்த பலத்தையே பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். இதற்கிடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வேளையில் மிரிஹான சென்ற பிரதமர் மஹிந்த, அமைச்சர் நாமல் உட்பட்டோர் பாதிப்புகளை பார்வையிட்டனர். சுமார் 4 கோடி ரூபா வரையான சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அங்கு பிரதமரிடம் பாதுகாப்புத் தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதியின் இல்லத்தின் முன்னர் நடந்த ஆர்ப்பாட்டத்தின் செய்திகளை சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களும் பாதுகாப்புத் தரப்பினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.ஆர்ப்பாட்டக்காரர்கள் அல்லாத சிலர் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்திருக்கலாமென செய்திகள் சமூக ஊடகங்களில் பரவின. அது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) இந்த விசாரணைகளை நடத்திவருகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் பக்கமுள்ள அவர்களின் உறவினர்களான அரசியல்வாதிகள் பொதுநிகழ்வுகளுக்கு செல்வது நிறுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் பாரியார் நேற்று முன்தினம் நுவரெலியா வசந்தகால நிகழ்வுகளின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு செல்லவிருந்தார். ஆனால், அங்கு மக்களின் எதிர்ப்பு வந்ததன் காரணமாக அவரின் பயணம் இடைநிறுத்தப்பட்டது.

அதேபோல அமைச்சர் நாமல் பண்டாரவளைக்கும், இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ மொனராகலைக்கும் செல்லவிருந்த பயணங்கள் நிறுத்தப்பட்டன. அதேசமயம் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல்வாதிகளின் பொது நிகழ்வுகள், வைபவங்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன .

ஆளுங்கட்சியின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் தொலைக்காட்சி விவாதங்களுக்கு செல்வதை கடந்த சில நாட்களாக தவிர்த்துவரும் அதேசமயம் மே தின கூட்ட ஏற்பாடுகளுக்காக சிரேஷ்ட அமைச்சர்கள் கூட்டிய கூட்டங்களையும் ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலர் புறக்கணித்திருப்பதாக அறியமுடிந்தது.



பொருளாதார நெருக்கடிகளால் கோபமடைந்துள்ள மக்கள் இப்போது அதனை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளதால் ஆளுங்கட்சியின் அரசியல் பிரமுகர்கள் மக்களை எதிர்கொள்ள அச்சப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி இல்ல முற்றுகையின் பின்னர் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களின் இல்லங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆளுங்கட்சியின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது. மிரிஹானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் அது தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு சுமார் 150 ஆசனங்கள் உள்ள போதிலும், சுமார் 75 உறுப்பினர்களே இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. 11 கட்சிகளின் எம்.பிக்களும் இதில் கலந்துகொள்ளவில்லை.

நாடு முழுவதும் ஊரடங்கு சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தி நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஜனாதிபதியிடம் இந்த சந்திப்பின் போது கோரிக்கை விடுத்துள்ளது. இல்லையேல் நாடளாவிய ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை மக்கள் சுற்றி வளைத்து மோதலை ஏற்படுத்த முயற்சிப்பார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி அதற்கு உடன்படவில்லை. ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் இறங்கி போராட்டம் நடத்த முற்பட்டால் என்ன நடவடிக்கையினை எடுப்பது என இங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார் ஜனாதிபதி. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவது தீர்வாகாது எனவும், டொலர் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காண்பதே ஒரே தீர்வு எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

### சுதந்திரக்கட்சியின் முடிவு

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறத் தீர்மானித்திருக்கிறது.

அக்கட்சியின் மத்திய குழு நேற்று முன்தினம் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள நிலைமையில் மக்களிடம் எவ்வாறு செல்வது என்பதை ஆராய்ந்த மத்திய குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த மத்தியகுழுவின் கூட்டம் நடந்த தினத்தன்று சுதந்திரக்கட்சியின் பதுளை எம்.பி. சாமர சம்பத் தசநாயக்க சென்ற வாகனம் மீது வெல்லவாயவில் முட்டைவீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இப்போதுள்ள நிலைமையில் காபந்து அரசாங்கமொன்றை தற்காலிகமாக அமைக்க வேண்டும். அப்படி அமைக்காத பட்சத்தில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவது என்ற முடிவை எடுத்திருக்கிறது சுதந்திரக்கட்சி.

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கான நேரத்தை எதிர்பார்த்திருந்த சுதந்திரக்கட்சிக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக இப்போது நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதனை மைத்ரிபால நன்கு பயன்படுத்தப்போகிறார் என்பது உறுதியாகியிருக்கிறது.

### இடைக்கால அரசுக்கு கோரிக்கை

இதற்கிடையில் இடைக்கால அரசொன்றை உடனடியாக நிறுவுமாறு தற்போதைய அரசாங்கத்திற்கு ஆதரவளித்த 11 அரசியல் கட்சிகளின் கூட்டணியும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்த விமல் வீரவங்ச எம்.பி, இந்த இடைக்கால அரசை நிறுவ ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும், விமல் அணியும் இப்போது ஒரே கோரிக்கையை முன்வைத்திருப்பதன் மூலம் அந்த அணிகள் நெருங்கிச் செயற்படுவது தெரிகிறது.

ஜனாதிபதியின் வீடு முற்றுகையிடப்பட்ட தினத்தின் மறுநாள் வெள்ளிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்ரியின் கொழும்பு இல்லத்தில் ஒன்று கூடிய விமல், கம்மன்பில உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாகப் பேசினர்.

இடைக்கால அரசை அமைக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பது, ஜனாதிபதி அதற்கு பதிலளிக்காத பட்சத்தில் நாடாளுமன்ற எம்.பிக்களை ஒன்றுதிரட்டி நாடாளுமன்ற பெரும்பான்மையினை கைப்பற்றி ஆட்சியமைப்பது என்ற இரண்டு திட்டங்கள் இதன்போது விரிவாக பேசப்பட்டுள்ளன. எம்.பிக்களுடன் பேச்சு நடத்தும் பொறுப்பு கம்மன்பிலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கம்மன்பில தமிழ் அரசியல்வாதிகள் உட்பட பல முக்கியஸ்தர்களுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

சித்திரை புதுவருடத்தின் பின்னர் நாடாளுமன்றம் கூடும்போது, 113 எம்பிக்களை ஒன்றுதிரட்டி சபாநாயகரிடம் காட்டுவதற்கு விமல் – கம்மன்பில அணி தயாராகி வருகிறது.

### இடைக்கால அரசு வருமா? - உலக நாடுகள் தலையிடுமா?

ஜனாதிபதி கோட்டாபயவிடம் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசு யோசனை கிடப்பில் போடப்படுமென்பதையே அரச உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன.

இன்று பொதுமக்கள் நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிராக சாத்வீகப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். நாளை மறுதினம் சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்...

# சீனக் கம்பனி அமைக்கும் புதிய வீதிகள்

## வடபகுதி கிராம மக்களின் வாழ்வில் கொண்டுவரும் மாற்றம்



வவுனியா கிராமமொன்றில் சதீஷ்குமார் நாகேஸ்வரன் என்பவரின் வீட்டுக்கு வெளியே ஒரே இரைச்சல் சத்தம். சிறிய வீதியின் மேற்பரப்பை கனரக வாகனங்கள் கிண்டிக்கிளறிக்கொண்டிருக்கின்றன. இத்தகைய இரைச்சலை பெரும்பாலும் மக்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். முறைப்பாடு செய்வார்கள். ஆனால், இந்த கிராமத்தில் மக்கள் இரைச்சலை கேட்டு மகிழ்ச்சியடைகிறார்கள்.

"வீதியை புனரமைக்கும் பணி கிராமத்துக்கு பெரும் உதவியாக இருக்கும். இதே மாதிரி எமது வீதிகள் எல்லாமே புனரமைக்கப்படுமானால் எமது வாழ்க்கை சிறக்கும்" என்று நாகேஸ்வரன் கூறினார்.

இலங்கையின் வடபகுதி வரலாற்று ரீதியான காரணங்களுக்காக நாட்டின் ஏனைய பாகங்களையும் விடக் குறைவான அபிவிருத்தியையே கண்டிருக்கிறது. இந்தப் பகுதி குண்டும் குழியுமாக காணப்படும் வீதிகளினாலேயே இணைக்கப்பட்டிருக்கிறது. பெரிய மழை பெய்தால் எவரும் எங்கும் போகமுடியாது.

2020 மார்ச்சில் இந்த பிராந்தியத்தின் வவுனியா பகுதியில் வீதிகளை அகலப்படுத்தி நடைபாதைகளையும் அமைக்கும் பணிகளை சீன அரச நிர்மாணப் பொறியியல் கூட்டுத்தாபனம் (China State Construction Engineering Corporation) தொடங்கியது.

வவுனியா சுமார் 2,00,000 மக்கள் பரவிவாழும் பகுதியாகும். பல்வேறு கிராமங்களூடாக நிர்மாணிக்கவேண்டிய வீதிகளின் மொத்த நீளம் சுமார் 100 கிலோமீற்றர்களே என்று அந்த சீனக் கம்பனியின் திட்ட முகாமையாளர் லியூ குன் ஃபெங் கூறினார்.

முன்னர் வவுனியாவின் வீதிகள் குறுகலானவை. அவற்றில் சில மாத்திரமே நகரங்களுக்கான பாதைகளாகவும் இருந்தன. எனவே, கிராமத்தவர்களின் வழமையான பயணங்களை உறுதிசெய்கின்ற அதேவேளை, வீதி நிர்மாணத்தையும் முன்னெடுப்பது எவ்வாறு என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது. அதனால் சீனக் கம்பனி நிதானமான முறையில் சிந்தித்துச் செயற்படவேண்டியிருக்கிறது.

"வீதி நிர்மாணம் தொடங்கிய காலத்திலிருந்தே சூழவுள்ள கிராம மக்களின் ஆதரவுடனேயே திட்டம் முன்னெடுக்கப்படுவதை நாம் உறுதிசெய்துவந்திருக்கிறோம்" என்று லியூ சொன்னார்.

நாகேஸ்வரனின் வீட்டுக்கு வெளியே வீதி நிர்மாணப் பணிகளால் ஏற்பட்ட அசௌகரியத்துக்காக நிர்மாணப் பணியாளர்கள் மன்னிப்புக் கேட்டபோது அவர், தற்போதைய அசௌகரியம் தற்காலகமானது. இந்த வீதிகளின் நிலைமை எப்போது மேம்படும் என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" என்றுதான் கூறினார்.





அந்த வீதியின் ஓரமாக சில்லறைக்கடை வைத்திருக்கும் குமார் என்பவரும் வீதி புனரமைப்பினால் ஏற்கனவே பயனடைந்திருக்கிறார்.

''எனது வீட்டுக்கு முன்னால் உள்ள வீதி புனரமைக்கப்பட்ட பிறகு முன்னரையும் விட கூடுதலான வாடிக்கையாளர்கள் எனது கடைக்கு வருகிறார்கள்'' என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதியொன்றை அடுத்து இருக்கும் மறகரம்பளை விநாயகர் வித்தியாலயத்தில் பாடசாலை நேரம் முடிவடைந்ததும் பிள்ளைகளை அழைத்துச்செல்ல பெற்றோர் முண்டியடித்துக்கொண்டு வருகிறார்கள்.

மாணவர்கள் மகிழ்ச்சியாக ஓடிவிளையாடுவதையும் சைக்கிள்களில் பாடசாலையிலிருந்து வெளியேறுவதையும் அவதானித்துக்கொண்டிருந்த அதிபர் மஞ்சூரியா தேவி திருவருள்நேசன் புதிய வீதி 250 மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பெரிய சௌகரியத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்று கூறினார்.

கிராமிய வீதி புனரமைப்பு உள்ளூர்வாசிகளின் பயண நிலைவரத்தில் மாத்திரம் மேம்பாட்டைக் கொண்டுவரவில்லை, தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கியிருக்கிறது.பெண்கள் மத்தியிலான தொழில்வாய்ப்புகளை மேம்படுத்துமுகமாக இந்த வீதி நிர்மாணத் திட்டத்தில் 30 சதவீதமான தொழில்வாய்ப்புகள் உள்ளூர் பெண்களுக்கென்றே விசேடமாக ஒதுக்கப்பட்டது.

வீதி சுத்திகரிப்பு தொழிலாளியாக பணியாற்றும் 39 வயதான சந்திரமோகன் சசிகலா என்ற பெண்மணி அவரது குடும்பத்துக்கு போதிய நிதி வளம் இல்லாததால் முன்னர் பிள்ளைகளை வளர்க்க பெரிதும் கஷ்டப்பட்டார். ஆனால், இந்த சீனக் கம்பனியின் திட்டத்தில் வேலை செய்யத் தொடங்கிய பிறகு அவரது குடும்பத்தின் பொருளாதார நிலைவரம் மேம்பட்டுவிட்டது. தனது வீட்டில் புதிதாக குளியலறை கட்டியிருக்கிறார். அத்துடன், மின்சார இணைப்பையும் எடுத்திருக்கிறார்.

இன்னொரு பெண் தொழிலாளியான சுப்பிரமணியம் பரமேஸ்வரி, ''இந்தப் பகுதியில் பெண்கள் தொழில்வாய்ப்பைப் பெறுவதென்பது பொதுவில் சிரமமானது. ஆனால், இப்போது தனது குடும்பத்தை கவனிக்க கணிசமானளவு வருமானத்தை என்னால் பெறக்கூடியதாக இருக்கிறது'' என்று கூறினார்.

**சண்டே சாம்பார் தொடர்ச்சி...**

மிரிஹான சம்பவத்தில் கைதானவர்களை விடுவிக்க சுயவிருப்பத்துடன் கங்கொடவிலவில் திரண்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் தொடர்பில் சமூகத்தில் நன்மதிப்பு ஏற்பட்டுள்ளதால் சட்டத்தரணிகள் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் மிரிஹான சம்பவத்திற்கு அடிப்படைவாதிகள் காரணமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தமை சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஊடகப்பிரிவில் நடந்த செய்தியாளர் மாநாட்டின்போது அங்கு வந்த அமைச்சர்களிடம் இதுகுறித்து செய்தியாளர்கள் வினவினர். அரேபிய வசந்தம் ,அடிப்படைவாதிகள் என்று கூறுவது இஸ்லாமியர்களை இலக்கு வைத்துத்தானா என்றே செய்தியாளர்கள் கேட்டனர். ஆனால், அது அரசியல் அடிப்படைவாதிகள் என்று வந்திருக்கவேண்டும் என்று கூறி சமாளித்தனர் அந்த அமைச்சர்மார்.

மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய துணிந்திருப்பதும், அதனால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமையும் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மிரிஹான போராட்டத்தின் பின்னர் இலங்கையின் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

நிலைமைகளின் கட்டங்களை அவதானித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையர்களுக்கு அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க உரிமையுள்ளது, இது ஜனநாயக வெளிப்பாட்டிற்கு அவசியமானது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சுங் தெரிவித்துள்ளார்.

"நான் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறேன். அடுத்து வரும் நாட்களில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறேன்" என்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சுங் தமது ட்விட் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### அவசரகால நிலைமை

இந்த நெருக்கடிக்குள் நாட்டில் பொது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பொது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ளது .

அவசர நிலை அமுலுக்கு வந்தால் ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படும். கூடவே பொலிஸாருக்கு அதிகாரங்கள் அதிகரிக்கும். குறிப்பாக, தேவைப்படும் ஒருவரை நீதிமன்ற உத்தரவின்றியே கைதுசெய்து குறிப்பிட்ட காலம் வரை அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் பொலிஸார் தடுத்துவைக்க முடியும்.

தேவைப்படும் இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் பொலிஸாருக்கு அதிகாரம் இருக்கும்.

பாதுகாப்பைப் பலப்படுத்த இராணுவத்தினரும், ஏனைய பாதுகாப்புப் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்படலாம்.

தேவையான இடங்களில் திடீர் சோதனைச் சாவடிகளைக்கூட அமைக்கலாம்.

பொது இடங்களில் ஆட்கள் கூடுவது மட்டுப்படுத்தப்படும். இது ஆர்ப்பாட்டங்கள், கலவரங்கள் உருவாவதைத் தடுக்கப் பயன்படுத்தப்படும். வன்முறைகள் ஏற்படும் போது வன்முறையில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவும் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்படலாம். தேவையான இடங்களில் ஊரடங்குச் சட்டங்களை பிறப்பிக்க முடியும். ஊடகங்கள் மீது கட்டுப்பாடு கொண்டுவர முடியும். தேவைப்படின் தணிக்கைகள் அமுல்படுத்தப்படும்.

அவசரகால பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகள் ஜனநாயக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

### இராஜினாமா படலம் தொடரும்!

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாக நேற்று ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

இதேபோல மேலும் பலர் தமது பதவிகளைத் துறக்கத் தயாராகி வருவதாக சொல்லப்படுகிறது. கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உதய கம்மன்பில ஆகியோர் சந்தித்து நீண்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். அதேபோல் அரச தரப்பிலுள்ள முக்கிய அமைச்சர்கள் சிலரும் இவர்களை இரகசியமாக சந்தித்துப் பேசியுள்ளதாக சொல்லப்படுகிறது.

### ஆளுங்கட்சிக்குள் குழப்ப நிலைமை

நாட்டின் தற்போதைய நெருக்கடியான நிலைமையில் ஆளுங்கட்சிக்குள் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. நிதியமைச்சர் தற்காலிகமாகப் பதவி விலக வேண்டுமென ஒரு சாரார் கோரிக்கை விடுத்துள்ளனர். இடைக்கால அரசை அமைக்குமாறு மற்றுமொரு சாரார் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியா, இலங்கைக்குள் அதிகபட்சம் முதலீடுகளை செய்து கால்பதிக்க ஆரம்பித்துள்ளதால் சீனாவும் இதுதொடர்பில் அதிருப்தியுடன் இருப்பதாகத் தெரிகிறது. இந்த தாக்கங்கள் அரசியலிலும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே அரசியல் நோக்கர்கள் கருத்தாக இருக்கிறது.

### ஜெய்ஷங்கரின் புதிய பாதை வெளிநாட்டு கொள்கை

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் வந்து போனது பற்றி வாரம் முழுக்க பேசப்பட்டது. அவர் வந்து இங்கே நிறைய பேருக்கு ஷொக் கொடுத்துவிட்டுப் போன கதை இப்போதுதான் மெல்ல, மெல்ல வெளிவருகிறது. அரசியல் அமைச்சர் பதவி வகித்தாலும் தான் இன்னமும் ஒரு ஐ.எவ்.எஸ் என்ற "இந்திய பொரின் சர்வீஸ் ஒப்பிசர்" என்று அவர் காட்டிப் போய் விட்டார். ஜெய்ஷங்கர். அவர் "இந்தியா வழி–பாதை" என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அப்படியே அவரது வெளிநாட்டுக் கொள்கையும், அதில் புதிய பாதையாக அமைந்துள்ளது.

எமக்கு (இந்தியாவுக்கு) முக்கியம் எமது கேந்திர அரசியல், இராணுவ, பொருளாதார தேவைகள்தான். இங்குள்ள மலையகத் தமிழர், ஈழத்தமிழர், சிங்களவர், முஸ்லிம் எல்லாம் எமக்கு ஒன்றுதான். உங்கள் அரசியல் தேவைகளை இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். பொருளாதார உதவிகள் வேண்டுமானால் நாம் செய்கிறோம். அதுவும் இலங்கை அரசின் ஒத்துழைப்புடன்தான் நாம் செய்வோம். அவையும் எமது அரசியல், இராணுவ, பொருளாதார தேவைகளுக்கு தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டும். இதுதான் ஜெய்ஷங்கரின் புதிய பாதை, வெளிவிவகார கொள்கை.

கடந்த காலங்களில், தமிழர்கள் மீது இந்தியா அதிக கரிசனை காட்டி விட்டதாக சிங்கள சிந்தனை ஏற்பட்டு விட்டது. இது இலங்கையில் இந்திய நலன்களுக்கு நல்லதல்ல. இந்தியாவை எதிரியாக நினைத்து சீனா பக்கம் போக சிங்களவர்கள் விரும்புவது இதனால்தான் என்பது புதிய பாதை சிந்தனை. இந்த ஜெய்ஷங்கரின் வெளிநாட்டுக் கொள்கை "திங்க் டேங்க்" ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு. இதை ஜெய்ஷங்கர் அப்படியே உள்வாங்கியுள்ளார். இதனால் தமிழர்கள் மட்டுமல்ல, எல்லோரையும் பார்த்து, பேசிப் பழக, வேண்டும் என அவர் தீர்மானித்தாராம். அதனால் இந்த முறை இந்திய வெளிவிவகார அமைச்சர், அரசாங்க தரப்பை விட த.தே.கூ, த.மு.கூ, இ.தொ.கா. என்று நிற்காமல் முஸ்லிம் காங்கிரஸ், ரணில், சஜித் என்று எல்லோரையும் பார்த்து பேசி விட்டு போயுள்ளார்.

### கூட்டமைப்புக்குக் கிடைத்த மறைமுக டோஸ்

மோடி அழைப்பு விடுத்தும் கூட்டமைப்பு டெல்லி போகவில்லை. ஆனால், கோட்டாவை பார்க்க தமிழரசுக்காரர்கள் ஓடி விட்டார்கள். இதில் அவசரப்படாமல் ரெலோ மட்டும் தப்பித்ததாக தமிழர் அரசியல் பரப்பில் பேசப்படுகிறது. இது பழம் நழுவிப் பாலில் விழுந்ததை போல் ஜெய்ஷங்கரின் புதிய பாதை வெளிநாட்டுக் கொள்கைக்கு சாதகமாக போய் விட்டதாம். "நீங்கள் டெல்லி வரவில்லை. ஆனால், கோட்டாவைப் பார்த்தீர்கள். ஆகவே, அவரிடமே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது", என கூட்டமைப்புடனான சந்திப்பில் திரும்ப, திரும்ப சொன்னாராம் ஜெய்ஷங்கர் . "13" பற்றி வழமையான பேச்சுடன் சரி.

சஜித் மீதான சுமந்திரனின் அண்மைக்கால விமர்சனங்கள் தொடர்பிலும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஜனாதிபதி கோட்டாபய மீதான நாட்டு மக்களின் அதிருப்தி வலுத்துவரும் நிலையில், தமிழ்க்கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் நடத்தும் பேச்சு எந்தளவு தூரம் வெற்றியளிக்குமென தெரியவில்லை.

**- சிவா இராமசாமி -**

rh i


2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk




# பொங்கியெழுந்த மக்கள் சக்தி

## ஜனநாயக போராளிகளால் அதிர்ந்தது கொழும்பு

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட எம் தேசம் இன்று கடனில் மூழ்கிக்கிடக்கிறது. இயற்கை வளங்கள் நிறைந்த பூமி, எரிபொருளுக்கும், எரிவாயுக்கும் ஏன் உண்ணும் உணவுக்கும் அண்டை நாட்டிடம் இறைஞ்சி நிற்கிறது.

வாக்களித்த பாவத்திற்காக எரிபொருள் - எரிவாயு - பால்மாவுக்காக அப்பாவி மக்கள் இன்று உயிர்த் தியாகத்துக்கு மத்தியில் வீதியில் நிற்கின்றனர். இதில் மின்வெட்டு வேறு. அண்மையில் சில நாட்களாக நாட்டுக்கே ஏழரையாக இருந்த மின்வெட்டு இன்று 13 மணிநேரமாக்கப்பட்டுள்ளது. முழுநாடும் இருளில் தத்தளிக்கின்றது.

இன்று இரண்டரை கோடி மக்களும் தாம் இழைத்த பிழையை ஜாதி, மதம், இனம் கடந்து ஒப்புக்கொண்டுள்ளனர். வயிற்றுப் பசி போக்க முடியாத வக்கற்ற அரசுக்கு தக்க பாடம் புகட்ட வெகுண்டெழுந்துள்ளது.

கொளுத்தும் வெயில் - மழைக்கு மத்தியில் அண்மைக் காலமாக எரிவாயு - எரிபொருள் - பால்மா வரிசையில் கால்கடுக்க நின்று புலம்பியவர்கள் வியாழனன்று இரவு ஏழரை மணிமுதல் வீதிக்கிறங்கி அரசை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

வியாழக்கிழமை (31) இரவு 7.30 மணி... நுகேகொடை - மிரிஹான - பெங்கிரிவத்த மாவத்தையில் அமைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்திற்கு பிரவேசிக்கும் வீதியை மறித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சற்றுநேரத்துக்குள் பெருந்திரளானோர் ஒன்றுகூடினர். எரிபொருள் - எரிவாயு தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலையேற்றம், மின்வெட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய பதாகைகளை கையிலேந்தினர் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

அண்மைக்காலமாக சமூக ஊடகத் தளங்களில் பேசுபொருளாக இருந்த #GoHomeGota கோஷம் இன்று பொதுவெளியில் ஒலிக்கப்பட்டது. ஒளிர்ந்தன கைபேசிகள்... திரண்டனர் மக்கள்...

இதன் காரணமாக ஜுபிலி தபால் நிலையத்திலிருந்து மஹரகம வரையான வீதியூடான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அப்பகுதியில் தற்போது பயணிக்கும் வாகன சாரதிகளுக்கான எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாவின் இல்லம் மக்களால் சுற்றிவளைக்கப்பட்டது. அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்தினர்.

போராட்டக்காரர்களை ஒடுக்க பொலிஸார் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம், நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தினர். கண்ணெரிச்சல் உட்பட உடல் உபாதைகளால் மக்கள் பாதுகாப்பிடம் நோக்கி ஓடினர். பலர் காயமடைந்தனர். இந்நிலையில், தமது போராட்டத்தை ஒடுக்கிய பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். தீவிரமடைந்தது போராட்டம்....

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு கலகத் தடுப்புப் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பிரிவினருக்குச் சொந்தமான பஸ்ஸொன்று ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டது. பற்றி எரிந்தது தீ... (வைக்கப்பட்ட முதல் தீ, வாகனத்திற்கானது அல்ல அநீதிக்கானதாகவும் இருக்கட்டும்) பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப்பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

தொடர்ந்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கானோரின் பங்குபற்றுதலுடன் போராட்டம் தொடர்ந்தது. கலவர பூமியானது கொழும்பு....

இரவு சுமார் 10.30 மணி.... கலவரம் சற்று தணிந்தது.... பொலிஸ் படை சூழ்ந்திருக்க ஓங்கி ஒலித்தது ஒரு குரல்.... அமைதி கண்டது அதிகாரத்தின் குரல்....

''இரண்டரைக் கோடி பேரின் செல்வத்தை ஒரு குடும்பம் உண்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றீர்கள்... இந்த இடத்தில் இடம்பெறவேண்டியது அதுவல்ல... ஒவ்வொருவரும் தனித்து எழவேண்டும்... நாட்டின் இன்றைய நிலைமைக்கு பொறுப்புக் கூறவேண்டியது மக்கள்...

நாம் கதைப்பதற்கு பயப்படவேண்டிய அவசியமில்லை... எங்களுக்கு கட்சியும் இல்லை, கலரும் இல்லை... நாங்கள் இலங்கையர்கள்... சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைவரும் இந்த இடத்தில் இருக்கிறார்கள்... இலங்கையர்கள் என்ற ரீதியில் ஒன்றுதிரண்டுள்ளோம்...

நீங்கள் 'நாட்டைக் பாதுகாப்போம்' என்று உறுதிமொழியேற்றுள்ளீர்கள்... எங்கே அது...? அதை செய்தால்தானே சொல்ல முடியும்.... நீங்கள் எங்களுக்கும் பாதுகாப்பளிக்கிறீர்கள். கருணா அம்மானுக்கும் பாதுகாப்பளிக்கிறீர்கள்... எங்களையும் அவரையும் ஒரே மட்டத்திலேயே வைத்துள்ளீர்கள்... எனினும், அவரை பெட்டன் பொல்லால் அடிப்பதில்லை.. பாதுகாப்பு வழங்குகிறீர்கள்... அவ்வாறு செய்யாதீர்கள்.. நீங்களும் பொறுப்பேற்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாக பொறுப்புக்கூற வேண்டும்....

பொறுப்பேற்காததன் காரணத்தாலேயே இன்று 225 பேரும் நாட்டின் இந்த அழிவுக்கு பொறுப்புக் கூறாமலிருகின்றனர். அதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும்... அவர்களாலேயே நாம் இன்று நடுவீதியில் நிற்கிறோம்... நீங்கள் சம்பளம் பெறுவதும் எங்களின் உழைப்பிலேயே.... எங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்...

வீதிக்கிறங்கி உங்களால் வாழ முடியுமா...? இன்று ஒரு கிலோ அரிசி, கேஸ் சிலிண்டரொன்று வாங்க முடியாத நிலையில்... என்ன இந்த அரசு..?

எங்களுக்குத் தெரியும் இங்கு (ஜனாதிபதியின் இல்லத்தில்) யாரும் இல்லை என்று... எனினும், அவர்களுக்கு காட்டவேண்டும்.... இந்நாட்டு மக்கள் அணிதிரண்டால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்...

நாட்டை மீட்டெடுக்க யாராவது ஒருவர் முதலடி எடுத்துவைத்தால் அதனை நாம் பின்தொடரவேண்டும். அதற்கு நம் ஆதரவைத் தெரிவிக்கவேண்டும்... இதனைப் புரிந்துகொள்ளுங்கள்.... தயவுசெய்து மக்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளாதீர்கள்.... லத்தியால் அடிக்காதீர்கள்... அவர்களுக்கு ஏதாவது நடந்தால் அவர்களின் குடும்பங்களை காப்பது யார்...?

எங்களிடம் ஆயுதம் இல்லை... வீதியிலுள்ள கற்களே உள்ளன... அப்பச்சி... அப்பச்சி என்று சொல்லும் மகனை அரசனாக்குவதற்கு இரண்டரைக் கோடி பேரை பிச்சைக்காரர்களாக்கி விட்டுள்ளனர்....

இவ்வாறிருக்கும் சூழலில் நீங்கள் உங்களின் ஆதரவை எங்களுக்குத் தரப்போவதில்லை... உங்களின் அப்பச்சி இன்று இரண்டரைக் கோடி பேரை வீதியில் நிற்கவைத்துள்ளார். தனது மகனை அரியணையேற்றுவதற்காக.... இந்த நாட்டை எத்தனையோ பேர் ஆட்சிசெய்துள்ளனர்.... அப்போது கூட இவ்வாறான நிலை இல்லை....

2009 யுத்தத்தின்போது அவர்கள் கூறியபடி தண்ணீர்ப் போத்தல்களை கொண்டு தாக்கினேன்... எங்களின் தாய் - தந்தையர்கள் தியாகங்களை செய்தனர்... ஏன்? நாட்டை காப்பாற்றுவதற்காக.... இருந்தும் தற்போது எங்களுக்கு என்ன கிடைத்தது...?

நாட்டுக்காக போராடி கை - கால்களை இழந்த உங்களின் சகோதரர்கள் எத்தனை பேர் இராணுவத்தில் இருக்கிறார்கள்...? அவர்களுக்கு என்ன கிடைத்தது? அவர்களது ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதியம் என அனைத்துமே இனி இல்லாமல் போகப்போகிறது...

அபிவிருத்தி என்ற போர்வையில் 13 பில்லியன் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.... 13 பில்லியன் கடனை நாம் சுமக்கிறோம். இன்னும் எமக்குத் தெரியாத எத்தனை பில்லியன்கள் கடனுள்ளதோ?

எதற்காக நாம் கடன்பட்டோம்? எல்லா வளங்களும் நிறைந்த இந்த நாட்டில்.... மக்களிடம் ஒற்றுமையில்லை.... ஆனால், இன்று ஒன்றுபட்டுள்ளனர். அதற்கு ஒத்துழையுங்கள்....''

என்று ஒலித்து ஓய்ந்தது அந்தக் குரல்....







ஊமையாகியாகியது அதிகார வர்க்கத்தின் குரல்...

மிரிஹானவில் பற்ற வைக்கப்பட்ட அநீதிக்கெதிரான தீ நாட்டின் பல்வேறு இடங்களிலும் பற்றியெரிந்தது...

### ஊரடங்கும் தளர்வும்

இதனையடுத்து கலகத்தை கட்டுப்படுத்த கொழும்பில் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு, நுகேகொடை, கல்கிஸை மற்றும் களனி பொலிஸ் பிரிவுகளுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு வெள்ளிக்கிழமை காலை 5.00 மணிக்கு தளர்த்தப்பட்டது. இந்நிலையில், புத்தளம் மதுரங்குளி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருளை கோரியே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக புத்தளம் - சிலாபம் வீதியில் வாகன நெரிசல் நிலை ஏற்பட்டது. இதேவேளை, கொழும்பு - மருதானையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச குடும்பநல சுகாதார சேவை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன் காரணமாக டீன்ஸ் வீதியில் சுகாதார அமைச்சுக்கு முன்னால் நெரிசல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, மொரட்டுவை பிரதேசத்திலும் தச்சு தொழிலில் ஈடுபடுவோர் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்... இவ்வாறு நாடு முழுவதும் அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை

இந்நிலையில், கலவரம் குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில்,

நுகேகொட ஜூபிலி தூண் பகுதிக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு இடையில் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் குழுவொன்று வன்முறைச் சூழலை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளது.

இரும்பு ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளுடன் ஆயுதம் ஏந்திய குழுவினர், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு, மிரிஹான பெங்கிரிவத்தையிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தினர்.

வன்முறையில் ஈடுபட்டவர்களில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

''நாட்டில் அரபு வசந்தத்தை உருவாக்குவோம்'' என கோஷமிட்டு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கலவரக்காரர்கள் திட்டமிட்ட வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தியுள்ளமை கைதுசெய்யப்பட்ட நபர்கள் மூலம் தெரியவந்துள்ளது - என தெரிவிக்கப்பட்டிருந்து.

### விசேட விசாரணைக் குழு

இதேவேளை, மிரிஹானவில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான விசாரணைகள் மூன்று விசேட குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மிரிஹான, பெங்கிரிவத்த மாவத்தைக்கு அருகில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தை மறித்து வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கலவரம் வெடித்தது. இதன்போது, பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டம் மற்றும் பொது சொத்துகள் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்பு குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் மேற்கு வடக்கு குற்றப்பிரிவு ஆகிய மூன்று குழுக்களால் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுச் சட்டத்தின்கீழ் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் இது குறித்து செய்தி வெளியிடுவதைத் தடுக்க முடியாது. இது மக்களின் உரிமை. ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின்போது சுமார் 39 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை 53 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 18 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 24 பேர் காயமடைந்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த 42 பேரும், மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 3 பேரும், சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 4 பேரும், வடமாகாணத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் தென் மாகாணத்தைச் சேர்ந்த இருவர் அடங்குகின்றனர்.

இந்தச் சம்பவத்தின்போது ஜனாதிபதி எங்கிருந்தார் என்று கூற எனக்கு அதிகாரமில்லை. இதுபோன்ற உண்மைகளை வெளிப்படுத்த முடியாது. இந்த சம்பவத்தில் எந்த அரசியல் கட்சிக்கும் தொடர்பிருப்பதாக தகவல் இல்லை. விசாரணைகள் நடந்து வருகின்றன. எதிர்வரும் 3ஆம் திகதி (இன்று) ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பது குறித்து இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை - இவ்வாறு தெரிவித்தார்.

கலவரத்தின்போது மிரிஹான சம்பவம் வெறும் ட்ரெய்லர் மட்டுமே.. மெயின் பிக்சரே ஞாயிற்றுக்கிழமை(இன்று)தான் என ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் ஒடுக்கியபோது சிலர் முழக்கமிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நாட்டின் தலைவராகவும், அதேவேளை பாதுகாப்பு அமைச்சராகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே உள்ளார். அவரின் கட்டளைக்கமைவாகவே நாட்டின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமது ஜனநாயக உரிமைக்காக போராடிய அப்பாவி மக்கள் மீது அதிகாரம் கொண்ட அந்த அரசாலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பு?

எது எவ்வாறாயினும் தற்போது மக்கள் விழிப்படைந்துள்ளனர். அரசொன்று தெரிவு செய்யப்படுவதும், அது வீழ்ச்சி காண்பதும் மக்களாலேயே.... பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துவரும் நாட்டின் இந்நிலைக்கு என்ன காரணம் என்பதை மக்கள் தற்போது நன்குணர்ந்துள்ளனர். ஓரணியாகத் திரண்டுள்ளனர்.

தீர்வை நாம் சொல்லவேண்டியதில்லை.... பொறுத்திருப்போம்.. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!!





• கே. சுபானி

# ஆதாரம் இல்லாத அண்ணாமலையின் குற்றச்சாட்டுகள்



தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவராக தமிழிசை இருந்தபோது தினம் ஒரு செய்தியுடன் ஊடகங்களில் இடம்பிடித்தார். அடுத்து வந்த எல்.முருகனும் அதேபாணியில் ஊடகங்களில் முகத்தைக் காட்டினார். இன்றைய தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலையும் அவர்களின் வழியில் ஊடக வெளிச்சத்தைத் தன் பக்கம் திருப்பியுள்ளார்.

அரசியல் நாகரீகத்துடன் தமிழிசை குற்றஞ்சுமத்தினார். முருகன் எல்லை மீறி வேல் யாத்திரை சென்றார். அண்ணாமலை அரசியல் நாகரீகத்தைக் காற்றில் பறக்க விட்டுள்ளார். மிரட்டல், சண்டித்தனம் போன்றவற்றுடன் குட்டி ராஜ்ஜியம் நடத்துகிறார். தமிழக அரசு ஊழல் செய்கிறது, டெண்டர்கள் முறைகேடாக நடக்கின்றன போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார். ஆதாரம் இருந்தால் நீதிமன்றத்துக்கும் போகலாம் என பதிலடி கொடுத்தால் தன்னைக் கைதுசெய்யும்படி சவால் விடுகிறார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு காவல்துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்டங்களிலுள்ள தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் அரசை வழிநடத்தி வருவதால் குற்றச் சம்பவங்கள் பெருகியுள்ளன.

ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகை 16 ஆயிரம் கோடி ரூபாவை மத்திய அரசு தரவில்லை என்று தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சொன்னதற்கு, ''தமிழக அரசுக்குக் கொடுக்கவேண்டிய நிலுவைத் தொகை அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆனால், உண்மையை மறைத்து தமிழக அரசு பொய் சொல்கிறது'' என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அடித்துப் பேசிவருகிறார். இதற்கு பதிலடி கொடுக்கும் தி.மு.கவினரோ, மார்ச் 16ஆம் திகதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் பேசியதைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. இழப்பீடாக 96,756 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 53,661 கோடி ரூபா நிலுவையில் உள்ளது. அதில், தமிழ்நாட்டுக்கு 6,733 கோடி ரூபா நிலுவையில் இருக்கிறது'' என்று அவர் பேசியிருக்கிறார். மத்திய நிதியமைச்சரே ஜி.எஸ்.டி நிலுவைத் தொகை குறித்து ஒப்புக்கொண்ட பிறகு, ''உண்மையை மறைத்து, பொய் சொல்கிறார் அண்ணாமலை... ஏன் இந்த வேண்டாத வேலை?'' என்று கமலாலயம் தரப்பிலிருந்தே விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதேபோல் நூறு நாள் வேலைத்திட்டத்திலும் 40 சதவிகித கட்டுமானப் பணிகளுக்கான நிதியைக் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிறுத்திவைத்திருக்கிறது.

தமிழக நிதி அமைச்சர் சமர்ப்பித்த பட்ஜெட்டில் தவறு இருப்பதாக அண்ணாமலை சொல்வது பச்சைப்பொய் என்பது வெளிப்படையானது. அண்ணாமலையின் கருத்துக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. அண்ணாமலையின் குற்றச்சாட்டுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை எனபதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. அண்ணாமலையின் குற்றச் சாட்டுக்கு எதிராக வக்கீல் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராகிவிட்டது.

டுபாயில் நடைபெற்றுவரும் கண்காட்சியை முதலமைச்சர் ஸ்டாலின் திறந்துவைத்த நிலையில், முதலமைச்சரின் டுபாய் பயணத்தில் மர்மம் என்ன எனக் கேள்வி எழுப்பியுள்ளார்

இந்நிலையில், முதலமைச்சரின் டுபாய் பயணம் தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார், அதில் இந்த மாத இறுதியோடு டுபாய் கண்காட்சி நிறைவடையவுள்ளதாக தெரிவித்தவர், இந்நிலையில்தான் தற்போது தமிழக அரங்கை முதலமைச்சர் திறந்துவைக்கவுள்ளதாக தெரிவித்தார். இத்தனை காலம் திறக்காமல் இப்போ திறப்பதற்குக் காரணம் என்ன என்றும் கேள்வி கேட்டார். மேலும் முதலமைச்சர் டுபாய் செய்வதற்கு முன் அவரது குடும்பத்தினர் பல முறை டுபாய் சென்று வந்ததாக கூறினார். தற்போது முதலமைச்சர் தனது குடும்பத்தோடு மீண்டும் டுபாய் சென்றுள்ளதாகவும் கூறினார். எனவே, டுபாய் மர்மம் என்ன? என்று கேள்வி எழுப்பியவர், அங்கு என்னதான் நடக்கிறது என்று புரியவில்லை எனவும் கூறினார்.

வார நாளிதழ் ஒன்றில் தமிழகத்திலிருந்து 5000 கோடி ரூபா டுபாய் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக கூறியவர், அந்த 5000 கோடி ரூபாவின் மர்மம் என்னவென்றும் கேள்வி எழுப்பினார். முதலமைச்சர் குடும்பம் அடிக்கடி டுபாய் செல்வதற்கு காரணம் என்ன? எனவும் வினவினார். முதலமைச்சர் ஏதோ ஒரு தவறு செய்வதற்காகதான் டுபாய் கண்காட்சி என்று காரணம் கூறுவதாக குற்றஞ்சாட்டினார். தமிழக மக்கள் நலனுக்காக முதலமைச்சர் ஸ்டாலின் டுபாய் செல்லவில்லையெனவும் அப்போது அண்ணாமலை தெரிவித்தார். இந்திய முதலமைச்சர்களில் முதலிடத்தில் இருக்கிறார் ஸ்டாலின். எதிரணி அரசியல்வாதிகளும் ஸ்டாலினின் நிர்வாகத்தைப் புகழ்கிறார்கள். அண்ணாமலை மட்டும் இகழ்கிறார்.



தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியும் கடந்த ஆண்டு தமிழக பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்தவருமான அண்ணாமலையை மாநில பாரதீய ஜனதா கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கர்நாடக மாநில பிரிவைச் சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரியான கே. அண்ணாமலை, 2019ஆம் ஆண்டு மே 28ஆம் திகதி தனது ஐ.பி.எஸ். பதவியை இராஜினாமா செய்தார். அப்போது அவர் தெற்கு பெங்களூர் துணை ஆணையர் பதவியை வகித்து வந்தார்.

ஆனால், தனது பதவியை அவர் இராஜினாமா செய்த தருணத்தில், எந்த அரசியல் கட்சியிலும் சேர்வதாகவும் அவர் தெரிவிக்கவில்லை. சொந்த ஊருக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபட்டு, “எனது ஆடு இன்னும் எனது குரலுக்கு செவிமடுக்கிறதா என்பதை பார்க்க ஆசையோடு இருப்பதாக” கூறியிருந்தார்.

ஆனால், விரைவிலேயே அவர் ரஜினிகாந்த் துவங்கவிருக்கும் கட்சியில் சேர்வார் என்றும் பாரதீய ஜனதா கட்சியில் சேர்வார் என்றும் பேச்சுகள் அடிபட்டன. இந்நிலையில், கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவர் பாரதீய ஜனதா கட்சியில் இணைந்தார். கட்சியில் சேர்ந்த சில வாரங்களிலேயே அவருக்கு மாநில துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டு பா.ஜ.கவின் மீது கர்நாடகத்தின் ஆதிக்கம் உண்டு. தமிழ்நாடு பொறுப்பாளர் சி.டி. ரவி கர்நாடகத்தைச் சேர்ந்தவர். அதேபோல், அண்ணாமலை போட்டியிட்ட தொகுதியில் கர்நாடகத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் வந்து தங்கி பணியாற்றினர். 20 தொகுதிகளில் வேறு யாருக்கும் இந்த அளவுக்கு வெளி மாநில ஆதரவு கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு கர்நாடக செல்வாக்கு இவருக்கு உண்டு. ஆனால், அண்ணாமலையின் பணி எளிதாக இருக்கப்போவதில்லை.

“பா.ஜ.கவின் இந்துத்துவா கொள்கை கோவையில் வேண்டுமானால் ஓரளவுக்கு எடுபடலாம். ஆனால், தமிழ்நாட்டில் எடுபடாது. மத்திய அரசு எடுக்கக்கூடிய தமிழ்நாட்டிற்கு விரோதமான கொள்கைகள் பா.ஜ.க. மீதான கோபத்தை தக்கவைக்கவே செய்கின்றன. ஆகவே, அண்ணாமலை தமிழ்நாடு முழுவதும் கட்சியை வளர்க்க விரும்பினால், இதில் கவனம் செலுத்த வேண்டும். நீட், இந்தித் திணிப்பு, புதிய கல்விக் கொள்கை போன்றவற்றால், சிறுபான்மையினர் தவிர்த்து பா.ஜ.கவுக்கு எதிரான புதிய வாக்கு வங்கியை உருவாக்கியிருக்கிறது.

ஆகவே, அண்ணாமலைக்கு முன்பாக ஒரு பெரிய சவால் காத்திருக்கிறது. ஒன்று, இந்துத்துவ அரசியலை கையில் எடுக்கலாம். அது கோவை பகுதியில் அவருக்கு கைகொடுக்கக்கூடும். அல்லது தமிழகத்திற்கு ஆதரவான கொள்கைகளை வகுக்கும்படி மத்திய அரசை வலியுறுத்தி, அதன்மூலம் பா.ஜ.கவை வளர்க்கலாம்.

**- அபி -**

## 'வெடி'மணியம்

- தொடர்ச்சி

*அதைவிடுவம்.*

*வடக்கு, கிழக்கில் ஆமிக்காரரும், வனவள திணைக்களமும் கள்ளக்காணி பிடிக்கிற பிரச்சினைக்கு இன்னும் தீர்வு இல்லை!*

*இதுவரைக்கும் அது சம்பந்தமான எந்தவித நடவடிக்கையும் இல்லை!*

*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன?*

*அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதை விசாரிக்கும் குழு ஒண்டை அமைக்க கோட்டாபய முன்வருவாரா?*

*அந்தக் குழுவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக சட்டவல்லுநர்கள் இணைக்கப்பட வேணும்.*

*அதுதான் நல்லெண்ண சமிக்ஞை!*

*ஆக;*

*ஒருவேளை சம்பந்தரும், அவரது பரிவாரங்களும் மீண்டும் கோட்டாபயவுடன் பேச்சுவார்த்தை ஒன்றை செய்ய நினைக்கிறதில தப்பில்லை.*

*ஆனால்;*

*கோட்டாபய நடைமுறைப்படுத்துவன் எண்டு சொன்ன நாலைஞ்சு விடயங்களை நடைமுறைப்படுத்திய பின்னர் பேச வேணும்.*

*அப்பிடி செய்யவில்லை எண்டால் பேசப்போகக் கூடாது.*

*இல்லை, மீண்டும் கோட்டாபயவுடன் நிபந்தனைகள் இன்றி சம்பந்தர் பேசுவாராக இருந்தால்;*

*மீண்டும் மீண்டும் மன்னிக்கமுடியாத மக்களின் பெரும் வெறுப்பையும், எதிர்ப்பையும் சம்பந்தர் சந்திப்பதோடு மட்டுமல்லாமல்;*

*அவரது அரசியல் வாழ்வு சூனியமாகும்.*

*கருணாநிதி இறந்தபோது ஈழத்துத் தமிழர்கள் அதை சிம்பிளாக கடந்து போனார்கள்.*
*ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்த நிலை சம்பந்தர் ஐயாவுக்கு வந்துவிடக்கூடாது.*

*திரும்பத் திரும்ப பல தடவைகள் ஒரு விடயத்தைக் கத்திக் கத்தி சொல்லியாச்சு.*

*கோட்டாவோடும் சரி, இந்தியாவோடும் சரி பேசும்போது;*

*சம்பந்தர் தன்னுடன் சுமந்திரனை மட்டும் கூட்டிக்கொண்டு போனால் காணும் எண்ட நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்.*

*மிகப்பெரிய தவறை சம்பந்தன் திரும்பத் திரும்ப விட்டுக் கொண்டேயிருக்கிறார்.*

*இனிமேல் எவரோடும் பேச்சுவார்த்தை மேசையில் பேசும்போது "தமிழர் தரப்பு" இருக்கவேணும்.*

*சம்பந்தர் குறூப் மட்டும் இருப்பது ஆபத்து.*

*யார் இந்த "தமிழர் தரப்பு" எண்டு கேப்பியள்.*

*பேச்சுவார்த்தை மேசையில் இருப்பதற்கு "அரசியல்வாதி" எண்ட ஒற்றைத் தகுதி மட்டும் தேவையில்லை.*

*தமிழ் மக்களுக்காக சிந்திக்கும் நல்ல நாலு மனுசரைக்கூட இந்த பேச்சுவார்த்தைகளில் சம்பந்தர் பயன்படுத்திக் கொள்ளலாம்.*

*சம்பந்தருக்கு சிந்திக்கும் ஆற்றல் அற்று கன வருடங்கள். அதைச் சொன்னால் வயசு போன மனுசனை வயசைச் சொல்லி கேலி செய்யுறார் மணியத்தார் எண்டுவியள்!*

*இதுக்கிடையில....*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடக்குமா, இல்லையா எண்ட சந்தேகம் எழுந்துள்ளது.*

*கொழும்பில் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், கொதிநிலையும் நல்லதுக்கில்லை!*

*கொழும்பில் போராட்டங்கள் வெடிக்கும் அதே சமயம்;*

*வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்களை திரட்டி ஆளும் அரசுக்கெதிராக போராடத் தூண்டிவிடும் பேரினவாதக் கட்சிகளின் கபடத்தனத்தை வடக்கு, கிழக்கு மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.*

*கோட்டா பேய் எண்டால்;*
*மற்றக்கட்சிகள் பிசாசு!*

*ஒண்டு கடிக்கும்.*
*மற்றது அடிக்கும்!*

*அந்தளவுதான் வித்தியாசம்.*

*வடக்கு, கிழக்கில் கோட்டாபயவுக்கு எதிரான போராட்டங்களை தெற்கின் பேரினவாதக் கட்சிகள் ஒழுங்குபடுத்த முண்டியடிக்கின்றன. எங்கட சனத்துக்கு ஒண்டைத் தெளிவா சொல்லவேணும்.*

*பேய்க்கும், பிசாசுக்கும் நடக்கும் சண்டையில் எந்தப் பக்கம் நிக்கவேணும் எண்ட குழப்பம் வரும்.*

*வேடிக்கை மட்டும் பாருங்கோ!*


திகதி 31.03.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4723
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,244,480.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 5 4 5 2 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,026,931.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1071
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,734,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 245,256,146.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J சுப்பர் இலக்கம் 16 வெற்றி இலக்கங்கள் 31 70 76 80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 753
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,450,140.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 10 11 15 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,731,144.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.U.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# ‘இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர்’ தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்த ஆவணம்

**'இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர்' சார்பாக தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ள அபிலாஷை ஆவணம், குறிப்பாக, இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், பிரித்தானிய அரசு ஆகிய மூன்று தரப்புகளுக்கும் பிரதானமாக வழங்கப்பட்டுள்ளது.**



**பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கான இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையர் சார்பான அபிலாஷை ஆவணக் கடிதத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி, கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் அண்மையில் கையளித்தது.**

**கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்.பி., கே.டி.குருசாமி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தியத் தரப்பில் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதர் வினோத் கே.ஜேக்கப், அரசியல்துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளை முன்வைத்துள்ள இந்தப் பின்னணியில் பின்வரும் எதிர்பார்ப்புகளை நாம் கோருகிறோம்;

i. பதின்மூன்றாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்துடன் மாகாண சபைத் தேர்தல்களை தாமதமின்றி உடன் நடத்தல்.

ii. தமிழுக்கு சம அந்தஸ்து மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் அடங்கிய மும்மொழிக் கொள்கை ஆகியவற்றை அறிமுகப்படுத்திய பதினாறாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம்.

iii. தேசிய நீரோட்டத்தில் அமைப்பு ரீதியான ஒருங்கிணைவுடன் இலங்கைசமூக பரப்பில் தனித்துவ அடையாளம்கொண்ட அங்கமாக மலையக சமுதாயம் முழு சமத்துவமான குடியுரிமையை பெற்று வாழ.

a) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய முந்தைய சர்வகட்சி மாநாட்டில் முன்மொழியப்பட்ட நிலவரம்பற்ற சமூகசபை *** ஒன்றை நுவரெலியா மாவட்டத்தில் செறிவாகவும், ஏனைய பகுதிகளில் சிதறியும் வாழும் இச்சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பணியாற்ற அரசியலமைப்பு ரீதியாக உருவாக்குதல்.

b) மத்திய, மாகாண, உள்ளூராட்சி மட்டங்களில் அதிகாரப்பகிர்வு மற்றும் பரவலாக்கல் ஏற்பாடுகள்.

c) அனைவரையும் உள்வாங்கும் சமச்சீர் பிரதிநிதித்துவ நோக்கில் நியாயமான தேர்தல் மற்றும் நிர்வாக எல்லை மீள்நிர்ணயத்துடன் கூடிய அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள விகிதாசார தேர்தல் முறைமை.

d) நிலம், வீடு, தொழில், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் இதுவரைகாலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிப்பிடிக்கும் நோக்கில் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகள்.

e) தோட்டக் குடியிருப்புப் பிரதேசங்களை அரச பொது நிர்வாக கட்டமைப்பின்கீழ் கொண்டுவந்து தேசிய நீரோட்டத்தில் உள்வாங்குவதன் மூலம் நாட்டின் ஏனைய கிராமிய பிரதேசங்களில் நடைபெறுவதற்கு சமானமாக தோட்டப் பிரதேசங்களிலும் கிராம சேவகர் வலயங்கள், பிரதேச செயலக வலயங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பரவலாக்கப்பட்ட அரச நிறுவனங்களின் நிர்வாக மற்றும் நலவுரிமை சேவைகளைப் பெறுகின்ற முழுமையான குடிமக்களாதல் ** நிலவரம்பற்ற சமூக சபை தொடர்பான விபரமான நகல் யோசனைகள், உங்களது அவதானம் மற்றும் இந்த யோசனைகளை இந்திய நிர்வாக சேவை துறையின் மூலம் விருத்திசெய்து முன்னெடுத்தல் என்பவற்றுக்காக இத்துடன் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளோம்.

### நிலவரம்பற்ற சமூக சபை (Non-Territorial Community Council) இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையர்

1) நாடெங்கும் சிதறி வாழும் சிறுபான்மை மக்களுக்காக நிலவரம்பற்ற சமூக சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.

2) இந்த நிலவரம்பற்ற சமூக சபைகள் அரசியலமைப்பில் இடம்பெற வேண்டும்.

3) நாடெங்கும் சிதறி வாழும் மலையகத் தமிழ் மக்களுக்காக நிலவரம்பற்ற சமூக சபைகள் இயங்க வேண்டும்

4) மேற்குறிப்பிட்ட சிறுபான்மை இனங்களை நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பிரதிநிதித்துவம் உறுப்பினர்கள், இந்த சமூக சபைகளில் நேரடியாக உறுப்பினர்களாக இடம்பெற வேண்டும்.

5) இலங்கை அரச நிர்வாக சேவையின் சிரேஷ்ட தர அரச ஊழியர் இந்த சமூக சபை செயலகத்தின் பிரதம நிர்வாக அதிகார செயலாளராக செயற்பட வேண்டும். இந்த செயலாளருக்கு ஓர் அமைச்சின் செயலாளருக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். செயலக துணை செயலாளரும் நியமிக்கப்பட வேண்டும்.

6) சமூகசபையின் செயலாளருக்கு கீழ், இலங்கை நிர்வாக சேவை, மாகாண நிர்வாக சேவை ஆகியவற்றிலிருந்து உள்வாங்கப்படும் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும்.

7) சமூக சபையின் அவைக்கூட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அவை செயலாளரும், துணைச் செயலாளரும் நியமிக்கப்பட வேண்டும்.

8) இந்தசமூகசபைகளில் தலைமை செயலகங்கள் தேசிய தலைநகரில் அமைக்கப்பட வேண்டும்.

9) நாடாளுமன்றத்தில் மாகாண சபைகளில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் இந்த சமூக சபைகளிலும் முன்வைக்கப்பட வேண்டும்.

10) சமூக சபைகளுக்கு முன்வைக்கப்படும் இந்த மசோதாக்களை ஆய்வுசெய்யும்போது அவை தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனங்களின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார விடயங்களை பாதிக்கும் என கருதப்படுமாயின், அந்த மசோதாக்கள் தொடர்பில் அவசியமான திருத்தங்கள்/மாற்று யோசனைகள் நாடாளுமன்றம், மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

11) நாடாளுமன்றத்திலும் மாகாணசபைகளிலும் முன்வைக்கப்படும் இத்தகைய திருத்தங்கள் எந்தளவு நடைமுறை அதிகாரமுள்ளவை என்பதை உயர்/அரசியலமைப்பு நீதிமன்றங்கள் தீர்மானிக்கும்.

12) தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனங்கள் சார்பாக பின்வரும் துறைகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிக்க, இடைநுழைய, பங்குபற்ற சமூக சபைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

a) ஆரம்ப, உயர்நிலை கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி

b) ஆரம்பநிலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு

c) விளையாட்டு

d) கலாசாரம், மதம், மொழி விவகாரங்கள்

e) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

f) வீடமைப்பு

g) வாழ்வாதாரம்

h) (வேறு எதுவும்)

13) நிலவரம்பற்ற சமூக சபை அவையின் செயற்பாடுகள் மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு ஒத்ததாக மும்மொழி சட்ட பாவனை, சமகால மொழிபெயர்ப்பு உட்பட இருக்க வேண்டும்.

14) ஒரு தலைவர் (தவிசாளர்), ஒரு உப தலைவர் (உப தவிசாளர்) ஆகிய பதவிகளுக்கு சபையின் அங்கத்தவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

15) சமூக சபை தமக்கு ஆலோசனை வழங்க, தலைமைவாய்ந்த விற்பன்னர்கள் அடங்கிய அதிகாரபூர்வமான சான்றோர் குழு ஒன்றை பெயரிட்டு நியமிக்க வேண்டும்.

16) சமூக சபையின் முழுமையான அவைக்கூட்டம் என்பது சபைத் தலைவரின் தலைமையின் நடைபெறும். சபை உறுப்பினர்கள், சான்றோர் குழு உறுப்பினர்கள் அடங்கியதாக இருக்கவேண்டும்.

17) சமூக சபையின் சபை நடவடிக்கை குழுவால் தீர்மானிக்கப்படும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவை கூட்டங்கள் நிகழ வேண்டும்.

18) சமூகசபை அவைக்கூட்டங்களும் சபையின் துறைசார் குழுக் கூட்டங்களும் சபைத் தலைவரின் தலைமையிலும் தலைவர் வருகை தராதபோது உப தலைவர் தலைமையிலும் நடைபெற வேண்டும்.

19) அனைத்து நிர்வாக சுழற்சி மற்றும் அபிவிருத்தி நிதி பயன்பாட்டு செலவீனங்களும் தேசிய பாதீட்டில் ஒதுக்கி தரப்பட வேண்டும்.

20) ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், நாடாளுமன்றம், மாகாண சபைகள், மத்திய, மாகாண அமைச்சுகள், உள்ளூராட்சி மன்றங்கள்,அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அதிகாரிகள் உட்பட அனைத்து அரச நிர்வாக இயந்திரங்களும் சமூக சபைகளை அங்கீகரித்து பணியாற்ற வேண்டும்.

21) சமூக சபைகள் அவசியம் ஏற்படும் பட்சத்தில் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் சமூகங்களின் நல திட்டங்களுக்காக வெளிநாட்டு, உள்நாட்டு உதவிகளை பெறும் அதிகாரம் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய அனைத்து நிதி பரிமாற்றங்களும் நிதி அமைச்சின் வெளிநாட்டு வளப் பிரிவின் (ERD) மூலமாகவே நடைபெற வேண்டும்.

22) அனைத்து தேசிய பாதீட்டு உள்நாட்டு, வெளிநாட்டு நிதி வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பில் சமூக சபை உள்ளக பாதீடு ஒன்றை சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

23) அனைத்து தேசிய பாதீட்டு, உள்நாட்டு, வெளிநாட்டு நிதிப் பயன்பாடுகளும் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

### தமிழ் முற்போக்கு கூட்டணி இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதம் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி, பிரதமர் – இந்திய அரசு

மாண்புமிகு பிரதமருக்கு,

**இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக விரும்பும் சமீபத்தையை இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களது அபிலாஷைகள் மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள்**

இது மலையகத் தமிழர் என்று அறியப்பட்டுள்ள சமீபத்தையை இந்திய வம்சாவளி தமிழ் இலங்கையர்களின் விண்ணப்பமாகும். இலங்கை சமூகத்தில் தனித்துவமும், சமத்துவமும்கொண்ட மக்கள் என்ற அங்கீகாரத்தைக்கோரி தொடர்ந்துவந்த இலங்கை அரசாங்கங்களிடம் நாம் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கைகளுடன் இதுவும் தொடர்கிறது. இலங்கையில் சிங்கள, வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுடன் சமத்துவமான அடையாளம்கொண்ட சமூகமாக வாழ விரும்பும் எமது பேரவாவை இது வெளிப்படுத்துகிறது. 1980 இலிருந்து பல்வேறு அரசாங்கங்கள் முன்னெடுத்த அரசியலமைப்பு சீர்திருத்த செயன்முறைகளுடன் எமது அபிலாஷைகள் தொடர்புற்றுள்ளன.

**சமத்துவமுள்ள குடிமக்கள் என்ற அங்கீகார கோரிக்கைக்கான பின்னணி**

ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை பெறுகின்ற முழுமையான குடிமக்கள் என்ற அங்கீகாரத்தையே சுதந்திரத்தின் பின் மலையகத் தமிழரது அரசியல் தலைமைகள் கோரி வந்துள்ளன. பாரபட்சமின்மை, சமூகத்தின் நலன்களையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் அரசியல் நிர்வாக ஏற்பாடுகள் ஆகியவையே எமது கோரிக்கைகள். நுவரெலியாவில் செறிவாகவும், ஏனைய பிரதேசங்களில் சிதறியும் வாழும் எமது மக்களின் விவகாரங்களை நிர்வகிக்க அவசியமான பாதுகாப்பு மற்றும் அரசியல் அதிகாரக் குரல், சுயகௌரவம், கண்ணியம், சமாதானம் ஆகியவற்றை நோக்கியே இந்தக் கோரிக்கைகள் எழுகின்றன.

மலையகத் தமிழ் சமூகம், அன்று சிலோன் என்று அறியப்பெற்ற இலங்கைக்கு 1800களிலிருந்து பிரித்தானிய முடியரசின் கீழிருந்த நிறுவனங்களால் கொண்டுவரப்பட்டது. சுதந்திரம் பெற்றபோது மலையகத் தமிழ் சமூகமே இலங்கையில் இரண்டாம் பெரும்பான்மை இனமாக திகழ்ந்தது. ஆனால், அன்றைய அரசியலமைப்பின் 29(2) என்ற விதியையும் மீறி சர்ச்சைக்குரிய முறையில் அவர்கள் தம் குடியுரிமையை இழந்தார்கள். அதன்பின்னர் அநேகமானோர் பலவந்தமாக இந்தியாவுக்கு குடிபெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது இச்சமூகத்தின் அரசியல் அந்தஸ்தையும் சமூக பொருளாதார நல்வாழ்வையும் பலவீனப்படுத்தியது.

நீண்டகாலமாக நாடற்று மற்றும் வாக்குரிமையற்று இருந்த நிலைமை, சனத்தொகை சரிவு ஆகியவை இன்றுவரையான நீண்ட பின்னணிகளாக அமைந்து எமது இந்தக் கோரிக்கைகளை உருவாக்கியுள்ளன. இந்தச் சமூகம் எதிர்கொண்ட எம்மீதான திட்டமிட்ட வன்முறைகள், அதன் காரணமான உள்நாட்டு, வெளிநாட்டு இடம்பெயர்வுகள், பாரபட்ச, நேர்மையற்ற விளைவுகள், தொடர்ந்த ஒதுக்கல்கள் ஆகியவை எமது கோரிக்கைகளுக்கு ஏற்புடைமையை ஏற்படுத்துகின்றன.

**இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் நலன்கள் தொடர்பில் இந்தியாவின் நீடித்த அக்கறை**

குடியுரிமை, அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு, வீடமைப்பு, கல்வி ஆகிய விவகாரங்கள் தொடர்பில் இந்தியா காத்திரமான பாத்திரங்களை வகித்துள்ளது. வரலாற்று உறவு, சர்வதேச நியமங்கள், புவியியல் மற்றும் மனிதாபிமான காரணங்கள் இவற்றுக்கான தேவைகளாக அமைந்துள்ளன. குடியுரிமை தொடர்பில் பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பரஸ்பர கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்கள் ஆகியவை கைச்சாத்திட்ட தரப்புகளின் கடப்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. பரஸ்பர ஒப்பந்தங்களினால் மலையக மக்களின் அரசியல் அந்தஸ்தும் சமூக பொருளாதார நலன்களும் பலவீனமடைந்துள்ளன என்ற காரணம் இந்தியாவின் தார்மீக கடப்பாட்டை அதிகரித்துள்ளன.

இலங்கை இந்திய நாட்டு தலைவர்களுக்கு இடையிலான இறுதியான ஒப்பந்தம் 1987இல் கைச்சாத்தானது. ஆனால், அதற்கு முன் நேரு கொத்தலாவல ஒப்பந்தம் (1954), சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறிமா இந்திரா (1974) ஒப்பந்தம் ஆகியவையும் நமது மக்களின் குடியுரிமை மற்றும் நலவுரிமைகள் தொடர்பிலான பரஸ்பர கடப்பாடுகளுடன் செய்யப்பட்டன. மேலும், ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய தலைவர்களது நிர்வாகங்களுடன் இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ண முன்னெடுப்புகள் மூலமும் நீண்டகால குடியுரிமை பிரச்சினைகள் சட்டரீதியாக தீர்த்துவைக்கப்பட்டன.

மாகாண சபைகளை உருவாக்கிய 13ஆம் திருத்தத்தையும் மொழி உரிமைகளை உறுதிப்படுத்திய 16ஆம் திருத்தத்தையும் கொண்டுவர 1987இன் இந்திய இலங்கை ஒப்பந்தம் காரணமாகியது.

மாகாண சபைகள், இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களுக்கும் ஒருமட்ட அதிகாரப்பரவலாக்கலை தந்ததுடன் மலையக மக்களுக்கும் தமது அரசியல் பிரதிநிதித்துவ குரலை ஒலிக்கும் வாய்ப்பை தந்தது. அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மும்மொழிக் கொள்கை, சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் இந்நாட்டின் ஓர் ஆட்சி மொழியாகவும் ஒரு தேசிய மொழியாகவும் அங்கீகரித்ததுடன், ஆங்கில மொழியை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டது.

**இன்றைய அந்தஸ்தும், எமது கோரிக்கைகளும்**

1.5 மில்லியன் இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் இன்றைய அந்தஸ்து நாம் கடந்துவந்த சரித்திரம் எம்மீது திணித்த நாடற்ற நிலைமை, குடியுரிமை தொடர்பிலான நிச்சயமற்ற தன்மை, வாக்குரிமை இழந்தமை ஆகியவற்றின் பிரதிபலனாகும். இது எமது சமுதாயத்தின் சமூக பொருளாதார நலன்களை பாதித்துள்ளது. பெருந்தோட்டங்களில் தொழில் புரியும், வாழும் பிரிவினரே இந்திய வம்சாவளி மலையகத் தமிழருக்குள்ளே வாழும் மிகவும் பின்தங்கிய தரப்பினராகும். மிகவும் குறைந்த மனித வளர்ச்சி குறியீடுகளை கொண்டுள்ள இப்பிரிவினர், நாட்டின் ஏனைய பிரிவினருடன் ஒப்பிடுகையில் ஒதுக்கப்பட்ட பிரிவினராக உள்ளனர். தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு ஏனையவர்களைபோன்று சமவுரிமையுள்ள முழுமையான குடிமக்களாவதை இந்நிலைமை பாதிக்கின்றது.

இலங்கையின் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்ட அனைவரும் வாக்குரிமை, நிலவுரிமை, அரச தொழில் உரிமை, அரச சேவைகளை பெறும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான சம உரிமை மற்றும் உரிமைகளின் சமத்துவம் கொண்டவர்களாவர் என்பதுவே. பொதுவாக,1954 1974 காலவரைக்கு இடைப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றின் அடிப்படை சாராம்சமாகும். இத்தகைய சிந்தனையிலேயே இரண்டு நாட்டின் தலைவர்களும் இந்த விடயங்களை அணுகினர். ஏனைய குடிமக்களுக்கு சமனான முறையில் வாக்குரிமை விவகாரம் முன்னேற்றம் கண்டிருந்தாலும்கூட ஏனைய விவகாரங்களில் முன்னேற்றம் மிக மெதுவாகவோ, வரையறுக்கப்பட்டோ அல்லது முழுமையாக நிறுத்தப்பட்டோ இருக்கின்றது. தேசிய சராசரிகளை ஒப்பிடும்போது சுகாதார தரவுகளில் தலைமுறை பின்னடைவு தெரிகிறது. தோட்டப்புறங்களில் சுகாதார சேவைகள் இன்னமும் முழுமையாக தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே கொண்டுவரப்படவில்லை. வருந்தத்தக்களவில் நாம் அரச தொழில்களிலும் உயர் கல்விதுறையிலும் சமத்துவமாக நிர்வாகப் பணிகளிலும் இடம்பெறவில்லை.

இலங்கை அரசுகளுடனான எமது சமூகத்தின் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் இவ்விவகாரங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பிட்ட கொள்கை பாரபட்சங்கள் மற்றும் நிறுவனத் தடைகள் ஆகியவற்றை கடந்து இன்றுவரை நாம் பெற்றுள்ள உத்தரவாதங்களையும் ஏற்பாடுகளையும் கூட தற்போதைய தேர்தல்முறை மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் பின்னடைவுக்கு உள்ளாக்கி விடுமோ என அச்சம் கொண்டுள்ளோம்.

இலங்கை அரசின் அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் நடைபெறும் இப்பின்னணியில் பின்வரும் கோரிக்கைகளை இலங்கை அரசை கவனத்தில் எடுக்கச்செய்வதில் உங்கள் நல்லெண்ண உறவை பயன்படுத்துமாறு கோருகிறோம்;

i. பதின்மூன்றாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்துடன் மாகாண சபைத் தேர்தல்களை தாமதமின்றி உடன் நடத்தல்.

ii. தமிழுக்கு சம அந்தஸ்து மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் அடங்கிய மும்மொழிக் கொள்கை ஆகியவற்றை அறிமுகப்படுத்திய பதினாறாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம்.

iii. தேசிய நீரோட்டத்தில் அமைப்புரீதியான ஒருங்கிணைவுடன் இலங்கை சமூக பரப்பில் தனித்துவ அடையாளம் கொண்ட அங்கமாக மலையக சமுதாயம் முழு சமத்துவமான குடியுரிமையை பெற்று வாழ.

a) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய முந்தைய சர்வகட்சி மாநாட்டில் முன்மொழியப்பட்ட நிலவரம்பற்ற சமூகசபை ★★ ஒன்றை நுவரெலியா மாவட்டத்தில் செறிவாகவும் ஏனைய பகுதிகளில் சிதறியும் வாழும் இச்சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பணியாற்ற அரசியலமைப்புரீதியாக உருவாக்குதல்.

b) மத்திய, மாகாண, உள்ளூராட்சி மட்டங்களில் அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கல் ஏற்பாடுகள்.

c) அனைவரையும் உள்வாங்கும் சமச்சீர் பிரதிநிதித்துவ நோக்கில் நியாயமான தேர்தல் மற்றும் நிர்வாக எல்லை மீள் நிர்ணயத்துடன் கூடிய அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள விகிதாசார தேர்தல் முறைமை.

d) நிலம், வீடு, தொழில், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் இதுவரைகாலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிப்பிடிக்கும் நோக்கில் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகள்

e) தோட்டக்குடியிருப்புப் பிரதேசங்களை அரச பொது நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்து தேசிய நீரோட்டத்தில் உள்வாங்குவதன் மூலம் நாட்டின் ஏனைய கிராமிய பிரதேசங்களில் நடைபெறுவதற்கு சமானமாக தோட்டப் பிரதேசங்களிலும் கிராம சேவகர் வலயங்கள், பிரதேச செயலக வலயங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கிராமிய, பிரதேச மாவட்ட மட்டங்களில் பரவலாக்கப்பட்ட அரச நிறுவனங்களின் நிர்வாக மற்றும் நலவுரிமை சேவைகளை பெறுகின்ற முழுமையான குடிமக்களாதல்.

★★ நிலவரம்பற்ற சமூக சபை தொடர்பான விபரமான நகல் யோசனைகள், உங்களது அவதானம் மற்றும் இந்த யோசனைகளை இந்திய நிர்வாக அதிகாரத்துறையின் மூலம் விருத்திசெய்து முன்னெடுத்தல் என்பவற்றுக்காக இத்துடன் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளோம்.



# மீண்டும் ஆரம்பிக்கப்போகும் மருதூர் போராட்டம்:

## "அதா"வை நம்பிக் கெட்டது சாய்ந்தமருது!

**நூருல் ஹுதா உமர்**

பல மொழிகள், பல்லினம், பல சமூகம், பல நாகீகங்கள் என வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இலங்கைத் தீவில் முஸ்லிம்களை 100 சதவீதம் கொண்ட ஓரே ஊர் என்றால் அது சாய்ந்தமருது. இந்த சாய்ந்தமருது நகரமானது, கிழக்கு மாகாணத்தில் அதிகளவான நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ள அம்பாறையில் அமைந்துள்ள புராதன நகரங்களில் ஒன்றாகும். வயலும், வர்த்தகமும், கடலும், கல்வியும் என சகல வளங்களும் கொண்ட இந்த நகர் தனக்கான நகர சபையை கோரி இரட்டை தசாப்தம் கடந்தும் தவமிருக்கிறது என்பது நாடறிந்த உண்மை.

வந்தவர் போனவரெல்லாம் தங்களின் வீழ்ந்த செல்வாக்கை மீள விளையச்செய்ய சாய்ந்தமருதூர் மண்ணில் உழுத வார்த்தைகளில் முதன்மையானது நகர சபையை பெற்றுத்தருவோம் என்பதே. வாக்குகள் எண்ணி அறுவடை முடிந்து சாக்குகளின் வாய் கட்டுப்பட்டால் காணாமல் போன அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலுக்கு அதே கோஷத்துடன் வந்து வென்று சென்ற வரலாறுகளே நடந்தேறியுள்ளன. இதில் இந்த அரசியல்வாதியும் விதிவிலக்கல்ல.

சாய்ந்தமருது பிரதேசம் இற்றைக்கு 124 வருடங்களுக்கு முன்பிருந்தே உள்ளூராட்சி சபையைக்கொண்டிருந்த விடயம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு வரலாற்றுத் தடயமாக காணப்படுகிறது. சாய்ந்தமருது பிரதேசம் ஒரு வரலாற்றுப் பூர்வீகம் கொண்டது என்பது பல ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மை. இலங்கை, பிரித்தானியரின் ஆட்சியில் இருந்த காலத்தில் மகாராணியின் பிரதிநிதியான ஆளுநரின் பிரகடனத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது உட்பட 5 பிரதேசங்கள் 1897.02.19ஆம் திகதியிலிருந்து செயற்படத்தக்கதாக காணிட்டரி சபைகளாக குடியேற்ற செயலாளரினால் அரச வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டது. 1897ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி வெளிவந்த சிலோன் அரசாங்க வர்த்தமானி, அன்றைய குடியேற்ற செயலாளர் ஈ நோயல் வர்கேர் பிரித்தானிய ஆளுநரின் ஆணைப்படி பிரகடனம் ஒன்றை வெளியிட்டார்.

அப்பிரகடனத்தின்படி 1892ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க "சிறிய நகரங்கள் காணிட்டரி கட்டளைச் சட்டத்தின்" 2ஆம் பிரிவிற்கிணங்க காணிட்டரி சபைகள் என்ற அந்தஸ்துடன் கிழக்கு மாகாணத்தின் கிராமங்களான காத்தான்குடி, ஏறாவூர், சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந்துறை போன்றன அன்றைய நிறைவேற்றுச் சபையின் ஆலோசனைக்கமைய ஆளுநரின் செயலாளரினால் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை அரசியல் காரணங்களுக்காக சில அரசியல்வாதிகள் பின்புலத்தில் செயற்பட்டு இல்லாமல் ஆக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தைப் பயன்படுத்தி சாய்ந்தமருது பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது மட்டுமல்லாது, இங்கு அரசியல் தலைமைக்குப் பதிலாக அரசியல் முகவர்கள் செயற்பட ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடு இன்றுவரை தொடர்கிறது. இவ்வாறு எமது தொன்மைமிக்க சபை இல்லாமல் ஆக்கப்பட்டது வரலாற்றுத் தவறு மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை மறைக்கின்ற செயற்பாடுமாகும் .

இப்படியான சாய்ந்தமருதில் நகரசபைக்கான போராட்டம் பல வருடங்களாக உள்ளார்ந்தமாக புகைந்துகொண்டிருந்தது பல்வேறு காரணங்களை சகித்துக்கொண்டும், சில சிலுசிலுப்புகளுடனும் இருந்துவந்தாலும் திடீரென உக்கிரமடைந்தது. சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபையை வென்றெடுக்குமுகமாக பிரதேச மக்களினால் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு மக்கள் போராட்டம் உக்கிரமடைந்து இயல்புநிலை முற்றாக பாதிப்படைந்தது. கறுப்புப்பட்டி அணிந்த பெருந்திரளான இளைஞர்கள், வயோதிபர்கள் வீதியில் அமர்ந்து தமது சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

புரட்சி, எழுச்சியென உக்கிரமடைந்து எழுந்த மக்கள் சக்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை போன்ற பிரதேசங்களில் தோடம்பழ சின்னத்தில் சுயாதீன அணியாக களமிறங்கி மக்கள் எழுச்சியுடன் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தை தவிர, ஏனைய வட்டாரங்களான சாய்ந்தமருதில் 06 வட்டாரங்களையும், மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்திலும் மக்களின் ஏகோபித்த அரசியல் அதிகாரத்தை ஜனநாயக ரீதியாகப் பெற்றுக்கொண்டனர். இதன் மூலம் 10 உறுப்பினர்கள் தெரிவானார்கள். அதனை பயன்படுத்தி தனியான நகரசபைக்கான போராட்டத்தில் பல அதிகாரங்களையும், பல்வேறு இழப்புகளையும் சந்தித்த நிலையில், தனியான நகர சபை என்ற இலக்கிற்காக மாத்திரம் முழுமையாக அர்ப்பணித்து சாய்ந்தமருது தனியான நகர சபைக்கான போராட்டத்தில் மக்களின் ஆணையை உறுதிப்படுத்துவதோடு, தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கென சில விடயங்களை முன்வைத்தனர். ஆனால், அவையெல்லாம் அச்சிட்ட காகிதங்களில் இருந்ததே தவிர, செயற்பாட்டில் இருக்கவில்லை. இதனால் போராட்டத்தின் திசை மாறி தனிநபர் இலாப நோக்கை நோக்கிய பாதையாக சிலரின் தெரிவுகள் இருந்தமையால் ஒற்றுமை சீரழிந்து போராட்டத்தின் பலம் குன்றியது. பின்னாளில் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லாவின் தொடர்புகள் மூலம் நோ போலுக்கு சிக்ஸ் அடித்ததுபோன்று கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பிலான கூட்டத்தில் சாய்ந்தமருதுக்கான நகர சபைக்கான பழம் நழுவி பாலில் விழுந்தது. தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா அதற்கு பதிவை தானாக முன்வந்து வைத்தவுடன் அவரூடாக கடந்த 2020 காதலர் தினத்தன்று சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியானதொரு நகர சபையை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட அரசாங்கம், ஆறு நாட்களுக்குப் பின்னர், அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்ய முடிவு செய்தது.

இதனை வர்த்தமானி வெளிவந்த அந்த தினமே தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், சாய்ந்தமருது மக்கள் அன்றைய தினம் அவருக்கு வழங்க இருந்த கௌரவ வரவேற்பை அவர் முற்றாக நிராகரித்து கிழக்கு வாசலில் அமைதியாக இருந்துகொண்டார். அன்றே மருதூரின் பலரும் சந்தேகங்கொண்டதை ஆறு நாட்களின் பின்னர் அமைச்சர் பந்துல உறுதிப்படுத்தினார். புதிதாக உள்ளூராட்சி சபைகளை வழங்கவேண்டிய சகல இடங்களுக்கும், ஒரே நேரத்தில் அவற்றை வழங்குவதற்காகவே இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செய்யப்பட்டதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அன்றைய அமைச்சரவைப் பேச்சாளரும் உயர் கல்வி அமைச்சருமான பந்துல குணவர்தன கூறினார். சாய்ந்தமருதுக்கான சபை எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றால், ஏற்கனவே வழங்கப்பட்டதை ஏன் இரத்துச்செய்ய வேண்டும்? வழங்கப்பட்டதை அவ்வாறே விட்டுவிட்டு, ஏனைய சபைகளைப் பின்னர் வழங்கலாமே! "இந்தச் சபையை வழங்கியமைக்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகளாலேயே, இவ்வாறு இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதா?" என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த அமைச்சர், இல்லை என்றார். அவ்வாறாயின், வழங்கப்பட்டதை விட்டு விட்டு ஏனையவற்றைப் பின்னர் வழங்கலாம். ஆனால், அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. ஏன் எனும் கேள்விக்கு பதில் இப்போது எல்லோருக்கும் முன்னால் தெளிவாக இருக்கிறது.

இலங்கையில் கிராம சபைகள் போன்று உள்ளூராட்சி மன்றங்கள் உருவானதன் பின்னரோ அல்லது 1987ஆம் ஆண்டில் தற்போதைய பிரதேச சபைகள் போன்று உள்ளூராட்சி மன்றங்கள் உருவானதன் பின்னரோ புதிதாக உருவாக்கப்பட்ட முதலாவது உள்ளூராட்சி சபையே பிரகடனப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது நகர சபை என்பதைபோலதான், சில பேரினவாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனால், தனியாக உருவாக்கப்பட்ட முதலாவது உள்ளூராட்சி சபை, சாய்ந்தமருது நகர சபையல்ல. அதற்கு முன்னரும் சில இடங்களில் புதிதாகத் தனித்தனியான உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சில இடங்களில், ஏற்கனவே இருந்த உள்ளூராட்சி சபைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 1987ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, அக்காலத்தில் இருந்த நான்கு கிராம சபைகள் ஒன்றிணைக்கப்பட்டே கல்முனை பிரதேச சபை உருவாக்கப்பட்டது. அது பின்னர் நகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டு, 2001ஆம் ஆண்டில் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது.

2011ஆம் ஆண்டில், அக்கரைப்பற்று மாநகர சபையின் உருவாக்கமும் மற்றோர் உதாரணமாகும். அப்போது, அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ்வே உள்ளூராட்சி அமைச்சராகக் கடமையாற்றினார். அவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, அங்கிருந்த பிரதேச சபையைப் பிரித்து, மாநகர சபையொன்றை உருவாக்கினார். இதற்கு அக்காலத்தில் "கபே" அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது. பிரதேச சபையொன்று முதலில் நகர சபையாகத் தரமுயர்த்தப்படாமல், நேரடியாகவே மாநகர சபையாகத் தரமுயர்த்தப்படுவது முறையானதல்ல என்பதே அவர்களது வாதமாகியது. அத்தோடு, அக்கரைப்பற்று பிரதேச சபையிலிருந்து அக்கரைப்பற்று மாநகர சபை பிரித்தெடுக்கப்பட்ட போது, மீதமாக இருக்கும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் வாக்காளர் எண்ணிக்கை, சுமார் 4,000 எனவும் கபே கூறியது. ஆனால், அந்த எதிர்ப்புகளை மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. அதற்கு, மஹிந்த தரப்பு ஆதரவு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவிக்கவும் இல்லை. அதே அரசாங்கத்தில் இருந்தவர்கள்தான், இப்போது சாய்ந்தமருது நகரசபைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அப்போது அமைச்சராக இருந்த அதாவுல்லா ஏன் சாய்ந்தமருத்துக்கான சபையை பிரகடனம் செய்யவில்லை எனும் கேள்விக்கு கோமாளித்தனமான பதில்களே அத்தரப்பிடம் இருக்கிறது.

தனது மக்களின் தாகத்தை தணிக்க அடம்பிடித்து அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த மலையகத் தலைவர் மனோவின் போராட்டம் வெற்றியளித்தது. 2017 முடிவடைவதற்குள், புதிதாக 6 பிரதேச சபைகளுடன் நுவரெலியாவும் அம்பகமுவவும் சேர்த்து எட்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. சாய்ந்தமருத்துக்கு போராட்டங்கள் மட்டுமே மிஞ்சின. இவைகளெல்லாம் இப்படியிருக்க, மருதூரின் கனவை வைத்து அரசியல் செய்தவர்கள் பலரும் இன்று அந்த மக்களினால் பாவிகளாக பார்க்கப்படுகிறார்கள்.

மு.கா. தலைவர் ஹக்கீம் எழுதிக்கொடுக்க அப்போதைய பிரதமர் ரணில் வாக்குறுதி கொடுத்தார், இத்துறைக்கு பொறுப்பான அப்போதைய அமைச்சர் பைசர் முஸ்தபா நேரடியாக வந்து வாக்குறுதி கொடுத்தார். பெசில், மஹிந்த சாய்ந்தமருதில் வைத்தே உறுதியளித்த சம்பவங்கள், ஹக்கீம், ரிஷாட், அதாவுல்லா என எல்லோரும் இந்த சபையை வைத்து அரசியல் செய்தார்கள், ஹரீஸ் சபை கொடுக்காமல் தடுக்கிறார், கல்முனை மக்கள் சாய்ந்தமருத்துக்கு சபை கொடுப்பதை தடுக்கிறார்கள் என பல கதைகள் இருக்கின்றன. ஆனால், இவற்றின் உண்மைத்தன்மை, பின்னணி தொடர்பில் நாம் சிந்திக்கவேண்டியது காலத்தின் அவசியமாக உள்ளது. சாய்ந்தமருது சபை கொடுப்பதை ஏன் ஹரீஸ் தடுக்கவேண்டும்? இதனால் ஹரீஸுக்கு இருக்கும் நன்மை என்ன? ஹரீஸ் இப்போது வாழும் ஊர் சாய்ந்தமருதுதானே? ஹரீஸுக்கு எதிராக பல ஒலிபெருக்கிகளை கட்டி கோஷமிட்டும் 4000 அளவில் சாய்ந்தமருது மக்கள் மு.காவுக்கு அதிலும் குறிப்பாக ஹரீஸுக்கு வாக்களிக்க காரணம் என்ன? ஹரீஸ் தடுக்கிறார் என்றால் அவரை விட பலம் பொருந்திய ஹக்கீம், ரிஷாட் பெற்றுக் கொடுக்காமல் விட்டது ஏன்? எனும் பல கேள்விகளுக்கு ஒழுங்கான விடை தெரியாது பலரும் தமது அரசியல் வளர்ச்சிக்கான கதைகளை பரப்பிக்கொண்டிருந்த சூழ்நிலையில் சாய்ந்தமருது மக்கள் பணிமனை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெசிலுடன் ஒப்பந்தமொன்றை செய்து மொட்டுக்கு முட்டுக் கொடுத்தது. ஆனால், சாய்ந்தமருது மக்களில் கணிசமானவர்கள் சஜித்துக்கு ஆதரவை தெரிவித்ததை தேர்தல் பெறுபேறுகள் தெளிவாக முன்வைத்தன. இதனால் தேர்தல் முடிந்த கையோடு ஆசியாவின் சிறந்த இராஜதந்திரிகளில் ஒருவராக நோக்கப்படும் பெசில் சாய்ந்தமருது ஒப்பந்தம் தொடர்பில் வானத்துக்கும் பூமிக்கும் குதித்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இவைகளெல்லாம் இப்படியிருக்க, தேசிய காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள் ஊடாக மறைமுக உறவைக்கொண்டிருந்த சாய்ந்தமருது பிரமுகர்கள் பலரின் முயற்சியினால் அந்த உறவு வெளிப்படையாக காட்டப்பட்டு கடந்த பொதுத்தேர்தலில் சாய்ந்தமருது மண், நகர சபையை முன்வைத்து தேசிய காங்கிரஸுக்கு அடமானம் வைக்கப்பட்டது. இதில் சாய்ந்தமருதைச் சேர்ந்த முக்கிய வர்த்தகப் பிரமுகர் ஒருவரை வேட்பாளராக களமிறக்க சாய்ந்தமருது முக்கியஸ்தர் ஒருவரின் பரிந்துரையுடன் தயாராக இருந்த தேசிய காங்கிரஸ் தலைவரை மாளிகைக்காடு- சாய்ந்தமருதை சேர்ந்த பிரமுகர்களின் ஆலோசனைப்படி, சாய்ந்தமருது பள்ளிவாசலின் தீர்மானத்தை முன்வைத்து சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எல்.எம். சலீம் வேட்பாளராக குதிரை சின்னம் இலக்கம் மூன்றில் நிறுத்தப்பட்டார். வென்றால் சாய்ந்தமருது நகரசபையும், போனஸாக சலீமுக்கு பிரதியமைச்சும் என பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டு தேர்தல் நடந்து முடிந்தன. கருணா அம்மானின் வருகை, ஏமாந்த சாய்ந்தமருது மக்களின் வாக்குகள் ஊடாக தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா எம்.பியானார்.

10,401 வாக்குகள் தேசிய காங்கிரஸுக்காக கல்முனை தொகுதியில் அளிக்கப்பட்டது. இதில் மென்மையான போக்குக்கொண்ட சட்டத்தரணி ஏ.எல்.எம்.றிபாஸ், கல்முனை மண்ணுக்கான போராளிகளில் ஒருவரான பிரபல ஆசிரியர் நிசாத் செரீப், மக்களின் நன்மதிப்பை பெற்ற சலீம் டீ.எஸ். என மக்களால் அறியப்படும் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்.சலீம் என மூவர் களமிறங்கினர். இதில் நிசாத் செரீப், சட்டத்தரணி றிபாஸ் ஆகியோரின் வாக்குகளை கழித்தால் சாய்ந்தமருது தேசிய காங்கிரஸுக்கு அளித்த வாக்குகள் எத்தனை என்பதை வாக்கெண்ணும் நிலையத்தில் இறுதி முடிவறிவிக்கும்வரை இருந்த கட்டுரையாளரான என்னால் கூற முடியும். இப்படி கல்முனை தொகுதியில் அதிகமான வாக்குகளை வழங்கிய சாய்ந்தமருது மண்ணுக்கு அதாவுல்லா எம்.பி. கொடுத்த வஹ்தாவை (வாக்குறுதியை) நிறைவேற்றுவாரா என்பதே இன்றைய மில்லியன் டொலர் கேள்வி ?

கல்முனை மாநகர சபை ஆட்சியாளர்களின் ஓரக்கண் பார்வை அரசியலில் உருவெடுத்த இந்த போராட்டம் இன்று அதாவுல்லா எம்.பியின் தலையின் மீது திணிக்கப்பட்டுள்ளது. பெசில், கோட்டா, மஹிந்த என மொட்டின் சகலரினதும் எதிர்ப்பை சம்பாதித்த ஆளுந்தரப்பிலுள்ள எதிர்த்தரப்பாக இருக்கும் 11 கட்சிகளின் கூட்டின் முக்கியஸ்தராக, முன்னிலை செயற்பாட்டாளராக இருக்கும் அதாவுல்லா இந்த அரசில் எதையும் சாதிக்க முடியாது என்பதே வெளிப்படை உண்மை. வேட்பாளர் நியமனம், அமைச்சரவை பதவி ஏமாற்றம், அரசுக்கு எதிரான போக்குகள் என செல்லாக்காசாக மாறியிருக்கும் அதாவுல்லாவை நம்பி பிரயோசனம் இல்லை என்பதை சாய்ந்தமருது நன்றாக கணித்துவிட்டது. நகர சபை போராட்டத்தின் முன்னிலை போராளியாக இருந்த பள்ளித்தலைவர் "உமர்முக்தர்" வை.எம். ஹனிபாவின் இறுதிச் சடங்கில் (ஜனாஸாவில்) கூட அதாவுல்லா கலந்துகொள்ளவில்லை. அவர் கூறிய காரணங்கள் உப்புசப்பு இல்லாதது. அவரின் கூடப்பிறந்த யாராவது மரணித்திருந்தால் வந்திருக்க மாட்டாரா? பழையதை மறந்து செயற்படுகிறார். அவர் இன்று எம்.பி. கதிரையில் இருக்க காரணமானவரின் ஜனாஸாவில் கலந்துகொள்ள கூட மனமில்லாத அதாவுல்லா எப்படி செய்நன்றி செய்வார் எனும் வாதம் பரவலாக சாய்ந்தமருதில் இப்போது பேசப்பட்டு வருகிறது.

அதாவுல்லாவை நம்பி, மொட்டில் நேரடியாக களமிறங்கிய ரிஸ்லியை நிராகரித்த சாய்ந்தமருது மண், ரிஸ்லி செய்த அபிவிருத்தியின், சேவைகளின் ஒரு பகுதியை கூட அதாவுல்லாவினால் சாய்ந்தமருது மண் பெறவில்லை என்பதே உண்மை. சாய்ந்தமருது மக்கள் பாரியளவில் வாக்களிக்கத் தவறிய ஹரீஸ், முஷாரப், பைசால், வீரசிங்க, திலக், விமலவீர என்று எல்லோரும் மருதூருக்கு சேவை செய்துள்ளனர். அவர்கள் செய்த சேவையில் 5/6 மடங்கு சேவையை அதாவுல்லா சாய்ந்தமருதுக்கு செய்திருக்க வேண்டும். அதுவும் செய்யப்படவில்லை. வண்ட் வீதியும் நிறுத்தப்பட்டுள்ளது. அதாவுல்லா ஆரம்பித்த உள்ளக வீதிகளும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. நாங்கள் நம்பி ஏமாந்துவிட்டோம் என கடந்த பொதுத்தேர்தல் மேடைகள் சகலதிலும் தேசிய காங்கிரஸுக்காக பிரசாரம் செய்த சாய்ந்தமருது முக்கியஸ்தர்கள் புலம்ப ஆரம்பித்துவிட்டனர்.

மறுபுறத்தில் சிரேஷ்ட மற்றும் விசேட தரத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எல்.எம். சலீம் இப்போது சேவையில் இருந்திருந்தால் மாகாண பிரதம செயலாளராக, அரசாங்க அதிபராக, அமைச்சின் செயலாளராக வந்திருக்க வாய்ப்பிருக்கிறது. அவற்றையெல்லாம் உதறிவிட்டு பலரும் அதாவுல்லாவை நம்ப வேண்டாம். அவர் ஏமாற்றுக்காரன் என்பதையெல்லாம் கவனத்திற்கொள்ளாது ஊரின் நலனுக்காக அதாவுல்லாவுடன் சென்றார். ஆனால்,இன்று அரசனுமில்லை, புருஷனுமில்லை எனும் நிலைக்கு மக்கள் அபிமானம் பெற்ற சலீம் டீ.எஸ். மாறியிருப்பது கவலையான விடயம். இப்படி நகர சபை ஏமாற்றம் மட்டுமல்ல, அதிகார ஏமாற்றங்களையும் சாய்ந்தமருது சந்தித்துள்ளது என்பது வெளிப்படையான உண்மை. இருந்தாலும் உயர்மட்ட அதிகாரி ஒருவரின் பரிந்துரையுடன் ஆறுதல் பரிசாக பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் பதவி அவருக்கு கிட்டியது. அது வயிறூதியவனுக்கு காற்றுபோனது போன்றே அமைந்துள்ளதை நாம் காணலாம்.

எல்லாவற்றையும் அவதானித்த அவரும், அவர் சார்ந்த நகர சபை போராட்ட ஊர் போராளிகளும் இப்போது மாற்று முடிவுக்கு தயாராகின்றனர். சாய்ந்தமருதில் 100 வாக்குகள் கூட இல்லாத பலரும் பிரமுகர் அந்தஸ்தை பெற முக்கியஸ்தர்கள் பலரும் தே.காவிலிருந்து கழன்று கொண்டிருக்கிறார்கள். மருதூரில் பலத்த சரிவை தே.கா. சந்தித்துள்ளது.

இதனால் மாவட்டத்திலும் பலத்த சரிவை அவர்கள் கண்டுவருகிறார்கள்.

இந்த ஆட்சியில் சாய்ந்தமருதுக்கான நகர சபை மலர வேண்டுமாக இருந்தால் ஆட்சியாளர்களின் செல்லப் பிள்ளைகளின் ஆசிர்வாதமும், தலையசைத்தலும் தேவையாக உள்ளது. சாய்ந்தமருது மண்ணின் தாகத்தை தணிக்க பெசில், மஹிந்த, கோட்டா என பலரும் அறிந்த இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க யாரால் முடியும் என்பதே இன்று சாய்ந்தமருது தேடவேண்டிய விடயமாக அமைந்துள்ளது. யார் அந்த செல்லப்பிள்ளை? மக்களுக்கு தெரியும். காலம் கனிந்தால் பல உண்மை சேதிகள் வெளிவரும். இப்போது தேர்தல் நெருங்குகிறது. மீண்டும் வேதாளம் ஏறத் தயாராகிறது சாய்ந்தமருது போராட்டம். முற்றுப்புள்ளியில்லா பிரச்சினையாக இருக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வரப்போவது யார்?











## சீனாவுக்கு "நோ"; இந்தியாவுக்கு "யெஸ்"!

# இலங்கை மின் திட்ட ஒப்பந்தங்கள் கைமாறியது எப்படி?





இலங்கை, கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துவருகிறது. அந்நிய செலாவணி கையிருப்புகள் குறைந்துபோனதால், எரிபொருள் இறக்குமதி செய்யமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது. பெற்றோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு, அத்தியாவசியப் பொருட்களின் விலையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. நிலக்கரி பற்றாக் குறையால் மின் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதனால், இலங்கை முழுவதும் தினசரி 10 மணிநேரம் மின்வெட்டு அமுலில் இருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சீனாவின் ஆதரவோடு இலங்கை செயல்படுத்தவிருந்த மின் திட்ட ஒப்பந்தங்களைத் தட்டிப் பறித்திருக்கிறது இந்தியா. இது எப்படிச் சாத்தியமானது?

**சீனாவின் கடன் வலை**

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட, சீனாவிடம் இலங்கை அரசு பெற்ற கடன்களும் முக்கிய காரணங்களுள் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. பல்வேறு திட்டங்களுக்காக அளவுக்கதிகமான கடனை சீனாவிடமிருந்து பெற்றிருக்கிறது இலங்கை அரசு. இதனால், பல திட்டங்களுக்குச் சீனாவுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது இலங்கை. இதன் காரணமாக சீன நிறுவனமான ஹசினோசோர் எடெக்வின் நிறுவனத்துக்கு இலங்கையின் நெடுந்தீவு, அனலைத்தீவு, நயினாதீவுகளில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திசெய்யும் ஒப்பந்தங்களை வழங்க முடிவு செய்திருந்தது இலங்கை அரசு.

**தட்டிப்பறித்த இந்தியா**

தமிழ்நாட்டிலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள இந்தத் தீவுகளில் சீனாவின் மின்சாரத் திட்டம் வருவதற்குக் கவலை தெரிவித்திருந்தது இந்தியா. மேலும், இதே திட்டத்தைக் கடனாக இல்லாமல் மானியத்துடன் செய்து தர இந்தியா முன்வந்தது. எனவே, சீனாவுடனான ஒப்பந்தத்தை உடனடியாக நிறுத்தியது இலங்கை. இதனால் அதிருப்தியடைந்த இலங்கையிலுள்ள சீனத் தூதரகம், இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்நிலையில், இலங்கை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நேரில் சந்தித்துப் பேசினார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர். இந்தச் சந்திப்பின்போது, கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, இந்தியா பல்வேறு பொருளாதார உதவிகள் செய்ய தயாராக இருப்பதாக உறுதியளித்தார் ஜெய்ஷங்கர். ஏற்கனவே பல்லாயிரம் கோடி ரூபாவை இலங்கைக்கு நிதியுதவியாக அளித்திருக்கிறது இந்தியா. மேலும் பொருளாதார உதவிகளைச் செய்ய இந்தியா தயாராக இருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது இலங்கை அரசு.

**கோட்டாபய ராஜபக்ஷ - ஜெய்ஷங்கர் சந்திப்பு**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் ஆகியோருக்கிடையிலான இந்தச் சந்திப்புக்குப் பின்னர், சீனாவுக்கு வழங்கப்படவிருந்த மின்சார உற்பத்தித் திட்டங்களை இந்தியாவுக்கு மாற்றி வழங்க இலங்கை அரசு முன்வந்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்தார். அப்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்தியா, மின் உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

**இந்தியாவின் மூன்றாவது மின் திட்டம்**

ஏற்கனவே இந்தியா சார்பில் இலங்கையின் கிழக்கு சாம்பூர் நகரில் தேசிய அனல்மின் நிலையத்தின் சூரிய மின் உற்பத்தித் திட்டமும், மன்னார், பூனேரி பகுதிகளில் அதானி குழுமத்தின் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களுக்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியிருந்தன. அந்தவகையில், தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தியாவுக்குக் கிடைத்திருக்கும் இந்த ஒப்பந்தம் மூன்றாவது மின் திட்ட ஒப்பந்தமாகும்.

முன்னதாக இலங்கையின் எதிர்க்கட்சியினர், "புறவாசல் வழியாக அதானி குழுமம் இலங்கைக்குள் நுழைவது, நம் நாட்டின் மின் உற்பத்தி முறையைச் சீர்குலைத்துவிடும். இந்தியப் பிரதமர் மோடி நிதியுதவி செய்வதால், இலங்கையின் வளங்களை அவரின் நண்பர் அதானிக்கு விற்க முடியாது" என்று அதானி குழுமத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

**மின் திட்டம் கைமாறியது எப்படி?**

இலங்கையில், இந்தியா செயல்படுத்தவிருக்கும் மின் திட்டங்கள் குறித்து பேசும் அரசியல் பார்வையாளர்கள் சிலர், "சீனா, இலங்கைக்கு ஏராளமான கடனுதவி வழங்கி, நாட்டைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது. இனிமேலும் சீனாவிடம் உதவிபெற்றால், நாட்டையே அவர்களிடம் அடகு வைக்கும் நிலை ஏற்படும் என்பதை இப்போதுதான் இலங்கையின் ஆட்சியாளர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. எனவேதான், சீனாவிடம் கொடுக்கவிருந்த மின் திட்டங்களை இந்தியாவுக்கு மாற்றி வழங்கியிருக்கிறது இலங்கை அரசு. மேலும், இந்தியா கடனுதவி மட்டுமல்லாமல், சில திட்டங்களுக்கு மானிய உதவிகளும் வழங்குவதால், இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முனைப்பிலிருக்கிறது கோட்டாபய ராஜபக்ஷ அரசு" - என்கிறார்கள்.

**வருண்.நா**

# இலங்கை, பாக். நிலைமை போன்று இந்தியாவுக்கு வரவே வராது. ஆனால்...

"எங்கெல்லாம் சர்வாதிகார ஆட்சி நடக்கிறதோ அங்கெல்லாம் பொருளாதார வீழ்ச்சி நிகழும். அதுதான் இலங்கையில், பாகிஸ்தானில், துருக்கியில், வெனிசுலாவில், ரஷ்யாவில் நடந்து கொண்டிருக்கிறது" - என்கிறார் இந்திய பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன்.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்துள்ளதால், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யமுடியாத சூழலில் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. எரிபொருள் வாங்குவதற்காக மக்கள், விடிவதற்கு முன்பாகவே எரிபொருள் நிலையத்துக்குச் சென்று காத்திருக்கின்றனர். ஐந்து மணிநேரம் காத்திருந்தே எரிபொருள் வாங்க முடிகிறது. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக பல குடும்பங்கள் 3 வேளை உணவை 2 வேளையாக குறைத்துள்ளன. உணவு விடுதிகள் மூடப்பட்டு வருகின்றன. மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

மற்றொரு அண்டைநாடான பாகிஸ்தானில், ஆளுங்கட்சி மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்துள்ளன. வாக்கெடுப்பு நடக்கும் முன்னரே ஆளுங்கட்சிக்கான ஆதரவை கூட்டணிக் கட்சியே விலக்கிக்கொண்டு பிரதமர் இம்ரான் கானை சிக்கலில் ஆழ்த்தியுள்ளது. பாகிஸ்தான் அண்மைக்காலமாக மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. இதற்கெல்லாம் இம்ரான் கானின் மோசமான ஆட்சியே காரணம் என்று அங்கு எதிர்ப்புக் குரல் கிளம்பியுள்ளது. ஆளும் பி.டி.ஐ. கட்சியோ, அரசைக் கவிழ்க்க வெளிநாட்டுச் சதி நடக்கிறது, பிரதமரைப் படுகொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று வழக்கமான அரசியல் செய்துகொண்டிருக்கிறது.

இந்தியாவின் இரண்டு அண்டைநாடுகள், சார்க் கூட்டமைப்பிலுள்ள நாடுகளில் இரண்டு மிகவும் மோசமான பொருளாதார வீழ்ச்சி, அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியனவற்றை எதிர்கொண்டுள்ள நிலையில், இது இந்தியா மீது தாக்கத்தை ஏற்படுத்துமா? அப்படி ஏற்படுத்தும் என்றால், என்ன மாதிரியான சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தெற்காசிய பிராந்தியத்தில் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துமா என்ற கேள்விகள் எழுகின்றன.

இது குறித்து பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசனிடம் கேள்விகளை முன்வைத்தோம். அவர் அளித்த பேட்டியிலிருந்து..

**இலங்கை, பாகிஸ்தான் என நமது அண்டை நாடுகள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?**

எங்கெல்லாம் சர்வாதிகார ஆட்சி நடக்கிறதோ அங்கெல்லாம் பொருளாதார வீழ்ச்சி நிகழும். இது வரலாற்று நிகழ்வு. அதுதான் இலங்கையில், பாகிஸ்தானில், துருக்கியில், வெனிசுலாவில், ரஷ்யாவில் நடந்துகொண்டிருக்கிறது.

**இந்தியாவில் இதுபோன்றதொரு பொருளாதார நெருக்கடி வரலாம் என்ற அச்சம் நிலவுகிறதே..**

இந்தியாவில் இப்போதைக்கு இப்படியான பொருளாதார நெருக்கடி வராது. ஏனெனில், இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த மன்மோகன் சிங் ஆட்சியாக இருக்கட்டும், அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியாக இருக்கட்டும், இல்லை அதற்கும் முந்தைய நரசிம்ம ராவ் ஆட்சியாக இருக்கட்டும், அவர்கள் யாரும் வெளிநாடுகளில் கடன்கள் வாங்கவில்லை. இருந்த வெளிநாட்டுக் கடன்களையும் 1994-95இலேயே நாம் அடைத்துவிட்டோம். இன்று வெளிநாடுகளில் இந்திய கம்பெனிகள் கடன் பெற்றுள்ளன. ஆனால், இந்திய அரசு தனிப்பட்ட முறையில் கடன் வாங்கவில்லை. இப்போதைய சூழலில் வெளிநாட்டுக்குக் கடன் பாக்கி செலுத்தவேண்டிய சூழலை ஏற்படுத்தாததால் முன்பிருந்த தலைவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி சொல்லவேண்டும். இதில் அரசியல் கட்சி பேதம் ஏதுமில்லை.



பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன்

உலக வங்கிகளில் பெரும்பாலும் மாநில அரசுகள் கடன் வாங்குகின்றன. அவை ரூபாவாகவே கடனைத் திருப்பிச் செலுத்தும். உலக வங்கியும் இந்தியச் சந்தை ரூபா பாண்டுகளை கோரி கடன் பெற்றுள்ளது. இந்தியா இதற்கு முன்னதாக வெளிநாடுகளில் பாண்டுகளாக கடன் பெற்றுள்ளது. அந்நியச் செலாவணியாகப் பெற்றதில்லை. சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எவ்வில்) கடன் பெற்றிருக்கிறோம். 2008இல் உலகமே பொருளாதார மந்தநிலையை சந்தித்தது. அப்போது அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் சர்வதேச நிதியத்திடமிருந்து தங்கத்தைப் பெற்றுக்கொண்டு பணம் கொடுத்தார். 2009இல் அவர் மேற்கொண்ட இந்தப் பொருளாதார நடவடிக்கையும் இந்தியா வெளிநாட்டுக் கடன் இல்லாமல் தப்பித்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

**அப்படியென்றால் நம் தேசம் வேறு என்ன மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்..?**

"இந்தியாவின் (Wholesale Price Index) மொத்த விலை குறியீட்டு எண் 13 வீதமாக உயர்ந்துள்ளது. இது ஓராண்டாகவே இரட்டை இலக்கத்தில் இருக்கிறது. ஆனால், நமது ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் நாட்டில் விலைவாசி உயரவில்லை எனக் கூறுகிறார். அதற்குக் காரணம் (Consumer Price Index) நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கணிப்புகள். நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் (CPI) என்பது போக்குவரத்து, உணவு மற்றும் மருத்துவப் பாதுகாப்பு போன்ற நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒரு கூட்டு விலைகளின் சராசரி எடையை ஆய்வு செய்யும் அளவீடாகும். ஆனால், இந்த நுகர்வோர் பட்டியலிலுள்ள 20% பொருட்கள் இப்போது இந்திய மக்கள் பயன்பாட்டிலேயே இல்லாத சிடிக்கள், வீடியோ கேசட்டுகள், கேசட் ரெக்கார்டர் போன்ற பல பொருட்கள் உள்ளன. அப்படியிருக்க இந்த நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் (CPI) வைத்து ஆளுநர் விலைவாசி உயர்வு இல்லை எனக் கூறுகிறார்.

ஆனால், விலைவாசி 13 வீதத்துக்கும் மேல் உயர்ந்துகொண்டிருக்கிறது. அதனால், இலங்கையைப் போல் இந்தியாவில் பொருள் இல்லாமல் பற்றாக்குறை வராது. ஆனால், மக்களின் வாங்கும் சக்தி குறைந்துவிடும். அதாவது பணத்தின் மதிப்பு குறைந்து மக்களால் பொருட்களை வாங்க முடியாமல் போகும் நிலை வரும். இன்றைக்கு அதற்கான சாட்சி பெற்றோல், டீசல் விலை. கடந்த ஆண்டு நாம் 78 ரூபாவுக்கு வாங்கிய ஒரு லீற்றர் பெற்றோலை இன்று ரூ.107க்கு வாங்குகிறோம். கேஸ் விலை ரூ.700இல் இருந்து ரூ.1000இற்கு அதிகரித்துள்ளது. விலைவாசி ஓராண்டில் 13% அதிகரித்துள்ளது. இதுதான் இந்தியாவின் பிரச்சினை. பணவீக்கம் அதிகரிக்கும் போது பணத்தின் மதிப்பு நிச்சயமாகக் குறையும். அதுவே நம் நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது.

**சரி, இலங்கை, பாகிஸ்தான் நிலைவரத்தால் இந்தியாவுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தாக்கம் என்னவாக இருக்கும்?**

"இலங்கைப் பிரச்சினையால் தமிழகத்திற்கு பாதிப்பு உண்டு. இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகள் வரத் தொடங்கியுள்ளனர். இதில் இன்னும் அதிக ஊடக வெளிச்சம் பாய்ச்ச வேண்டும். இலங்கையில் போர் நடந்தபோது அகதிகள் வந்ததைவிட இப்போது அதிகம் பேர் வருவார்கள். இதை சமாளிக்க இந்திய அரசு குறிப்பாக தமிழக அரசு தயாராக வேண்டும்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரையில், அங்கு அரசியல் ஸ்திரத்தன்மை குறையக் குறைய ஸ்டேட் ஸ்பான்ஸர்ட் இஸ்லாமிக் டெரரிஸ்ட்ஸ் எனப்படும் அரசாங்க மறைமுக ஆதரவுடனான தீவிரவாதிகள் அதிகமாக உருவாவார்கள். அது நம் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

**நன்றி - இந்து தமிழ்**

மப்றூக்

முதலையொன்றிடம் சிக்கிய தனது மகனை, உயிரைப் பணயம் வைத்துப் போராடி மீட்டெடுத்த தாயொருவரின் தைரியமிக்க செயலை இருட்டடிப்புச் செய்துவிட்டு, அந்த வீரச்செயலை செய்ததாக வேறொரு நபரை அடையாளப்படுத்தி, அவருக்கு அரச நிறுவனமொன்று விருது வழங்கியுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஐ.எல்.ஜமீலா. இவர், சேதனப் பசளை தயாரிப்பதற்காக அருகிலுள்ள மாவடிப்பள்ளி ஆற்றில் நீர்த் தாவரங்களைச்




# முதலையினால் இழுத்துச் செல்லப்பட்ட மகனை போராடி மீட்ட தாய்;

## வீரப் பெண்ணென வேறொரு நபருக்கு விருது வழங்கப்பட்டுள்ளதாக புகார்:



## நடந்தது என்ன?

சேகரித்துக்கொண்டிருந்தவேளை, அவருடன் சென்றிருந்த 13 வயதுடைய அவரின் மகன் பாஹிம் என்பவரை முதலையொன்று திடீரென இழுத்துக்கொண்டு, ஆற்றினுள் மறைந்துள்ளது. இதன்போது உடனடியாக நீருக்குள் இறங்கிய ஜமீலா, முதலையுடன் மிக நீண்டநேரம் போராடி தனது மகனை மீட்டெடுத்தார். இச்சம்பவம் கடந்த செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி நடந்தது.

இதன்போது ஜமீலாவின் மகன் பாஹிம் கடுமையான முதலைக் கடிக்கு ஆளானதோடு, அவரின் இடது கால் எலும்பும் முறிந்தது. இதனையடுத்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர், 18 நாட்கள் சிகிச்சைபெற்ற பின்னர் வீடு திரும்பியிருந்தார்.

இந்நிலையில், ஜமீலாவின் மகனை முதலையிடமிருந்து காப்பாற்றிய வீரப் பெண் எனக் கூறி உம்மு சலாமா எனும் பெண்ணொருவருக்கு நிந்தவூர் பிரதேச செயலகம், மகளிர் தினத்தையொட்டி விருது வழங்கி கௌரவித்துள்ளது. ஆனால், தனது மகனை முதலை இழுத்துக்கொண்டு போனபோது, தனக்கு யாரும் உதவி செய்யவில்லை என்றும், முதலையுடன் போராடி தனது மகனை தனியாகவேதான் மீட்டதாகவும் ஜமீலா கூறுகின்றார்.

### பிரசவ வலியை உணர்ந்தேன்

"சம்பவ தினம் ஒரு சனிக்கிழமை. இயற்கை பசளை தயாரிப்பதற்கான நீர்த் தாவரத்தை சேகரிப்பதற்காக மாவடிப்பள்ளி ஆற்றுக்குச் சென்றிருந்தேன். என்னுடன் உம்மு சலாமாவும் வந்திருந்தார். அன்று பாடசாலை இல்லை என்பதால் எனது மகனும் கூடவே வந்தார்."

நீர்த் தாவரங்களை சேகரித்துவிட்டு, ஆற்றங்கரையில் வளர்ந்திருந்த கீரையை பறித்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் கரையில் நின்றுகொண்டிருந்த எனது மகனை முதலை இழுத்துக்கொண்டு போனது. அதனை நான் காணவில்லை. சேற்றுக்குள் முதலை மறைந்துபோனது. அப்போது உம்மு சலாமா எனும் அந்தப் பெண்தான், ''உனது பிள்ளையை முதலை இழுத்துக்கொண்டு போகிறது, இனி கிடைக்காது, ஆற்றுக்குள் இறங்காமல் வா போவோம்'' என்று சத்தமிட்டார்.

நான் உடனே நீருக்குள் பாய்ந்தேன். ஆனால் அந்தப் பெண்ணோ அருகிலிருந்த வீதியை நோக்கி நடந்தார். ஆற்றுக்குள் எனது பிள்ளையை தேடினேன், சேற்றுக்குள் கைகளை விட்டுத் துழாவிப் பார்த்தேன். அப்போது எனது பிள்ளையின் முடி, எனது கையில் பட்டது. முடியைப் பிடித்து இழுத்தேன். மகன் கைகளை உயத்தினார். அவரின் தோள்களைப் பிடித்துக் கொண்டேன். ஆனால், மகனின் காலை முதலை கௌவிக்கொண்டிருந்தது.

"நான் மகனை வெளியில் இழுத்தெடுக்க முயற்சித்தபோது, முதலையும் மறு பக்கமாக இழுத்துக்கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் முதலை மீண்டும் சேற்றுக்குள் எனது மகனைக் கொண்டு சென்றது. இதனைக் கண்ட உம்மு சலாமா என்கிற அந்தப் பெண் அங்கு வந்து, ''உனது பிள்ளையை முதலை விடமாட்டாது. நீயும் அங்கு நின்றால் உன்னையும் இழுத்துக்கொண்டு போய்விடும். மற்றைய பிள்ளைகளுக்காவது நீ உயிருடன் இருக்க வேண்டும். கரைக்கு வா'' என்று சத்தமிட்டார்.

"ஆனால் எனது உயிர் போனாலும் பிள்ளையை இழக்கக்கூடாது என்கிற முடிவில் இருந்தேன். எனது போராட்டத்தின்போது, ஒரு கட்டத்தில் வெளியே தெரிந்த முதலையின் தலையில் எனது கையால் ஓங்கிக் குத்தினேன். முதலையின் பல்லில் எனது கை பட்டிருக்க வேண்டும்; எனது கையில் பெரிய காயமொன்று ஏற்பட்டு இரத்தம் கொட்டத் தொடங்கியது. ஆனால், மகனை மீட்கும் முயற்சியை நான் விடவில்லை. தொடர்ந்தும் முதலையின் தலையில் ஓங்கிக் குத்தினேன். திடீரென முதலை வாயைத் திறந்தவாறு தலைகீழாகப் புரண்டது. உடனடியாக எனது மகனைத் தூக்கி எடுத்துக்கொண்டு கரைக்கு வந்தேன்" என்று அந்த திகில் அனுபவத்தை நம்முடன் ஜமீலா பகிர்ந்துகொண்டார்.

"எனக்கு 06 பிள்ளைகள் உள்ளனர். பிரசவ வலிகளை நான் அனுபவித்துள்ளேன். எனது மகனை அந்த முதலையிடம் போராடி மீட்டுக் கொண்டு கரைக்கு வந்தபோது, விவரிக்க முடியாத சோர்வாக இருந்தது. பிரசவ வலியைப் போல், பெரும் வேதனையை அப்போது நான் உணர்ந்தேன்" - என்றார் ஜமீலா.

"இந்த சம்பவத்தின்போது எனது மகன் மயக்கமடையாமல் நினைவுடன்தான் இருந்தார். அவரைக் கரைக்குக் கொண்டு வந்தபோது, அவசர அம்பியூலன்ஸை உதவிக்கு அழைக்கும் இலக்கத்தை எனக்குக் கூறினார். அவரின் காலில் பாரிய காயங்கள் இருந்தன. அங்கு நின்றிருந்த உம்மு சலாமா அவருடைய கைபேசி மூலம் தொடர்புகொண்டு ஓட்டோ (முச்சக்கர வண்டி) ஒன்றை அழைப்பித்தார். ஒரு வழியாக மகனை சம்மாந்துறை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தேன். உம்மு சலாமாவும் என்னுடன் வந்தார். அதன் பிறகு அவரை நான் காணவில்லை. எனது மகனை அவர் ஒரு தடவை கூட வந்து பார்க்கவில்லை. ஆனால், அவர் எனது மகனை முதலையிடமிருந்து போராடி காப்பாற்றியதாகக் கூறி, பிரதேச செயலகத்தினால் விருது வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு அதிர்ச்சியாக உள்ளது.

"வழங்கப்பட்டுள்ள விருது பெரியதா, சிறியதா என்பது பற்றி இங்கு பிரச்சினையில்லை. எனது மகனை காப்பாற்றுவதற்கு ஒருசிறு உதவியைக் கூடச் செய்யாத ஒருவருக்கு, எனது மகனைக் காப்பாற்றியதாகக் கூறி, வீரப்பெண் எனப் புகழ்ந்து, விருது வழங்கியிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த விருதினை அவருக்கு வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து நடந்தவற்றைச் சொன்னேன். இந்த விருதை வழங்கியதன் மூலம் ஓர் உண்மையைச் சாகடித்து, பொய்யை வாழ வைத்துள்ளீர்கள் என அவரிடம் கூறினேன்" என ஜமீலா மேலும் தெரிவித்தார்.

### உண்மையை சொன்னதற்காக மிரட்டப்பட்டாரா?

உம்மு சலாமா என்பவருக்கு மேற்படி விருதினை வழங்குவதற்கு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஹனீப் என்பவரே தீர்மானித்துள்ளார்.

இந்த விருது வழங்கப்பட்டமைக்கு தன்னுடைய எதிர்ப்பினைத் தெரிவித்தமையை அடுத்து குறித்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் தான் அச்சுறுத்தப்பட்டதாக ஜமீலா கூறுகின்றார்.

"இந்த விருது வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் சிறு வயதுடைய உனது மகனை வேலை செய்வதற்கு நீ அழைத்துப் போனதாகவும் அப்போதுதான் அவனை முதலை இழுத்துச் சென்றது எனவும் கூறி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மூலம் உனக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வைப்பேன் என கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பலர்

**''வழங்கப்பட்டுள்ள விருது பெரியதா, சிறியதா என்பது பற்றி இங்கு பிரச்சினையில்லை. எனது மகனை காப்பாற்றுவதற்கு ஒருசிறு உதவியைக் கூடச் செய்யாத ஒருவருக்கு, எனது மகனைக் காப்பாற்றியதாகக் கூறி, வீரப்பெண் எனப் புகழ்ந்து, விருது வழங்கியிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த விருதினை அவருக்கு வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து நடந்தவற்றைச் சொன்னேன். இந்த விருதை வழங்கியதன் மூலம் ஓர் உண்மையைச் சாகடித்து, பொய்யை வாழ வைத்துள்ளீர்கள் என அவரிடம் கூறினேன்" என ஜமீலா மேலும் தெரிவித்தார்.**







முன்னிலையில் என்னை மிரட்டினார்" என பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் ஜெமீலா தெரிவித்தார்.

இதேவேளை, உம்மு சலாமா என்பவருக்கு தேசிய ரீயில் வழங்கப்படும் விருதுகளைப் பெற்றுக்கொடுக்க, சிபாரிசு செய்யப்படவுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் மேற்படி பெண்ணுக்கு விருது வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்த நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.எம்.ஹனீப் என்பவரைத் தொடர்புகொண்டு பேசியபோது, முதலையினால் இழுத்துச்செல்லப்பட்ட சிறுவனை அவனின் தாயுடன் சேர்ந்து தானும் களத்தில் இறங்கி போராடி மீட்டதாக உம்மு சலாமா என்பவர் கூறியதாகவும் அதனாலேயே அவருக்கு குறித்த விருதினை வழங்குவதற்கான தீர்மானத்தை தான் எடுத்ததாகவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, குறித்த விருதை உம்மு சலாமா எனும் பெண்ணுக்கு வழங்குவதற்கு முன்னர் சம்பவ தினம் நடந்த விடயம் பற்றி பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயிடமோ அல்லது சிறுவனிடமோ கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹனீப் கேட்டறிந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**''அங்கு நின்றிருந்த உம்மு சலாமா அவருடைய கைபேசி மூலம் தொடர்புகொண்டு ஓட்டோ(முச்சக்கரவண்டி) ஒன்றை அழைப்பித்தார். ஒரு வழியாக மகனை சம்மாந்துறை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தேன். உம்மு சலாமாவும் என்னுடன் வந்தார். அதன்பிறகு அவரை நான் காணவில்லை. எனது மகனை அவர் ஒரு தடவை கூட வந்து பார்க்கவில்லை. ஆனால், அவர் எனது மகனை முதலையிடமிருந்து போராடி காப்பாற்றிய தாகக் கூறி, பிரதேச செயலகத்தினால் விருது வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு அதிர்ச்சி யாக உள்ளது.''**

"உம்மு சலாமா மாதர் சங்கமொன்றின் தலைவியாக உள்ளார். அவர் அந்த சிறுவனை முதலையிடமிருந்து காப்பாற்றியதாகக் கூறியிருந்தார். அதற்காக அவருக்கு அந்த விருதை வழங்கத் தீர்மானித்தோம். ஆனால், இது தொடர்பில் சிறுவனின் தாயிடம் நான் விசாரிக்கவில்லை" என்றார் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹனீப்.

இதேவேளை, சிறுவனின் தாய்க்கு எதிராக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மூலம் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தான் சொன்னது உண்மைதான் எனவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கூறினார்.

உம்மு சலாமாவுக்கு மட்டுமன்றி, சர்வதேச மகளிர் தினத்தையொட்டி தாம் நடத்திய விழாவில் மேலும் பல பெண்களுக்கும் அவர்கள் வெளிக்காட்டிய திறமைகளுக்காக விருதுகள் வழங்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

### பொறாமையில் பொய் சொல்கிறார்

விருதுபெற்ற உம்மு சலாமா எனும் பெண்ணிடம் அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் புகார் தொடர்பில் பேசியபோது, "ஜமீலாவும் நானும் சேர்ந்துதான் அவரின் மகனை முதலையிடமிருந்து போராடி மீட்டோம்" என்கிறார்.

தனக்கு விருது கிடைத்த பொறாமையில்தான் இப்போது அதனை ஜமீலா மறுக்கிறார் எனவும் உம்மு சலாமா கூறுகின்றார்.

நிந்தவூர் பிரதேச செயலகத்தில் நடந்த சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்துகொள்வதற்குதான் சென்றிருந்ததாகவும் ஆனால், அங்கு தனக்கு விருது வழங்கப்படவுள்ளதை தான் அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவித்த உம்மு சலாமா, ''எதிர்பாராத விதமாகவே எனக்கு அந்த விருது கிடைத்தது" - என்கிறார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன் பாஹிம் உடன் பேசியபோது, தனது தாய்தான் மிகக் கடுமையாகப் போராடி முதலையின் பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றியதாகக் கூறியதோடு, விருது வழங்கப்பட்ட பெண் உம்மு சலாமா என்பவர் அப்போது கரையில் கொஞ்ச தூரத்தில் நின்றிருந்ததாகவும் தெரிவித்தார்.

பாஹிம் இப்போது பாடசாலைக்குச் சென்று வருகிறார்.

ஆனால்,அவரின் காலில் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் பூரணமாக சுகமாகவில்லை.

பாஹிமின் பெற்றோருக்கு 06 பிள்ளைகள். மூவர் பெண்கள், மூவர் ஆண்கள். பாஹிம் கடைசிப்பிள்ளை. பாஹிமுடைய சகோதரிகள் இருவர் பல்கலைக்கழகத்தில் கற்று வருகின்றனர். பாஹிமுடைய தந்தை பேக்கரியொன்றில் வேலை செய்கிறார்.

"முதலையிடமிருந்து எனது பிள்ளையை காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்த பிறகு அவரை அருகிலிருக்கும் வீதிவரை தூக்கிக் கொண்டுபோவதற்கு உம்மு சலாமாவை நான் அழைத்தபோது, முடியாது என்று கூறி விட்டார். அப்போது வீதியால் வந்த ஒருவர்தான் உதவினார். அவரும் நானுமாகச் சேர்ந்துதான் எனது மகனை சுமந்துகொண்டு போனோம்.

"அப்படியான ஒருவருக்கு எனது மகனை போராடிக் காப்பாற்றியதாகக் கூறி விருது கொடுக்கப்பட்டிருப்பதை எப்படி நான் பொறுத்துக்கொள்வது" - என்று கேட்கிறார் ஜமீலா.

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
## Business world

# மக்கள் வங்கியின் புறக்கோட்டைக் கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது

**ம**க்கள் வங்கி அண்மையில் தமது புறக்கோட்டை கிளையினை இல. 92A, பிரதான வீதி, கொழும்பு – 11 எனும் முகவரியில் மேம்படுத்தப்பட்ட புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ள இந்த கிளையானது, அதிநவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை அதன் சுய வங்கிச் சேவை அலகின் மூலம் வழங்குகிறது. இதன்மூலம் வாடிக்கையாளர்களுக்கு தங்கள் பரிவர்த்தனைகளை கிழமையின் 7 நாட்களும் 24 மணிநேரமும் செய்து கொள்ள முடியும்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (கொடுப்பனவு, டிஜிட்டல், செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு) கே.பீ.ராஜபக்ஷ, பிரதி பொது முகாமையாளர் (Channel Management) மஹிந்த பிரேமநாத், பிரதி பொது முகாமையாளர் (வங்கி ஆதரவுச் சேவைகள்) லலித் விதான, உதவி பொது முகாமையாளர் (Chaneel Management)




சந்திரகுமார, சந்தைப்படுத்தல் தலைவர் - நாலக விஜேவர்தன, வடகொழும்பு பிராந்திய முகாமையாளர் - S.L.M.A.S. சமரதுங்க, உதவி பிராந்திய முகாமையாளர்கள் ரஜீவ் கருணாநாயக்க, கௌசல்யா ஹெட்டியாராச்சி, சேனானி ராஜபக்ஷ உள்ளடங்கலாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, புறக்கோட்டை பொலிஸ் நிலையம் - நளின் டி சில்வா, ஜம்பட்டா வீதி பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரி – சம்பத் பெரேரா, கிளை முகாமையாளர் A.J.C. ஷிரான் பெரேரா மற்றும் ஏனைய வங்கி அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வன் கோல்பேஸ் பிசினஸ் டவர் வளாகத்தில் Campus One திறந்துவைப்பு

ampus One கல்வி நிறுவனத்தின் புதிய கற்கை நிலையம் அண்மையில் கோல்பேஸ் பிசினஸ் டவர் வளாகத்தில் சிறப்பு விருந்தினர்கள் பலரின் பங்கேற்புடன் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. எமது நாட்டு மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான சர்வதேச தரத்திலான கல்வி வசதிகளுடன் கொழும்பு துறைமுக நகரத்துக்கு முன்பாக அழகிய சூழலில் இந்த புதிய கற்கை நிலையம் அமைந்துள்ளது. அதிநவீன அம்சங்களுடன் இலங்கையில் இதற்கு முன்னர் கண்டிராத கல்வி வசதிகளை எமது நாட்டு மாணவர்களுக்கு வழங்கும் வகையில் திறக்கப்பட்டுள்ள Campus One புதிய கற்கை நிலையத்தை இலங்கையின் உயர் கல்வித் துறையில் மகத்தான மைல்கல்லாக குறிப்பிட முடியும்.

இலங்கையின் வர்த்தகத் துறையின் மாபெரும் அடையாளமாக விளங்கும் வன் கோல்பேஸ் பிசினஸ் டவர் வளாகத்தில் Campus One புதிய கற்கை நிலையத்தை நிறுவ முடிந்துள்ளமை தொடர்பாக தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக நிறுவனத்தின் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

# QUIKPAK நிறுவனத்துக்கு சிறந்த தேசிய கைத்தொழில்முயற்சியாளருக்கான தங்கப்பதக்க விருது

**தே**யிலை பொதியிடல் சார்ந்த உற்பத்தியில் முதன்மை நிறுவனமாக விளங்குகின்ற QUIK PAK தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் (IDB) ஏற்பாடுசெய்யப்பட்ட சிறந்த கைத்தொழில்முயற்சியாளருக்கான விருது வழங்கும் விழாவில் பொதியிடல் மற்றும் கடதாசி சார்ந்த உற்பத்திப் பிரிவின் பாரியளவிலான பிரிவின் தங்கப்பதக்க விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் கொழும்பு வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற விருது விழாவில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் மொஹமட் அஜ்மால் தமக்கான தங்கப்பதக்க விருதை பெற்றுக்கொண்டார்.



# Hemas Outreach மையத்தினால் உலக டவுன் சிண்ட்ரோம் தினம் அனுஷ்டிப்பு



**ஹே**மாஸ் குழுமத்தின் சமூகப் பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் பிரிவான Hemas Outreach மையம், மாற்றுத்திறன் படைத்த சிறுவர்களுக்கான AYATI தேசிய நிலையத்துடன் இணைந்து உலக டவுன் சிண்ட்ரோம் தினத்தை மார்ச் 16ஆம் திகதி ராகமவில் அமைந்துள்ள AYATI நிலையத்தில் அனுஷ்டித்திருந்தது. தமது சமூக முன்னெடுப்பான 'அனைவரையும் சமமாக நடத்துவோம் (Treat All Alike)' என்பது பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் இலக்குடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. டவுன் சிண்ட்ரோமினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்காக தயாரிக்கப்பட்ட விசேட புதிய பாடல் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. "அனைவரையும் சமமாக நடத்துவோம்" என்பது டவுன் சிண்ட்ரோமிலுள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு அவர்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்வதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், சமூகத்தில் அவர்களை உள்வாங்குவதை வலியுறுத்தி வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

AYATI Trust ஸ்ரீலங்கா மற்றும் Hemas Outreach மையம் ஆகியவற்றின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷிரோமி மாசகொரால கருத்துத் தெரிவிக்கையில், "சமூகத்தில் அதிகளவு கவனம் செலுத்தப்படாத டவுன் சிண்ட்ரோமினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "அனைவரையும் சமமாக நடத்துவோம்" எனும் சமூக முன்னெடுப்பு அமைந்துள்ளது. ஹேமாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த நாம் உள்ளடக்கமான சமூகம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், சகல சிறுவர்களின் நலன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றோம்.

Hemas Outreach மையத்தினால் முன்னெடுக்கப்படும் எமது செயற்பாடுகள் இந்த இலக்கை எய்துவதில் கவனம் செலுத்துகின்றன. இலங்கையின் சுமார் 20% ஆன சிறுவர்கள் ஏதேனும் ஒருவகையான மாற்றுத்திறனைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. Ayati Trust ஸ்ரீலங்காவினால் உள்ளடக்கமான சமூகம் உருவாக்கப்பட்டு, அதனூடாக மாற்றுத்திறன் படைத்த நபர்கள் எதிர்கொள்ளும் ஓரங்கட்டல் மற்றும் விசேடத்துவமான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை போன்றவற்றை இல்லாமல் செய்வது இலக்காக அமைந்துள்ளது.

உலக டவுன் சிண்ட்ரோம் தினத்தை அனுஷ்டிக்கும் நிலையில், இந்தக் கறையை இல்லாமல் செய்வதற்காக இணைந்து பணியாற்றவேண்டியது முக்கியமானதாகும். "ஆரோக்கியமான வாழ்க்கை" என்பதை ஊக்குவிக்கும் நிறுவனம் எனும் வகையில், குடும்பத்தாருக்கு தமது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கு உள்ளடக்கமான உலகை ஏற்படுத்திக்கொடுக்க எதிர்பார்க்கின்றோம்.

அதனூடாக அதிகளவு தேவைப்படும் சமூக ஆதரவைப் பெறவும் எதிர்பார்க்கின்றோம். இந்த சிறுவர் விசேட திறமைகளைக் கொண்டுள்ளனர். அவை வரவேற்று ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்களை சமமாக நடத்தி அவர்களுடன் இணைந்து நாம் கொண்டாட வேண்டும்" - என்றார்.

# லங்காடைல்ஸ் நுகர்வோரைப் பாதுகாக்க தயாரிப்புகளுக்கு QR குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது

**இ**லங்கையின் டைல்ஸ் தயாரிப்பு%களில் சந்தையின் முன்னணியாளரான லங்காடைல்ஸ் கொள்வனவுக்கு முன்னர் வாடிக்கையாளர்கள் தமது தயாரிப்புகளுக்கான அதிகூடிய சில்லறை விலை பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டு சௌகரியமான முறையில் அவற்றை அணுகுவதற்கும், வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்துவதற்கும் வசதியளிக்கும் வகையில் அண்மையில் QR குறியீட்டை அறிமுகப்படுத்தியது.

QR குறியீட்டை ஸ்கான் செய்வதன் ஊடாக உற்பத்திகளின் அதிகூடிய சில்லறை விலைகளை அறிந்துகொள்ள முடியும். மேலதிகமாக, 0117622822 என்ற விசேட வாடிக்கையாளர் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது www.lankatiles.com என்ற இணையத்தின் ஊடாகவும் இந்தத் தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

# அகில இலங்கை பால் உற்பத்தியாளர் சங்கத்தின் புதிய தலைவராக பினேஷ் பனன்வல தெரிவு

**அ**கில இலங்கை பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (AIDA) புதிய தலைவராக வட்டவளை பால் உற்பத்தி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பினேஷ் பனன்வல அதன் மூன்றாம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Richlife Dairy Private Limitedஇன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நான்கு ஆண்டுகளாக சங்கத்தின் நிறுவுனர் தலைவராகவும் இருந்த நிஷாந்த ஜயசூரியவின் வெற்றிடத்திற்கே பினேஷ் பனன்வல நியமிக்கப்பட்டுள்ளார். பனன்வல முன்னர் சங்கத்தின் துணைத் தலைவராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.



# Samsung Electronics Benchmarkஇல் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது

msung Electronics நிறுவனம் 2021ஆம் ஆண்டின் World Benchmarking Alliance Digital Inclusion Benchmarkஇல் உள்ள 150 நிறுவனங்களில் நான்காவது இடத்தைப் பிடித்ததாக சமீபத்தில் அறிவித்தது. 2020ஆம் ஆண்டில் பத்தாவது இடத்திலிருந்து இந்த ஆண்டு நான்காம் இடத்திற்கு முன்னேறியதற்கு அதன் நிலையான மற்றும் டிஜிட்டல் பொறுப்புடனான செயல்பாடுகளே முக்கிய காரணியாகும்.

UNஇன் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக தனியார் துறையின் பங்களிப்புகளை வடிவமைக்க 200இற்கும் அதிகமான உலகளாவிய பிராந்திய மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கு இடையே உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பையே WBA பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மனித உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் Digital Inclusion உள்ளிட்ட ஏழு முக்கிய வகைகளில் கவனம் செலுத்தும் நிறுவனங்களை WBA ஆராய்கிறது.

WBA கடந்த ஆண்டு தனது முதல் Digital Inclusion Benchmarkஐ அறிமுகப்படுத்தியது. தொழில்நுட்பத்திற்கான அணுகலை மேம்படுத்துவதில் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்தல், நம்பகமான பயன்பாட்டை வளர்ப்பது மற்றும் வெளிப்படையாகவும் நெறிமுறை ரீதியாகவும் புத்தாக்கங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் நிறுவனங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்கிறது.

# இலங்கையில் 'Janalipa' மற்றும் 'EZ Industrial Stove' அடுப்பை வெளியிடும் EZ Stove

**வ**ழக்கமான LPG சமையல் எரிவாயு அடுப்புகளுக்கு மாற்றீடாக காப்புரிமை பெற்ற கரியால் இயங்கும் இரண்டு புதிய தயாரிப்புகளை Janalipa மற்றும் EZ Industrial Stove அடுப்பை EZ Stove அண்மையில் வெளியிட்டுள்ளது. EZ Stove என்பது ஒரு திருப்புமுனைமிக்க சமூக நிறுவனமாகும். இது சமூகங்களுக்கு அதிகாரம் வழங்கும் அதேநேரத்தில் சூழல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான விடயங்களிலிருந்து EZ Stove அடுப்புகளுக்கு நிலைபேறான ஒரு மாற்றீடாகும்.

குறிப்பாக, தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியின் கீழ் இது ஒரு சிறந்த மாற்றீடாகும். தற்போதுவரை, அசல் வடிவமைப்புடனான 1,00,000இற்கும் அதிகமான EZ Stove அடுப்புகள் விற்பனையாகியுள்ளன. இதன்மூலம் அத்தகைய மாற்றீட்டை நோக்கிய பொதுமக்களின் ஆர்வம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

Janalipa என்பது EZ Turbo Charcoal Stove கரி அடுப்பின் செலவு குறைந்த பதிப்பாகும். தேங்காய் ஓட்டு கரி மூலம் எரியும், அதிக வெப்பநிலையைத் தாங்கும் வகையிலான களிமண்ணால் அதன் உடல் ஆக்கப்பட்டுள்ளதுடன், உயர் தரத்திலான வார்ப்பு இரும்பினால் செய்யப்பட்ட தட்டு ஆகியவற்றை இது கொண்டுள்ளது. வேகமான விசிறி (turbo fan) வசதியானது, குறைந்த புகை, குறைந்த சாம்பல் போன்றவற்றிற்கு உதவுகிறது. இது தொடர்பான மேலதிக தகவலுக்கு அல்லது கொள்வனவுக்கு, www.janalipa.lk இணையத்தளத்தைப் பார்வையிடவும்.



# ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் 4Ever Skin Naturals உடன் தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது



**ஜோ**ன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (JKH)இன் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கப் பிரிவான John Keells Research (JKR) ஆனது தனது முதன்முதல் தொழில்நுட்ப உரிம ஒப்பந்தமாக 2022 மார்ச் 15 அன்று 4Ever Skin Naturals (Pvt) Ltd உடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரான கிறிஷான் பாலேந்திரா மற்றும் 4Ever Skin Naturals (Pvt) Ltd இன் ஸ்தாபகரும், தலைவருமான சாந்தனி பண்டார ஆகியோர் முறையே அந்தந்த நிறுவனங்களின் சார்பாக இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் நிறுவனம் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளைக்கொண்ட முதல் 10 இலங்கை நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

**இ**லங்கையில் முழு அளவிலான காப்புறுதி சேவைகளையும் வழங்கி வருகின்ற ஒரு நிறுவனமான அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ், இலங்கையில் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளைக் கொண்ட மிகச் சிறந்த 10 நிறுவனங்களில் ஒன்றாக இலங்கையின் பட்டய தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தால் CPM Sri Lanka) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற பட்டய தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தின் சர்வதேச முகாமைத்துவ மாநாட்டில் வைத்து இந்த அங்கீகாரம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது. கொவிட் தொற்றுநோய்க்குப் பிந்தைய சூழலில் சிறந்த முகாமைத்துவ நிர்வாக நடைமுறைகளைக்கொண்ட நிறுவனங்களைக் கண்டறிந்து சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இந்தச் சாதனையைப் பாராட்டி அமானா தகாஃபுல் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.




காரைக்கவி

# சீத்துவக்கேடு 181

அந்த மேடையின்ரை அளவு எப்பிடி இருக்கவேணும் எண்டு இளங்கோவடிகள் சொன்ன பாட்டைச் சொன்ன ஆச்சி அட மோன உதில அவர் இளங்கோவடிகள் கோல் எண்டு ஒரு அளவு சொல்லுறார் அது என்னண்டு தெரியுமே எண்டு கேட்டா.

உண்மையா எனக்கெண்டா அது என்னண்டே தெரியேல்லை நான் நினைக்கேல்லை எங்கட தமிழ் வாத்தியாருக்கும் அது தெரியும் எண்டு. அதால ஆச்சியிட்டையே கேப்பம் எண்டு போட்டு இல்லையணை ஆச்சி எனக்கு ஒண்டும் தெரியாது கோல் எண்டா என்னண்டு கொஞ்சம் சொல்லணை எண்டன்.



உடன ஆச்சி அவர் இளங்கோவடிகள் அவற்றை காலத்தில ஒரு கோல் எண்டது இருபத்தி நாலு பெரு விரல் நீளமா இருக்கும் எண்டிறார். உந்தக் கோலை மூங்கிலிலைதான் செய்வினம் எண்டவ உனக்கொண்டு தெரியுமே அந்தக்காலத்தில நீளத்தை அளக்கிறதுக்கு எண்டுபோட்டு எங்கட ஆக்கள் ஒரு விதமான நீட்டலளவை முறையைப் பாவிச்சவை.

அது என்னண்டால் எட்டு அணுக்கள் கொண்டது ஒரு தேர்ந்துகள். எட்டு தேர்ந்துகள் கொண்டது ஒரு இம்மி. எட்டு இம்மிகள் கொண்டது ஒரு எள். எட்டு எள் கொண்டது ஒரு நெல். எட்டு நெல் கொண்டது ஒரு பெருவிரல் எண்டு அவை பாவிச்சவை.

உதுகள் பற்றி கன பழைய பாட்டுகள் இருக்கெண்டா ஆச்சி. இளங்கோவடிகள் சொன்னபடி பாத்தா ஒரு மேடையின்ரை அகலம் ஏழு கோலாகவும் நீளம் எட்டு கோலாகவும் உயரம் ஒரு கோலாகவும் இருக்கும்.

அதுமட்டுமில்லை, அந்த மேடையின்ரை மேற்பக்கத்தில பலகை பதிச்சு அந்த பலகைக்கும் தூண்களுக்கு மேல பாவிய உத்திரப்பலகைக்கும் இடையில நான்குகோல் உயரம் இருக்கவேணும் எண்டு சொன்ன இளங்கோவடிகள், அரங்குக்கு உள்ளுக்கு போறதுக்கும் வெளியில போகவும் எண்டு ரெண்டு வாசல்களும் வைச்சு அதுமட்டுமில்லாமல் அங்கை மேடையில இருக்கிற தூண்களின்ரை நிழல் நடிக்கிற இடத்தில விழக்கூடாது எண்டுபோட்டு விளக்கு



வைக்கவேணும் எண்ட செய்தியையும் சொல்லுறார் எண்டா ஆச்சி.

ஆச்சி உப்பிடி சொன்னதைக் கேட்டுக்கொண்டு இருந்த அப்பு அடே உந்த கோல் அளவு உனக்கு விளங்கிச்சோ எண்டு கேட்டார். ஆச்சி சொன்னவ எல்லே ஒரு கோல் இருபத்தி நாலு பெருவிரல் நீளம் எண்டு. எங்கட பெருவிரல் வந்து ரெண்டு இஞ்சி நீளம் கண்டியோ.

அப்ப ஒரு கோல் எண்டது நாப்பத்தெட்டு இஞ்சி வரும் அப்படி எண்டால் நாலு அடி நீளம் எண்டது விளங்கிச்சே எண்டார்.

அப்ப இளங்கோவடிகள் சொன்ன கணக்குப்படி பாத்தா ஒரு மேடையின்ரை அகலம் இருபத்தியெட்டு அடிகளாகவும் நீளம் முப்பத்தி இரண்டு அடிகளாகவும் உயரம் நாலு அடிகளாகவும் இருக்கவேணும் எண்ட அப்பு அப்ப அந்தக் காலத்தில உந்த நாடகங்கள் நடிக்க எண்டு போட்ட மேடையள் எவ்வளவு பெரிசா இருந்திருக்கும் எண்டு விளங்கிச்சோ எண்டார்.


உப்ப உங்க சில இடங்களிலை ஒருத்தரும் உவ்வளவு பெரிய மேடை போடுறது இல்லை பெரிய மேடையளைக் காணுறது கடும் அருந்தலாத்தான் இருக்கு எண்டவர் என்ன ஆக மிஞ்சிப்போனா ரெண்டு ட்ராக்டர் பெட்டியளைக் கொண்ணந்து பொருத்துவாங்கள் இல்லாட்டில் ஆக்கள் படுக்கிற எட்டு இல்லாட்டில் பத்து மரக்கட்டில்களைக் கொண்டு வந்து இணக்கி மேடை போடுவாங்கள் எண்டார்.

அதுசரி உனக்கொரு விஷயம் தெரியுமே உவர் இளங்கோவடிகள் மேடையில இருக்கிற திரைச் சீலையளின்ரை வகையள் பற்றியும் சொல்லி இருக்கிறார் கண்டியோ எண்டு போட்டு அந்தப் பாட்டைச் சொன்னார் அப்பு.

***"தோற்றிய அரங்கில் - தொழுதனர் ஏத்த***
***பூதரை எழுதி, மேல்நிலை வைத்து;***
***தூண் நிழல் புறப்பட, மாண்விளக்கு எடுத்து, ஆங்கு***
***ஒருமுக எழினியும், பொருமுக எழினியும்,***
***கரந்துவரல் எழினியும், புரிந்துடன் வகுத்து - ஆங்கு***
***ஓவிய விதானத்து, உரை பெறு நித்திலத்து***
***மாலைத்தாமம் வளையுடன் நாற்றி;***
***விருந்துபடக் கிடந்த அரும் தொழில் அரங்கத்து"***

(தொடரும் )

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

பணவரவுக்குக் குறைவில்லை. செலவுகள் போக ஓரளவு சேமிக்க முடியும். திருமண வயதில் உள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். பிள்ளைகளின் மூலம் பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்ற நினைத்தால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்புத் தருவார்கள்.

### ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

செலவுகளைச் சமாளிக்கத் தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். சிலருக்கு வீட்டில் தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் ஏற்பட்ட கசப்புணர்வுகள் நீங்கும். அவருடைய தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். நிர்வாகத்தினர் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவிகரமாக இருப்பார்கள். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பெண்களுக்கு தேவையான பணம் கிடைக்கும் என்பதால் பிரச்சினை இருக்காது.

### மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். அவர்கள் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன் பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அரசாங்க வகை யில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். மற்றபடி பதவி உயர்வோ சலுகை உயர்வோ எதிர்பார்க்கமுடியாது. அதிகாரிகள் கடுமையாகப் பேசினாலும் பொறுமையுடன் எதிர்கொள்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை இருந்தாலும்கூட அதற்கேற்ற இலாபம் கிடைக்காது. எனவே பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பெண்களுக்கு அதிகரிக்கும் செலவுகளால் மனச்சஞ்சலம் ஏற்படும். வாரப் பிற்பகுதியில் ஓரளவுக்கு நிலைமை சரியாகும்.

### கடக ராசி அன்பர்களே!

கடகம்

நிதானித்து செயல்படவேண்டிய வாரம். ஆனால், விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டி வருவது ஆறுதலாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் பொறுமையாக இருப்பது நல்லது. தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்களும் நல்லபடி ஒத்துழைப்பார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். தேவைக்கும் அதிகமாகப் பணம் கிடைப்பதால் சிறிது சேமிக்கவும் முடியும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

பணவரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சி தரும் செலவாகவே இருக்கும். நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தால், வழக்கறிஞரின் ஆலோசனைப்படி நடப்பது நல்லது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை மூலம் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இடமாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு செலவுகள் அதிகரிப்பதால் சிரமம் ஏற்படும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

### கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

பணவரவு ஓரளவுக்கு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். கடன்கள் விஷயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் சற்று இழுபறியாகி முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். நீண்டநாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பதவிஉயர்வு கிடைக்கும் என்பதால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம். பெண்களுக்கு சிரமம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. புகுந்தவீட்டு உறவினர்களிடையே உங்கள் மீதான மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

### துலா ராசி அன்பர்களே!

துலாம்

மகிழ்ச்சி தரும் வாரம். வார முற்பகுதியில் இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த பிற் போக்கான நிலை மாறி, சாதகமான தீர்ப்பு கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டு. அலுவலகத்தில் தங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த சலுகைகள் சற்று இழுபறிக்குப் பிறகே கிடைக்கும். வியாபாரத்தில் கடுமையாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது இழுபறியாகும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும் என்றாலும் சலிப்படையாமல் செய்வீர்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

எதிலும் சிந்தித்து செயல்படவேண்டிய வாரம். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிடவேண்டாம். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். பற்று வரவில் பிரச்சினை எதுவும் இருக்காது. சரக்கு கொள்முதலுக்காக தொலைதூர பயணங்கள் செல்ல நேரிடும். பெண்களுக்கு செலவுகளால் சற்று சிரமப்பட வேண்டியிருக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும் வாரம். தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகளும் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பற்றி விமர்சித்தாலும், அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். தந்தையுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் மறைந்து சுமுகமான உறவு ஏற்படும். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அவசியம். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கவேண்டாம். அதிகாரிகள் கடுமை காட்டினாலும் பொறுமை அவசியம். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். பெண்கள் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

### மகர ராசி அன்பர்களே!

மகரம்

எதிர்பார்த்ததைவிட பணவரவு அதிகமாக இருக்கும். மற்றவர்களுக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன் தொகை வந்து சேரும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் ஆதாயம் பெறும் வாய்ப்பு ஏற்படும். திருமண முயற்சிகள் சற்று இழுபறிக்குப் பின்னர் சாதகமாக முடியும். சகோதர வகையில் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அவர்கள் மூலம் ஆதாயமும் கிடைக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பணி நிரந்தரம் உண்டாகும். அதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைப்பதால் உற்சாகம் உண்டாகும். சக வியாபாரிகள் இணக்கமாக நடந்துகொள்வார்கள். பெண்களுக்கு மனதுக்கு உற்சாகம் தரும் சம்பவங்கள் நடை பெறும்.

### கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்பதால் சற்று கவனம் தேவைப்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி இந்த வாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகக் கொஞ்சம் அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். இளைய சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடை பெறும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். பெண்களுக்கு போதிய பணம் கிடைப்பதால் மனநிறைவு உண்டாகும்.

### மீன ராசி அன்பர்களே!

மீனம்

பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும், ஆடை, ஆபரண சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வாரத் தொடக்கத்தில் செலவுகளில் திட்டமிடல் மிக அவசியம். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது. சிலருக்கு இட மாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தியடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. பங்குதாரர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. பெண்களுக்கு குடும்ப நிர்வாகத்தில் சிறிது சிரமங்கள் ஏற்படும்.

தமிழன் சிறுகதை



# வாப்பாவின் கடைசி நிமிடம்

ஸாலிஹ் அஸீம்

நானா உங்கட வாப்பா கானுக்குள்ளே விழுந்து விட்டார். அவரை நாம் தூக்கிக் கொண்டுபோய் உள்ளே வைத்திருக்கிறோம் கொஞ்சம் போய் என்னனு பாருங்க - என்று வெளியில் நின்றிருந்த ஒருவன் சொன்னான்.

அதனைக் கேட்ட நானும், என்னாச்சுதோ ஏதாச்சுதோ என்று நினைத்தபடி பதறியடித்துக்கொண்டு உள்ளே ஓடினேன்.

என்னுடைய வாப்பா என்னுடன்தான் இருக்கிறார். அவருக்கு இப்போது எழுபத்தியொன்பதரை வயது. வருகிற ஆறாம் மாதம் இருபதாம் திகதி எண்பது வயது.

என்னுடைய உம்மாவுக்கும் அவருக்கும் பதினான்கு வருடங்கள் வித்தியாசம். அவர் மத்தியகிழக்கு நாடான ஓமானில் மூன்று வருடங்களும் சவூதியில் பன்னிரெண்டு வருடங்களாகவும் பதினைந்து வருடங்கள் வேலை பார்த்து விட்டு இங்கு வந்து சேர்ந்தார்.

வாப்பா, உம்மா என்னுடன் சேர்த்து ஆறு பிள்ளைகள். நான்கு பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளும். துரதிஷ்டவசமாக உம்மாவின் ஐம்பதாவது வயதில் சுகயீனம் காரணமாக அவர் இறந்துபோனார். உம்மாவுடைய அந்த இழப்பு பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் தந்தது.

உம்மா இறந்து ஒரு வருடத்திற்குள் நான் திருமணம் செய்யவேண்டிய சூழல் ஏற்பட்டு விட்டது. வேறு வழியின்றி திருமணம் செய்துக் கொண்ட நான் என்னுடனே திருமணம் முடித்தது போக மிகுதியாயிருந்த தம்பி, இரண்டு தங்கைகள் உட்பட வாப்பாவையும் என்னுடன் வைத்துக்கொண்டேன். சில காலங்களில் அவர்களுக்கும் திருமணம் நடந்துமுடிய கடைசியாக எஞ்சியிருந்தது வாப்பா மட்டும்தான்.

வழமையில் வெள்ளிக்கிழமைகளில் தங்கை வீட்டில் நாம் ஒன்றுசேர்வது வழமை. அப்போதெல்லாம் வாப்பாவும் நானும் போவதில்லை. மதியம் சாப்பாட்டுக்குப் போய் நான் சாப்பிட்டுவிட்டு வாப்பாவுக்கு எடுத்து வருவேன். அவ்வாறு அவருக்கு சாப்பாடு எடுத்து வரும்போதுதான் அவன் இவ்வாறு சொன்னான்.

நான் உள்ளே சென்று பார்க்கிறேன். அவர் சுவற்றை பிடித்துக்கொண்டு சற்று நடுங்கியபடி நின்றுகொண்டிருந்தார். அவர் உடுத்தியிருந்த லுங்கியின் கீழ்ப்பகுதியில் சேற்று சகதி பட்டிருந்தது. அதனைக் கண்ட நான்,

"என்ன வாப்பா நடந்தது? எப்படி கானுக்குள் விழுந்தீங்க..." என்றபடி அவரின் கையை பிடிக்க,

"வேண்டாம் பிடிக்காதே. நான் கானுக்குளெல்லாம் விழவில்லை. அவர்கள் பொய் சொல்கிறார்கள்" என்றார்.

"அப்போ எப்படி வாப்பா லுங்கியில் சேறு பட்டிருக்குது" என்றேன்.

அப்போதும் அவர் அதனை ஏற்றுக்கொள்ள வில்லை. தான் சேற்றுக்குள விழவில்லை என்பதில் உறுதியாக இருந்தார். ஆனாலும் அவரின் அப்போதைய நிலை சில அடையாளங்கள் அவர் கானுக்குள்தான் விழுந்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டிருந்தது.

எனக்கென்றால் ஒன்றுமே புரியவில்லை.

ஏன் வாப்பா இப்படி நடந்துகொள்கிறார் என்று மனதிற்குள் சொல்லிக்கொண்ட நான் ஒருவாறு பிடித்து அவரை கதிரையில் அமர வைத்தேன்.

"வாப்பா என்னாச்சு உங்களுக்கு" என்றேன்

"எனக்கு என்னாச்சுது. யாரு யாரோ சொல்கிற பொய்களை கேட்டுகிட்டு நான் கானுக்குள் விழுந்ததாக நீ சொல்கிறாய். அதுக்கு நான் என்ன செய்ய" என்றார் வாப்பா.

அதற்குமேல் என்னால் என்னதான் சொல்ல முடியும். அவர் கானுக்குள் விழுந்திருக்கிறார் என்பது நன்றாகவே தெரிகிறது. அப்படியிருந்தும் அதனை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டேங்கிறாரே என்ன செய்வது.

ஒரு வாரம் அப்படியே போய்விட்டது. அதிக வேலைப்பளு, வெயிலின் கோரம், இரவு தூக்கம் இல்லாமை எல்லாம் சேர்ந்து என்னை தூக்கம் ஆக்கிரமிக்க, சற்று சாய்வோம் என்று குட்டித் தூக்கம் போட மகன் வந்து எழுப்புகிறான்

"கொஞ்சம் வாங்களேன்" என்று அவசரமாக கூப்பி, நானும் தூக்கக் கலக்கத்துடன் மகனுக்கு பின்னாடியே அவசரமாக போனேன். அங்கே வாப்பாவின் அறை கதவு மூடப்பட்டிருந்தது. நானும் தள்ளி பார்த்தேன். கதவு திறக்கவில்லை. வேறு வழியில்லாமல் ஜன்னல் கதவினை திறந்து உற்றுப்பார்த்தேன் உள்ளே வாப்பா கட்டிலை விட்டு கீழே மல்லாந்து கிடந்தார். அவருடைய கால்கள் இரண்டும் கதவுடன் முட்டிக் கொண்டிருந்ததால்தான் கதவு திறக்க முடியாமல் இருந்திருக்கிறது என்பது விளங்கியது. மூடிய போத்தலில் நீர் பருகிக் கொண்டிருந்தார்.

அதை கண்ட நான், "என்ன வாப்பா, போத்தல் மூடியிருக்கு. அதுல தண்ணி குடிக்கிறீங்க. எப்படி தண்ணீ வரும்" என்றேன். அதனைக் கேட்டவர்,

"மூடியிருக்கா இல்லையே. அது திறந்துதானே இருக்கு" என்று அவர் சொல்லும்போதே எனக்கு தெரிந்துவிட்டது அவருக்கு நினைவு கொஞ்சம் இல்லாமல் போகிறது என்று.

உடனே என்னுடைய சகோதரர்களுக்கு விடயத்தினை சொன்னேன். அதனை கேட்டவர்கள் வீட்டுக்கு வந்தார்கள் நிலமையை பார்த்து விட்டு, கொஞ்சம் நிலைமை மோசம்தான். யாராச்சும் வைத்தியரிடம் கொண்டுபோய் காட்டுவோம் என்று முடிவெடுக்க, முச்சக்கரவண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி அதிலே வாப்பாவை ஏற்றப்போக அவரால் ஏற முடியவில்லை. நாமும் எவ்வளவு முயன்றும் அவரை ஏற்றி விடவும் முடியவில்லை. வாப்பா அழத் தொடங்கிவிட்டார் அதனால் கடைசியில் வேறு வழியில்லாமல், சரி வேறு ஒன்னும் செய்ய முடியாது யாராவது வைத்தியரை கூட்டி வந்து காட்டுவோம் என்று முடிவெடுக்க, ஒவ்வொரு வைத்தியராய் போய் காலை மட்டும் பிடிக்கவில்லை, அந்தளவுக்கு கெஞ்சு பார்த்தும் அவர்கள் ஒருவரும் வரவேயில்லை.

பிறகு ஒருவழியாக ஒரு வைத்தியர் வந்துவிட்டார். அவரை கூட்டிவந்து பரீட்சித்து பார்த்துவிட்டு சில மாத்திரைகளையும் தந்து விட்டு இவருக்கு சீனி பிரஸர் ஒன்னுமேயில்லை. அதனால் மாத்திரைகளை கொடுத்துவிட்டு இரண்டு நாளில் கூட்டி வாங்க. சேலைன் ஏற்றுவோம் - என்றார்

அவர் சொன்னபடியே மாத்திரைகளை போட்டதும் மறுநாள் வாப்பா எழுந்துவிட்டார். வழமைபோல் சாப்பிட்டார், கதைத்தார். நமக்கும்வாப்பா குணமாகிவிட்டார் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. அதனால் அவ்வைத்தியர் சொன்னதைபோல் அங்கு கூட்டிச்செல்லவுமில்லை. அதனை அப்படியே மறந்தும் விட்டேன்.

மூன்று நாட்கள் சென்றிருக்கும் மீண்டும் அதே நிலை. அதைவிட மோசமான நிலை. வேறு வழியில்லை மீண்டும் அந்த வைத்தியரிடம் போனபோது,

"உங்களை நான் என்ன சொன்னேன். ஏன் நான் சொன்னபடி இரண்டு நாட்களில் நீங்கள் கூட்டி வரவில்லை. என்னால் இப்போது அங்கு வரமுடியாது. முடிந்தால் இங்கு கூட்டி வாருங்கள்" என்று அவரும் மறுத்துவிட, நாமும் மீண்டும் பல வைத்தியர்களிடம் சென்றும் அவர்களிடம் எவ்வளவு எடுத்து சொன்போதும் அவர்கள் அதனை கேட்கவுமில்லை, வரவுமில்லை. இதனால் நமக்கு மிகவும் கவலையாக இருந்தது.

என்ன வைத்தியர்கள் இவர்கள். இவ்வளவு சுயநலவாதியாக இருக்கிறார்கள் என்று அலுத்துக் கொண்டோம்.

சில நாட்கள் வாப்பாவுக்கு சாப்பாடு கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிறங்க மறுத்தது. ஏதோ நம்மிடம் சொல்லுவதற்காக அழைப்பார். கிட்டே சென்றதும் சொல்ல வந்தது அவருக்கு மறந்து போய்விடும். இப்படி உடல் பலவீனம் பட்டுக்கொண்டே போனது.

அன்று இரவு பதினொரு மணியிருக்கும்.

"கொஞ்சம் அவசரமாய் வாங்களேன்" தங்கை அழைக்க, நானும் உள்ளே ஓடினேன். அங்கே வாப்பாவுக்கு மூச்சு வேகமாக இழுத்துக் கொண்டிருந்தது. வயிறு மேலும் கீழுமாக எழுந்து பணிந்துகொண்டிருந்தது. நான் தலைமாட்டில் இருந்துகொண்டு அவரின் தலையை தடவிக்கொண்டிருந்தேன்.

அப்போது ஒன்று இருபத்தைந்து மணி இருக்கும். மேலும் கீழுமாக எழுந்து விழுந்து கொண்டிருந்த அவரின் வயிறு அப்படியே நின்றுவிட வாய் திறந்து மூடியது.

அப்போது வாயல் காற்று வெளி சென்றது. அதோடு என்னுடைய வாப்பா இந்த உலகத்தைவிட்டு பிரிந்துவிட்டார் என்பதை உணர்ந்துகொண்டேன். அதுவே வாப்பாவின் கடைசி நிமிடமாக போய்விட்டது.

முற்றும்

( 1 - 8 )

(கோப்பி தோட்டத்தில்)

சின்னப்பிட்டி ஊருக்குள்ள
மொதமொறையா உருவான
தங்கமான கோப்பிக்கன்று
சிறியதொரு காலத்திலேயே
சிலோனெங்கும் பரவியது....

பாம்பு பொந்து...
பற்றைக்காடு...
பன்றியோடு சேர்ந்து
கொரூர மிருகங்களும்
கும்மாளம் இடும் காடு...

மனுசர் பாதம் படா
மண்ணயெல்லாம்
பொன்னாக மாத்திவிட்ட
மலைநாட்டு மாணிக்கந்தா
வந்திருந்த இந்த சனம்

சுடுகாட்டு மண்ணயெல்லாம்
விதைநிலமா மாத்துனாலும்
இவங்க வாழ்க்கை மட்டும்
சுடுகாடா போனதுதான்
துயரமான சோகக்கதை....

கோப்பித் தோட்ட
காலத்துல வெள்ளைக்காறன்
தேவைக்கி உபயோகம்
செய்யுமொரு பொருளாக
இருந்தது மலைநாட்டு
பெண்கள்...

தொரமாரு மட்டுமில்ல
பெரிய கங்காணியும்
இந்த மாதிரி எலவுகள
செஞ்சிப்புட்டு வெளிய சொன்னா
ஊரு போக ஏலாதுன்னு
மிரட்டலும்
விட்டிருக்கா....

கன்னி பொண்ணு
மட்டுமில்ல கல்யாணம்
ஆன நல்லா கருத்த
குட்டினாலும்
சீம தொரக்கி இஸ்டமுன்னு
கங்காணி சொல்லிருக்கா...

புருசன் காரே முன்னாடியே
சீரழிச்சி விட்ட
கதை ஏராளம் இங்கிருக்கு..

ஆத்து அருவிலயும்
தெப்பக்குளத்துளயும்
பாஞ்சி செத்துப்போன
பாவப்பட்ட கதைகளெல்லாம்..
சொல்ல மறந்த கதை மறக்காம
சொல்லிடுது....

முழுகாமல் இருக்கின்ற
எளந் தாயிமாரக்கூட
நாசமத்து போனவிங்க
விட்டு தொலைக்கலியே...

கருவோடோ தூக்குமாட்டி
நாக்கு தொங்கி மாண்ட கத
கோப்பிக்காட்டு மலைய பாத்து
இப்பக்கேட்டா கூடச் சொல்லும்...

மதுசார மப்பில் அவன்
மார்காம்ப கசக்கயில்
கன்னி பொண்ணு கத்தும் சத்தம்
இரும்பையும் உருக்கிவிடும்
இவிங்க மனம் உருகாது....

ஆராரோ பாட்டு ஒன்னு
எங்கோ ஒலிக்கிறது..
மூக்காயி கொரலு அது
பொறுமையா நின்னு கேப்போ....

ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ
அடிச்சார சொல்லியலு....

அப்பா வந்திடுவார்
அழுவாம நீ தூங்கு...
தூண்டா மணிவிளக்கே....
கண்மூடி நீ தூங்கு....

எங்கண்ணே கண்ணுறங்கு
அப்பா அடிச்சாரோ
அடிச்சார சொல்லியலு...

தாலாட்டு பாடுகிறா மூக்காயி
தன்னால அழுதுக்குறா
புருசே புள்ள
நெனப்பில் அவ கஞ்சக்கூட
மறந்துடுறா....

இடியா இடி இடிக்க
ராவுப்பூரா சாவு மழ
கண்ணக்கூட மூடவில்லை
குடிசை எல்லாம்
வெள்ளத்தண்ணி....

மழ பெய்யாட்டியும்
இப்படித்தான்
சிறுத்தை புலி வருமின்னு
தூங்காம இருப்பாங்க

பொழுதினிக்கும் முழிச்சிருந்து
முள்ளுக்காட்டில்
வேலசெஞ்சி குடிசைக்குள்ள
நுழைஞ்சாக்க...
இங்கேயும் அந்த எளவுதானா....

நொந்துக்கிறா மூக்காயி...

கோப்பி கன்னு நாட்டனுன்னு
ஒரு முள்ளுக்காட்ட
அழிச்சிடணும். அது தா அவ
வேள...


முள்ளு கிழிச்சி நல்லா
அவ ரத்தத்த உரிஞ்சது
போதாதின்னு...
அவள மொய்க்கப்பாத்தா
வெள்ளைக்கார
தொரயொருத்தே....

(சொல்ல மறந்த கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்...

எம். ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் தொடர்கதை



# முகநூல் காதல்

அத்தியாயம் ௦2

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

முகங்களை காணாத முகநூலில் அகங்கள் இணைந்து இறுக்கமானது. அவ்விறுக்கத்தின் வெளிப்பாடாய் ஒருநாள் தனக்குள்ளே மறைத்து வைத்திருந்த முகநூல் காதலை தன்னுடைய நண்பியிடம் கூறினாள். அதனைக் கேட்ட அவளின் தோழி,

"அடி....! பைத்தியக்காரி.... என்னடி நீ... உனக்கு என்னாச்சுது. அறிவு ஏதாச்சும் கெட்டுப் போயிட்டுதா...?" என்று ஆவேசமாக உறுமினாள். அதனைக் கேட்டவள்,

"உனக்கென்னடி தெரியும். என்னோட பிரகாஷைப் பற்றி... அவரு ரெம்பவும் நல்லவரு. அவரை என்னால் ஒருநாளும் என்ன ஒரு நிமிடமாவது மறந்திருக்க முடியாது. எங்களுக்குள்ளே அந்தளவுக்கு நேசமிருக்கிறது.

நமக்கு தேசம் ஒரு மதில் அல்ல. நேசம் அதை கடக்கும் பாலமாய் இருக்கிறது. அதில் எந்த விதமான மோசமும் நடக்காது என்கின்ற நம்பிக்கை நிறையவே என்னிடமிருக்கிறது" என்று அவள் உறுதியாகக் கூற,

"அடி பாவி....! என்னடி பேசுறே நீ...! எத்தனை செய்திகளை நாம் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறோம். வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் ஊடாக பார்த்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம். இப்படி முகநூலில் மலர்ந்த பல காதல் கடைசியில் ஏமாந்துபோய் பெண் தற்கொலை செய்துகொண்டாள் என்றும், ஆண் பெண் போன்றும் பெண் ஆண் போன்றும் கணக்கு வைத்து பலரை ஏமாற்றி பணம் அபகரிப்பு, கற்பு சூறையாடப்பட்டது என்பது போன்ற எத்தனை செய்திகளை நாம் பார்த்திருப்போம், கேட்டிருப்போம்.

அப்படியிருந்தும் உன்னை மாதிரி முட்டாள் பெண்களும் சில ஆண்களும் சதி வலைகளில் விழத்தானே செய்றாங்க...... அது எப்படி இப்படி முட்டாளாகவே இருக்கீங்க.?

உங்களை மாதிரியான ஆட்களால்தான் இவங்களை மாதிரி ஆட்கள் சாதிச்சுக்கிட்டு இருக்காங்க" என்று அவளின் தோழி வாயில் வந்தபடியெல்லாம் கொட்டித் தீர்த்தாள்.

ஆனாலும் காதல் மயக்கத்தில் விழுந்து கிடந்த அவளின் மனம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தது. சற்று சந்தேகம் கொண்டு ஓர் அங்குலம் கூட பின்வாங்கவில்லை. அதற்குப் பதிலாக அவளின் நண்பியை பார்த்தவள்,

"என்னுடைய பிரகாஷைப்பற்றி உனக்கென்னடி தெரியும். அவரு அப்படிப்பட்டவரில்லை. அவரு ரெம்பவும் நல்லவரு. தங்கமானவரு சூதுவாது தெரியாதவரு. அவரை பற்றி இப்படி அபாண்டமாயெல்லாம் சொல்லாதே. அப்படி சொன்னால் உன்னுடைய நாக்கு அழுகிப் போய்விடும்" என்று பதிலுக்கு கொதித்தெழும்பியவள், நெருங்கிய அந்நண்பியைக் கூட மனது நொறுங்கும் வண்ணம் பேசி உதாசீனப்படுத்திவிட்டாள்.

அதனைக் கேட்ட அவளின் நண்பி, இதற்கு மேலும் இவளுக்கு என்ன சொன்னாலும் புத்திக்கு விளங்கப்போவதில்லை. அதனால் இவளுக்கு எடுத்துச் சொல்வதால் எந்த பிரயோசனமுமில்லை என்று தனது மனதிற்குள் சொல்லிக்கொண்டவள் அவ்விடத்திலேயே இருக்கப் பிடிக்காமல் எழுந்து போய்விட வேண்டும் என்று நினைத்துக்கொண்டு அதனைக் காட்டிக் கொள்ளாமல்,

"நான் போயிற்று வாறேன். என்னை அம்மா நேரத்தோடு வரச் சொன்னாள்" என்று ஒரு சாட்டுப் போக்கினை சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள்.

இருந்தாலும் அதனைப் பற்றியெல்லாம் எதையுமே அலட்டிக் கொள்ளாமல் தனது பாட்டில் மௌனமாக இருந்துகொண்டாள். அவளுடைய நண்பி.

பிரகாஷை பேசிவிட்ட கோபத்தில் அவளினதும் பிரகாஷினதும் காதல் மிகவும் நெருக்கமாக சென்றுகொண்டிருந்தது. அவளுக்கு இப்போது அவனை நேரில் பார்க்க வேண்டும் என்ற அவா மேலோங்கி விட,

"பிரகாஷ் உங்களை நான் நேரில் பார்க்க வேண்டும் என்று எனக்கு நிறையவே ஆசையாய் இருக்குது. எப்படி நான் உங்களை சந்திக்கிறது? இதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்" என்று அவள் கேட்க,

# மெனோபாஸ் காலத்தில் பெண்கள் கவனிக்க வேண்டியவை



பெண்களுக்கு 40 வயது தொடங்கும் போதே மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய் நிற்கும் காலமும் தொடங்கி விடுகிறது. மெனோபாஸ் காலம் பெண்களுக்கு நிஜமாகவே சவாலானதா, அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும், மனதளவில் எவ்வாறு தயாராக வேண்டும் என பார்க்கலாம்.

**மெனோபாஸ் காலம் எப்போது தொடங்கும்?**

பெண்களுக்கு 40 வயதிலிருந்து 55 வயதிற்குள் மெனோபாஸ் காலம் தொடங்குகிறது. மாதவிடாய் காலத்தில் இருக்கும் உடற்சோர்வும் மனச்சோர்வும் மெனோபாஸ் காலத்தில் தொடக்கத்தில் இருக்கும். இதை கடந்து வருவதும் அதற்கு தயாராக இருப்பதும் எளிதானதுதான். பயம் கொள்ள வேண்டாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் கருமுட்டை உருவாதல், மாதவிடாய் போன்ற செயல்பாடுகளில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோனின் சுரப்பு வெகுவாக குறைவதால் மேற்கண்ட செயல்கள் நிற்கத்தொடங்குகின்றன. இதனையே மெனோபாஸ் காலம் என்கிறோம்.

இதன் மூலம் பெண்களுக்கு முடி உதிர்வு, உடல் எடை அதிகரித்தல், இரத்தச்சோகை, மூட்டுவலி, தூக்கமின்மை, இதய நோய்கள், எலும்புகள் அடர்த்தி குறைவது, சருமப்பிரச்சினைகள் போன்றவை ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

**உணவுகளில் கவனம்**

கல்சியம், விற்றமின் டி நிறைந்த உணவுகளை சாப்பிடுவதன் மூலம் எலும்புகள் தேய்வதையும் உடைவதையும் தடுக்கலாம்.

கெட்ட கொழுப்புகள் நிறைந்த உணவுகள், எண்ணெய்யில் பொரித்த பதார்த்தங்களை தவிர்த்து நார்ச்சத்து, புரதங்கள் நிறைந்த உணவுகள், பயிறு வகைகள் போன்றவற்றை உண்பது நன்மை தரும்.

கீரை வகைகள், பழங்கள் உடல் சூட்டை தணிக்கும். இளநீர், நுங்கு போன்றவைகளை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளுக்கு இரண்டு முதல் மூன்று லீற்றர் தண்ணீர் பருகுவது முக்கியமானது.

**மனநலனும் முக்கியம்**

மெனோபாஸ் காலத்தில் எரிச்சல், கோபம், கவலை போன்ற எதிர்மறை உணர்வுகள் வெளிப்படுவது இயல்பானது. இவற்றிலிருந்து விடுபடுவதற்கு எளிய உடற்பயிற்சி, யோகா போன்றவற்றில் ஈடுபடலாம். பிடித்தமான செயல்களில் கவனம் செலுத்துவது, மனநல ஆலோசனைகள் பெறுவதும் முக்கியமானது. வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதும் மருத்துவர்களின் ஆலோசனை பெறுவதும் அவசியமானது.

# பிரியாணி இலையின் நன்மைகள்



பலரும் உணவில் பிரியாணி இலை வெறும் நறுமணத்திற்காகத் தான் சேர்க்கிறார்கள் என்று நினைக்கிறோம். ஆனால், பிரியாணி இலையில் ஏராளமான மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. சொல்லப்போனால் பிரியாணி இலையில் ஆன்டி-பாக்டீரியல், பூஞ்சை எதிர்ப்பு மற்றும் நோயெதிர்ப்பு அழற்சி தன்மை உள்ளதால், பல்வேறு பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்க உதவுகிறது.

பிரியாணி இலையில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் ப்ளேவோனாய்டுகள், கனிமச் சத்துகளான கல்சியம், பொட்டாசியம், காப்பர், மாங்கனீசு, செலினியம் மற்றும் இரும்புச்சத்து போன்றவையும் அதிகம் நிறைந்துள்ளன.

இவ்வளவு சத்துகளை உள்ளடக்கிய இந்த இலையை உணவில் சேர்க்கும்போது, அதனால் எவ்வளவு நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

**பிரியாணி இலையின் நன்மைகள்:**

பிரியாணி இலை சமையலில் உணவின் மணத்தையும் ருசியையும் அதிகரிக்க மட்டுமின்றி, அதன் நறுமணம் பல அரோமாதெரபிகளில் சுவாசப் பிரச்சினை மற்றும் சருமப் பிரச்சினைகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது.

இதை கண்டுபிடித்தவர் ரஷ்ய ஆய்வாளர் கென்னடி.

இவரின் கூற்றுப்படி பிரியாணி இலை மன அழுத்தத்தைக் குறைப்பதாக கூறியுள்ளார்.

முதல் கட்டமாக மனதை அமைதியடையச் செய்வதற்கு பிரியாணி இலையை வீட்டின் ஒரு அறையினுள் ஒரு பாத்திரத்தில் போட்டு 10 நிமிடம் எரிக்க வேண்டும். பின் அந்த



அறையிலேயே 10 நிமிடம் இருந்து அதன் நறுமணத்தை நன்கு சுவாசிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் பிரியாணி இலையின் நறுமணம் தீங்கு விளைவிக்கும் மனஅழுத்த ஹோர்மோன்களின் உற்பத்தியைக் குறைத்து மனதை அமைதியுடனும் ரிலாக்ஸாகவும் வைத்துக் கொள்ளும்.

மேலும் பிரியாணி இலையை வீட்டினுள் எரித்தால் வீட்டில் இருக்கும் துர்நாற்றம் வெளியேறி வீடே நல்ல நறுமணத்துடன் இருக்கும். மேலும் இந்த நறுமணம் வீட்டில் நேர்மறை ஆற்றல்களை உற்பத்தி செய்யும்.

அத்துடன் பெருங்குடலிலும் வயிற்றிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய தன்மை பட்டை பிரியாணியில் உள்ளது.

பட்டை இலைகளில் உள்ள caffeic acid என்ற அமிலமும் rutin என்ற பொருளும் இதயத்தில் உள்ள மெல்லிய இரத்தக் குழாய்களை வலுவுறச் செய்கின்றன. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கொழுப்புச்சத்தை நீக்கவும் அவை உதவும்.

★ பிரியாணி இலைகள் உடலில் சுரக்கும் இன்சுலினை மேம்படுத்துகின்றன. இது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக இருக்கும்.

★ வீக்கத்தைக் குறைப்பது பிரியாணி இலைகளின் முக்கிய பயன்களில் ஒன்று. மூட்டுவாதம் ஏற்படும் சாத்தியத்தை இது குறைக்கிறது. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கொழுப்புச்சத்தை நீக்கவும் அவை உதவும்.

★ பிரியாணி இலையில் இருந்து தயாரிக்கப்பட்ட எண்ணெய் உடலில் ஏற்படும் பல மூட்டு வலிகளைக் குறைக்கும். அதிலும் தலை வலிக்கும்போது, அந்த எண்ணெய்யைக் கொண்டு மசாஜ் செய்தால், 1 நிமிடத்தில் தலை வலி போய்விடும்.

## காரிகைகளம்



# சொக்லேட் பஸ்டா

**தேவையான பொருட்கள்**

பஸ்டா - 1 கப்
காய்ச்சிய பால் - 1 கப்
சர்க்கரை - 2 டீஸ்பூன்
கோகோ பவுடர் - அரை கப்
hersheys chocolate syrup - 2 டீஸ்பூன்
சாக்லேட் சிப்ஸ் - விருப்பத்திற்கேற்ப

**செய்முறை**

பஸ்டாவை வேக வைத்து கொள்ளவும்.

கடாயை அடுப்பில் வைத்து பால் ஊற்றி சர்க்கரை சேர்த்து கரையும் வரை நன்றாக கலக்கவும்.

சர்க்கரை கரைந்தவுடன் அதில் கோகோ பவுடரை சேர்த்து கட்டியில்லாமல் நன்றாக கலந்து கொண்டே இருக்கவும்.

கலவை திக்காக பதம் வந்தவுடன் அதில் வேக வைத்த பஸ்டாவை சேர்த்து கிளறவும்.

சாக்லேட் கலவையில் பஸ்டாவை நன்றாக வேக விடவும்.

அடுத்து அதில் hersheys chocolate syrup விட்டு மீண்டும் நன்றாக கலந்து விட்டு கொண்டே இருக்கவும்.

சாக்லேட் கலவை முழுவதும் பஸ்டாவில் சேர்ந்தவுடன் அடுப்பில் இருந்து இறக்கி சாக்லேட் சிப்ஸ் தூவி பரிமாறவும்.

சூப்பரான சாக்லேட் பஸ்டா ரெடி.

# ஓட்ஸ்



நம்முடைய உடல் ஆரோக்கியத்திற்கு உணவு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. ஆனால், மக்கள் எல்லோரும் சற்று அவசர வேலையில் இருப்பதால் பெரிதும் காலை உணவை எளிதாக மற்றும் சத்துள்ள உணவாக சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். விரைவாக மற்றும் சத்துள்ள உணவு வகையில் ஓட்ஸ் முதலிடம் பிடித்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும். இந்த தானியத்தில் உடலுக்கு தேவையான பல விதமான ஊட்டச்சத்துகள் நிரம்பியுள்ளன. ஓட்ஸ் சாப்பிடுவதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகளை தெரிந்து கொள்வோமா.

இதில் கனிமச்சத்துகள், நார்ச்சத்துகள், விற்றமின்கள் மற்றும் ஊட்டச்சத்துகள் அதிகமாக உள்ளன. இதை பெரும்பாலும் ஓட்ஸ் கஞ்சியாக எடுத்து கொண்டால் உடலுக்கு மிகவும் நல்லது.

**சர்க்கரை நோய்:** ஓட்ஸில் இருக்கும் நார்ச்சத்து உணவை மெதுவாக செரிமானம் அடையச் செய்யும். இதனால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு திடீரென உயராது. எனவே சர்க்கரை நோய் உள்ளவர்கள் ஓட்ஸ் எடுத்து கொள்வது உடலுக்கு மிகவும் நல்லது. டைப் 2 சர்க்கரை நோயை கட்டுப்படுத்த தினமும் ஓட்ஸ் சாப்பிடுவது நல்லது.

**புற்றுநோய்:** புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை உட்கொள்வது போன்ற காரணங்களால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

ஓட்ஸில் இருக்கும் சத்துகள் மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை புற்று நோய் போன்ற நோய்கள் வராமல் தடுக்க உதவுகிறது.

**மலச்சிக்கல்:**

செரிமானப் பிரச்சினைகளை சரி செய்வதற்கு ஓட்ஸ் உதவி வருகிறது.

குடலில் உள்ள புண்கள், வயிற்றில் இருக்கும் நச்சுக்கள், மலச்சிக்கல் போன்ற பிரச்சினைகளை சரி செய்வதற்கு இதில் இருக்கும் நார்ச்சத்து உதவுகிறது.

ஓட்ஸ் கஞ்சி, ஓட்ஸ் கூழ் போன்றவற்றை வாரத்திற்கு ஒரு முறை எடுத்து கொள்வது நல்லது.

**உடல் எடை குறைய:** உடல் பருமனாவதற்கு முக்கிய காரணம் உடலில் தேவையில்லாத கொழுப்புகள் சேர்வது தான். இந்த கொழுப்புகளை கரைப்பதற்கு நாம் கொழுப்பு குறைவாக உள்ள உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது.

ஓட்ஸில் கரையக்கூடிய நார்சத்து இருப்பதால் இவை உடல் எடையை குறைப்பதற்கு உதவியாக இருக்கும்.


**மாரடைப்பு சரி செய்ய:** உயர் இரத்த அழுத்தம், அதிக கொழுப்புச் சத்து, சர்க்கரை நோய், புகைப்பிடித்தல், மன அழுத்தம் போன்றவற்றால் இரத்தவோட்ட பாதை தடைபடுவதால் மாரடைப்பு ஏற்படுகிறது.

இரத்தத்தில் கெட்ட கொழுப்புகள் சேராமல் இருப்பதற்கு ஓட்ஸ் பயன்படுவதால் மாரடைப்பு நோய் உள்ளவர்கள் ஓட்ஸ் சாப்பிடுவது நல்லது. மேலும் இது இரத்த அழுத்தம், இதய நோய் மற்றும் மன அழுத்தம் போன்றவற்றை சரி செய்கிறது.

**மாதவிடாய் காலத்தில்:** பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் வயிற்று வலி, தலைவலி, எரிச்சல் மற்றும் உதிரப்போக்கு காரணமாக உடல் பலவீனமாக இருக்கும்.

இந்த சூழலில் பெண்கள் ஓட்ஸை எடுத்து கொள்வது நல்லது. இது உடலுக்கு தேவையான ஆற்றலை கொடுக்க உதவுகிறது.

# எண்ணெய் சருமத்திற்கு தீர்வு தரும் பேஸ் பெக்



**குளிர் காலத்தில் சரும பராமரிப்புக்கு கூடுதல் நேரமும் கவனமும் செலுத்த வேண்டியிருக்கும். எண்ணெய் சருமம் கொண்டவர்கள்தான் அதிக அவஸ்தைகளை அனுபவிக்க நேரிடும். ஏனெனில், முகத்தில் படியும் எண்ணெய் பசை சருமத் துளைகளை அடைத்துவிடும். இறுதியில் முகப்பரு பிரச்சினையை உண்டாக்கிவிடும். சருமத்திற்கு ஒவ்வாத இரசாயனம் அதிகம் கலந்த அழகுசாதனப் பொருட்களை உபயோகித்தால் பாதிப்பு அதிகமாகிவிடும். வீட்டின் சமையலறையில் உள்ள பொருட்களை கொண்டே எண்ணெய் சருமத்திற்கு எளிமையான முறையில் தீர்வு கண்டுவிடலாம். இதோ வீட்டில் தயாரிக்கக்கூடிய பேஸ் பெக்.**

**தேவையான பொருட்கள்:**

**கடலை மாவு -1 கப்**
**பொடித்த மஞ்சள்: சிறிதளவு**
**பால்- சிறிதளவு**

**செய்முறை:**

**மஞ்சளை நன்கு தூளாக்கிக்கொள்ளவும். கடலை மாவு, மஞ்சளுடன் பால் சேர்த்து பசை போல் குழப்பிக்கொள்ளவும். இந்தக் கலவையை முகம், கழுத்து பகுதியில் பூசிவிட்டு 20 நிமிடங்கள் உலர விடவும். பின்பு வெதுவெதுப்பான நீரில் டவலை நனைத்து முகத்தில் படிந்திருக்கும் பேஸ் பேக்கை துடைத்தெடுக்கவும். பின்பு முகம் மற்றும் கழுத்துப் பகுதியை நன்கு கழுவவும். பின்னர் ஜெல் அல் லது ஈரப்பதமான மாய்ஸ்சுரைசர் பயன் படுத்தவும். குளிர் காலத்தில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இவ்வாறு செய்து வரலாம். எண்ணெய் பசை நீங்கி சருமம் பொலிவுடன் இருக்கும்.**








# கிசு கிசு வந்தால் ஜாலிதான்

**- வாணிபோஜன்**

சின்னத்திரையின் நயன்தாரா என பட்டம் பெற்று, சீரியல்களில் கலக்கி, மெருகேறிய அழகோடு தமிழ் சினிமாவில் களமிறங்கி, ரசிகர் பட்டாளங்களை பரவசமாக்கும் பேரழகி நடிகை வாணி போஜன் மனம் திறக்கிறார்....

**சின்னத்திரை டு பெரிய திரை வரவேற்பு**

பெரிய திரை அப்படியே மாறியிருக்கு. எந்த வித்தியாசமும் இல்லை. நிறைய பேருக்கு எளிதாக நடிக்க வாய்ப்பு கிடைக்கிறது. பிரியா பவானிக்கு பின் எனக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்திருக்கு. என்ன மாதிரி இன்னும் நிறைய பேர் வராங்க. சந்தோஷமான விஷயம்.

**தமிழ் பேசும் நடிகைகளுக்கு வாய்ப்புகள்...**

தமிழ் பேசும் நடிகைகள் தங்கள் படங்களுக்கு வேண்டும் என்று நினைப்பவர்கள், கண்டிப்பாக தமிழ் பேசும் நடிகைகளுக்கு வாய்ப்பு தராங்க. அவங்க கதையில் என்ன யோசிக்கிறாங்கனு இயக்குநருக்கு தானே தெரியும்.

**டூயட் பாடல்களுக்கு மட்டும் ஹீரோயினா நடிப்பீங்களா?**

நான் சும்மா வந்து டூயட் பாடிட்டு போகாமல். அந்த படத்தில் எனக்கு நடிக்க வாய்ப்புகள் இருக்கான்னு பார்த்து நடிக்கிறேன். கதை நல்லா இருந்தாலே இயக்குநரிடம் ஏதோ இருக்கு, சொன்ன மாதிரி பண்ணிடுவார்னு நம்பிக்கை வரும். அதையும் பார்ப்பேன்.

**வாணி போஜனின் நோக்கம், குறிக்கோள் என்ன?**

வரிசையா 10 படம் பண்ணனும் அப்படிங்கிறத விட ஒரு படம் பண்ணினாலும் மக்கள் மறக்க கூடாது. அப்படி ஒரு கதை உள்ள படமாக பண்ணனும்னு ஆசை. இப்போ வரை 'ஓ மை கடவுளே' படத்தை மக்கள் சொல்லிட்டே இருக்காங்க. எதிர்காலத்தில், நடிப்பை விட இயக்கம் ரொம்ப ஆர்வம் இருக்கு... ஆனால், நடிக்க வந்த பின்தான் தெரிஞ்சது இயக்குநர் வேலை ரொம்ப பெருசுன்னு. அதனால இப்போதைக்கு நடிக்கிறதோட நிறுத்திக்கொள்வது நல்லதுனு நினைக்கிறேன்.

**நடிக்க வந்தாலே கிசுகிசுக்கள் வருமே**

நான் அதை சீரியஸாக எடுத்துக்க மாட்டேன். கிசுகிசு வந்தால் ஜாலியாதான் எடுத்துப்பேன். முதல் முறை ஏதோ வந்தபோது கஷ்டப் பட்டேன். இப்ப வீட்டில் கூட சொல்லி வைச்சிட்டேன். கிசுகிசு வந்தால் வருத்த படாதிங்கனு.

**உங்களது பிட்னஸ் ரகசியங்கள் என்ன**

5 ஆண்டுகளாக யோகா செய்றேன். வெளியூர் படப்பிடிப்பு போனா செய்ய முடியாது. ஆனால், நேரம் கிடைக்கும்போது யோகாவிற்கு நிறைய நேரம் செலவிடு கிறேன்.



# பணம் சம்பாதித்ததும் சினிமாவை விட்டு விலகி விடுவேன்

**டாப்சி**

தமிழ், இந்தி திரையுலகின் முன்னணி நடிகையாக வலம்வரும் நடிகை டாப்சி தேவையான பணம் சம்பாதித்ததும் சினிமாவை விட்டு விலகி விடுவேன் என்றுகூறியுள்ளார்.

தமிழில் தனுஷ் ஜோடியாக 'ஆடுகளம்' படத்தில் நடித்து பிரபலமான டாப்சி தொடர்ந்து 'வந்தான் வென்றான்', 'ஆரம்பம்', 'காஞ்சனா 2', 'வை ராஜா வை' உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கிறார். இந்தியிலும் முன்னணி நடிகையாக உயர்ந்துள்ளார்.

இந்நிலையில், டாப்சி அளித்துள்ள பேட்டியில், ''எனக்கு வாழ்நாள் முழுவதும் சினிமாவில் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. தேவையான பணம் சம்பாதித்து விட்டதும் இனி ஓய்வு எடுத்து விடலாம் என்று எப்போது தோன்றுகிறதோ அப்போது சினிமாவை விட்டு வெளியேறி விடுவேன். என் எண்ணங்கள் இப்போதும் நடுத்தர மக்கள் வாழ்க்கை முறையிலேயே நின்றுவிட்டது. ஆடம்பர வாழ்க்கை எனக்கு சுத்தமாக பிடிக்காது.

இப்போதும் கூட ஒரு பொருள் வாங்க வேண்டும் என்றால் ஒன்றுக்கு பத்து முறை யோசிப்பேன். பேரம் பேசுவது என்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அடிக்கடி செல்போன்களை புதிது புதிதாக வாங்குவது. கார்களை புதிதுபுதிதாக மாற்றுவது எனக்கு பழக்கம் இல்லை. நான் முதல் முறையாக சம்பாதித்து வாங்கிய கார் இப்போதும்கூட என்னிடமே இருக்கிறது'' - என்றார்.




# ஆதி-ஹன்சிகா நடிக்கும் 'பாட்னர்'

நடிகர் ஆதி மற்றும் ஹன்சிகா இணைந்து நடிக்கும் 'பாட்னர்' படத்தின் பெர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது.

நடிகர் ஆதி தற்போது அறிமுக இயக்குநர் மனோ தாமோதரன் இயக்கத்தில் நடித்து வருகிறார். இந்த திரைப்படத்தில் நடிகை ஹன்சிகா முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும் ஆதிக்கு ஜோடியாக 'குப்பத்து ராஜா' திரைப்படத்தில் நடித்த பாலக் லல்வானி நடிக்கிறார்.

இந்த படத்திற்கு 'பாட்னர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இந்த பெர்ஸ்ட்லுக் போஸ்டரை நடிகர் ஆர்யா தன்னுடைய சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டார். இந்த படத்தில் நடிகர் பாண்டியராஜன், யோகி பாபு, ரோபோ சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.


இந்த திரைப்படத்தில் ஆதி, ஹன்சிகா, யோகி பாபு ஆகியோர் கடத்தல்காரர்களாக நடிக்கின்றனர். இந்தப் படத்தை ராயல் பர்சுனா கிரியேசன்ஸ் தயாரிக்கிறது. மேலும் படத்திற்கு ஷபீர் அகமது ஒளிப்பதிவு செய்கிறார். சந்தோஷ் தயாநிதி இசையமைக்கிறார். பிரதீப் ராகவ் படத்தொகுப்பு செய்கிறார்.

# காதலர் பிறந்தநாளை கொண்டாடிய ஸ்ருதிஹாசன்

கடந்த வியாழக்கிழமை ஸ்ருதிஹாசனின் காதலர் சாந்தனுவுக்கு பிறந்தநாள். அன்றைய தினம் காதலர் சாந்தனுவுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில், ''இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். எனது காதலே, இவ்வுலகம் உனது அற்புதமான ஆற்றலை சந்திக்க பாக்கியம் பெற்றுள்ளது. உன்னை அறிந்துகொள்வதற்கு நான் தினமும் நன்றியுடையவளாக இருக்கிறேன். ஏனெனில் உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்' என்று பதிவிட்டுள்ளார் ஸ்ருதி. அத்தோடு காதலருடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் வெளியிட்டிருக்கிறார்.

மேலும் காதலருடன் பிறந்தநாள் கொண்டாடிய வீடியோ ஒன்றும் வைரலாகி உள்ளது. அதில் காதலருக்கு பிறந்தநாள் நாள் கேக் ஊட்டுகிறார் ஸ்ருதி. பதிலுக்கு சாந்தனு, ஸ்ருதிக்கு லிப் கிஸ் கொடுத்துள்ளார்.





# வில் ஸ்மித் போலவே நானும் அறைந்திருப்பேன்

**கங்கனா ரணாவத்**

ஒஸ்கர் விருது விழாவில் கிறிஸ் ராக்கை வில் ஸ்மித் தாக்கியது சரியா என்கிற கேள்விக்கு நானும் அதைதான் செய்திருப்பேன் என்கிறார் கங்கனா ரணாவத்.

வில் ஸ்மித், கிறிஸ் ராக்கை ஒஸ்கர் விழா மேடையில் அறைந்தது பரவலான பேசுபொருளானது. அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் குரல்கள் உலகெங்கிருந்தும் எழுந்த நிலையில், பொலிவூட் நாயகி கங்கனா ரணாவத், வில் ஸ்மித்துக்கு ஆதரவாக தன்னுடைய கருத்தைப் பதிவுசெய்திருக் கிறார். "ஏதோவொரு முட்டாள் என்னுடைய அம்மாவின் அல்லது சகோதரியின் நோய்க் குறைபாட்டை பல முட்டாள்கள் சிரிப்பதற்காக கேலி செய்தால் நானும் வில் ஸ்மித்தைப் போலவே அறைந்திருப்பேன்.... என்னுடைய லொக் அப் ஷோவுக்கு அவர் வருவார் என நம்புகிறேன்" என்று கமென்ட் செய்து வில் ஸ்மித் கிரிஸ்ஸைத் தாக்கும் படத்தைப் பகிர்ந்திருக்கிறார், கங்கனா.



# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆலியாபட்

இந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக வலம்வரும் ஆலியா பட் மீது எழுந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

ராஜமௌலி இயக்கத்தில் நடிகர் ராம்சரண், ஜூனியர் என்.டி.ஆர், ஆலியா பட் உள்ளிட் பலர் நடித்து வெளியான படம் ஆர்.ஆர்.ஆர். இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட 5 மொழிகளில் கடந்த 25ஆம் திகதி வெளியானது. விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்ற இப்படத்தை ரசிகர்கள் கொண்டாடினர்.

இதில் ராம்சரணுக்கு ஜோடியாக சீதா என்கிற கதாபாத்திரத்தில் ஆலியா பட் நடித்திருந்தார். ஆலியா பட்டின் கதாபாத்திரம் பெரும் அளவிற்கு பேசப்படும் என ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர், ஆனால், ஆர்.ஆர்.ஆர். படத்தில் ஆலியா பட்டுடைய கதாபாத்திரம் சில இடங்களில் மட்டுமே இடம்பெற்றது. இதனால் அதிருப்தியடைந்த ஆலியா பட், தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் ஆர்.ஆர்.ஆர். படம் தொடர்பான பகிர்ந்திருந்த அனைத்து பதிவுகளையும் நீக்கிவிட்டதாகவும், இயக்குநர் ராஜமௌலியை பின்தொடர்பவர்கள் பட்டியலிலிருந்து அவர் நீக்கிவிட்டதாகவும் சமூக வலைத்தளத்தில் பேசப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து நடிகை ஆலியா பட் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு விளக்கமளித்துள்ளார். அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டிருப்பது, ஆர்.ஆர்.ஆர். படக்குழு மீதுள்ள அதிருப்தியால், அப்படம் தொடர்பான பதிவுகளை, நான் எனது சமூக வலைத்தளப் பக்கத்திலிருந்து நீக்கிவிட்டதாக தகவல்கள் பரவியதை நான் அறிந்தேன். தற்செயலாக நடந்த இந்த விடயத்தை வைத்து, வீண் வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்று நான் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். நான் வழக்கமாக என்னுடைய முந்தைய பதிவுகளை மாற்றியமைப்பது இயல்பான ஒன்று.

ஆர்.ஆர்.ஆர். போன்ற பிரம்மாண்ட படத்தில், நானும் ஓர் அங்கமாக இருக்கிறேன் என்பதில் பெருமை கொள்கிறேன். சீதா கதாபாத்திரத்தில் நான் விரும்பி நடித்தேன். ராஜமௌலி சார் இயக்கத்தில் நடித்ததை நேசிக்கிறேன். ஜூனியர் என்.டி.ஆர். மற்றும் ராம்சரண் ஆகியோருடனும் இணைந்து பணியாற்றியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த விஷயம் குறித்து நான் விளக்கம் கொடுப்பதற்கு காரணம், ராஜமௌலியும் அவரது குழுவினரும், இந்த ஓர் அழகான திரைப்படத்தை உயிர்ப்பிக்க, பல ஆண்டுகளாக கடுமையாக உழைத்துள்ளனர். அதனால் இப்படத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் வரும் தவறான தகவல்கள் அனைத்தையும் நான் மறுக்கிறேன் என்று பதிவிட்டு அனைத்து வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7